Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C



## தாயும் மகளும் குத்திக் கொலை

கொழும்பு, மே 30

அநுராதபுரம், அம்பேபுர பகுதியில் தாயும் அவரது மகளும் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்; இதன் போது தந்தை படுகாய மடைந்துள்ளார்.

காதல் குழப்பம் காரண மாகவே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது என பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 62 வயதான தந்தை ஆபத் தான நிலையில் அநுராத புரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டுள்ளார்.

கூரிய ஆயுதத்தினால் குத்தியே தாயும் மகளும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கள் 62 வயதான தாய் மற் றும் 23 வயதுடைய மகள் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

இதேவேளை, இந்தச் சம் பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதுதொடர்பான விசார ணையை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-சி)

# 'றோ' அதிகாரி நேற்று யாழில் ரகசியப் பேச்சு

## பலாலி உட்பட பல இடங்களுக்கும் அவர் நேரில் பயணம்




யாழ்ப்பாணம்,மே 30

இந்திய புலனாய்வு அமைப் பான 'றோ'வின் உயரதி காரி ஒருவர் நேற்று யாழ். மாவட்ட படைத் தளபதியை பலாலியில் சந்தித்து ரக சியப்பேச்சு நடத்தியுள்ளார்.

'றோ'வின் உயர்அதிகாரி எல்.ஐ.என்.ஜி.லங்கா தலை மையிலான 4 பேர் கொண்ட குழுவினர் யாழ். குடாநாட் டுக்கு நேற்றுப் புதன் கிழமை இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். இவர்கள் யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதியுதவியு டன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங் களை நேரில் சென்று பார் வையிட்டுள்ளனர்.

அத்துடன் இவர்கள் யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்கவை பலா லியில் சந்தித்து ரகசியப் பேச்சு நடத்தியுள்ளனர். எனினும் பேச்சின் போது ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து எதுவும் தெரியவர வில்லை. யாழ். மாவட்டத் தளபதியை 'றோ' அதிகாரி சந்தித்துப் பேசினார் என் பதை இராணுவ வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. அத்துடன் பலாலியில் நடைபெற்ற விசேட வைபவம் ஒன்றிலும் இந்தக் குழுவினர் கலந்து கொண்டனரெனத்தெரியவந்தது.

1987 ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் உயிரிழந்த இந்தியப் படையினர் நினை வாக பலாலி விமான நிலை யத் தளத்தினுள் அமைக் கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கும் இவர்கள் சென்று அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான குழுவினர் சீனா சென்றுள்ள நிலையில், இந்தியப் புல னாய்வாளர் யாழ்ப்பாணத் துக்கு திடீர் பயணத்தை மேற் கொண்டு நிலைமைகளை அவதானித்துள்ளனர். (த-5)

### உலகம்



பக். 06

சிரிய அரசுக்கு ஆயுதம் வழங்குகிறது ரஷ்யா

### இந்தியா



பக். 07

ராஜிவ் கொலை வழக்கில் மறு விசாரணை ' ஜூன் 5 வரை காலக் கெடு

### விளையாட்டு



பக். 22

டோனிக்கு 'வாய்ப் பூட்டு'

## கார் மீது பொலிஸ் சூடு இருவர் காயம்

வவுனியா,மே 30

பொலிஸ் காவலரணில் நிறுத்தாமல் சென்ற கார் மீது பொலிஸால் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 24

## காற்றாடிப் படகில் மன்னாருக்கு வந்தனர் 4 சுவிஸ் நாட்டவர்கள்

### இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து



மன்னார், மே 30

இந்தியாவிலிருந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 4 பேர் 'கைட் போட்' என அழைக்கப்படும் காற்றாடிப் படகைப் பயன்படுத்தி கடல் மார்க்கமாக முதல் முறை யாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தலை மன்னார் கடற்பரப்பை வந்தடைந்துள்ளனர் எனக்

தொடர்ச்சி: பக்கம் 24

## வடக்குக்குப் பயணிக்க அரசிடம் அனுமதி கேட்டார் நவிப்பிள்ளை

கொழும்பு, மே 30

ஓகஸ்ட் 25 ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை இலங் கைக்கான உத்தியோக பூர்வ பயணத்தை மேற் கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வடக்கு மற்றும் வன்னிப் பிரதேசங் களுக்குச் செல்வதற்கான அபிப்பிராயத்தை இலங்கை அரசிடம் தெரிவித்திருப்பதாக அறியமுடிகின்றது.

இதன்படி ஆணையாளர் வடக்கிற்குச் செல்வதற் கான முன்னறிவித்தலை மனித உரிமைகள் ஐ.நா. ஆணையர் அலுவலகம் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசுக்குத் தெரி யப்படுத்தியுள்ளது.

கொழும்பு வரும் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை, முக்கியமான அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பார் எனத் தெரிவிக் கப்படுகிறது. வடமாகாணத்

தொடர்ச்சி: பக்கம் 24

## தென்னிலங்கை மீனவர்கள் சுண்டிக்குளத்தில் அத்துமீறல்

### படையினரின் உதவியுடன் கடலட்டை பிடிப்பதில் மும்மரம்

யாழ்ப்பாணம்,மே 30

வடமராட்சி கிழக்குப் பகுதி யைச் சேர்ந்த மீனவர்கள் தொழில் செய்வதற்கு அனு மதி மறுக்கப்பட்ட சுண்டிக் குளம் கடல் பகுதியில் தென் பகுதியைச் சேர்ந்த மீனவர் கள் இராணுவத்தினரின் அனுமதியுடன் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர் எனக்குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மீன் பிடி முறைகளை பாவித்துத் தென் பகுதி மீனவர்கள் கடல் அட்டை பிடிப்பதால் சிறு தொழிலில் ஈடுபடும் தாம் பெரிதும் பாதிக்கப்படுகின்ற னர் என வடமராட்சி கிழக்கு மீனவர்கள்தெரிவித்துள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதி மீன வர் சங்கத்தினால் தன்னிச் சையாக வழங்கப்பட்ட அனு மதியைக் கொண்டே தென் பகுதி மீனவர்கள் கடலட்டை

தொடர்ச்சி: பக்கம் 24

## ஆஸி. செல்ல முயற்சித்த 52 பேர் கைது

கொழும்பு,மே 30

சட்டவிரோதமாக ஆஸ்தி ரேலியா செல்ல முயன்ற தாகக் கூறப்படும் 52 பேர் சிலாபம், தொடுவாவ கடற் பிரதேசத்தில் நேற்றுப் புதன் கிழமை கைது செய்யப்பட்ட னர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 11 பெண்களும், 20 சிறுவர் களும் உள்ளடங்குகின்றனர். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர் களே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர். (த)

## விளையாட்டு வினையானது குழந்தைக்கு எமனானது ஏணை

வடமராட்சி,மே 30

ஏணையிலிருந்து முகங் குப்புற நிலத்தில் தவறி விழுந்த 3 வயதுப் பெண் குழந்தை உட்காயம் கார ணமாக உயிரிழந்தது.

மன்னார், புதுக்காடு, வெள் ளாங்குளத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவ பாலன் நிதர்சனா (வயது-3) என்ற பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

குழந்தையின் தாயார் சவுதி அரேபியாவில் பணிபுரிந்து வருகிறார். ஒருகாலை இழந்த தந்தையும் நிதர்சனாவும் அவரின் சகோதரனும், தந் தையின் ஒன்றுவிட்ட சகோ தரி வீட்டிலேயே தங்கியி

தொடர்ச்சி: பக்கம் 24

## புத்தர் சிலையை நிறுவுவதற்கு மட்டக்களப்பில் கடும் எதிர்ப்பு

### 'புத்தரை ஆக்கிரமிப்புச் சின்னமாக மாற்றாதே' எனக் கோஷம்




மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பு, பிள்ளையார் அடியில் புத்தர் சிலை நிறுவ முயற்சி மேற்கொள்ளப்படு வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அங்கு திரண்டிருந்த பிர தேசவாசிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின ரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

"அத்துமீறி புத்தர் சிலை வைப்பதற்கு எதிர்ப்பு தெரி விக்கின்றோம்", "பௌத்தர் கள் இல்லாத ஊரில் புத்தர் எதற்கு" "புத்த பகவானை ஆக்கிரமிப்புச் சின்னமாக மாற்றாதே", "மதப்பிரச்சினை உருவாக்கும் புத்தர் சிலை

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் - பருத்தித்துறை முதல் பஸ் 5 மணிக்கு

யாழ்ப்பாணம்,மே 30
யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு அதிகாலை 5 மணிக்கு புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை இ.போ.ச டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸே இந்தச் சேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடி ஊடாக பருத்தித்துறைக்கு 750 இலக்க வழித்தடத்தில் காலை 6 மணிக்கே முதலாவது பஸ் சேவை நடைபெற்று வந்தது.

போதிய பஸ்கள் இன்மையால் அதிகாலை வேளையில் முதலாவது பஸ் சேவையை பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவினால் ஆரம்பிக்க முடியாத நிலையில் திருகோணமலை - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் திருகோணமலை டிப்போ பஸ் யாழ்ப்பாணத்தில் தரித்து நிற்கும் நேரத்தைப் பயன்படுத்தி புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை 5 மணிக்கு பருத்தித்துறை நோக்கி 750 ஆம் இலக்க வழித்தடத்தில் பயணிக்கும் திருகோணமலை டிப்போ பஸ் வண்டி பருத்தித்துறையில் இருந்து காலை 6.30 மணிக்கு கோப்பாய், உரும்பிராய், திருநெல்வேலி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு 764 ஆம் இலக்க வழித்தட சேவையில் ஈடுபடுவதுடன் யாழ்ப்பாணத்துக்குள்ளான உள்ளூர் சேவையை நிறுத்திக் கொள்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு அதிகாலை 5 மணிக்கு இடம்பெறும் பஸ் சேவையினால் வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இரவுப் பயணங்களை மேற்கொண்டு வரும் உள்ளூர் பயணிகள் தமது இருப்பிடங்களை விரைவாகச் சென்றடைய முடியும் என பயணிகள் தெரிவிக்கின்றனர். (த-8)

# தடுப்பில் உள்ள புலிகளின் பெயர்களை வெளியிட தயார்

## ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு,மே 30
தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலிகளின் பெயர் விவரங்களை வெளியிடத் தயார் என ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைப் புலனாய்வுத் துறையினர் இறுதிக் கட்டப் போரின்போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட புலிகள் தொடர்பாக 3ஆயிரத்து 200 முறைப்பாடுகளை அவர்களுடைய உறவினர்களிடம் இருந்து பெற்றுள்ளனர். இதில் 2 ஆயிரத்து 729 முறைப்பாடுகளே முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் ஆரியசிங்க கூறினார்.

முறையாகப் பதிவு செய்யப்பட்டவர்களில் ஆயிரத்து 101 முறைப்பாடுகள் தொடர்பாகத் தாம் இதுவரை விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும், விசாரணை முடிவடைந்து தடுப்புக் காவலிலுள்ள புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் புலிகள் இயக்கத்தின் ஏனைய உறுப்பினர்களின் விவரங்களை வெளியிடத் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-400)

“சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட புலிகள் தொடர்பாக 3ஆயிரத்து 200 முறைப்பாடுகளை அவர்களுடைய உறவினர்களிடம் இருந்து பெற்றுள்ளனர்.



# ஆலங்குளாய் முருகனுக்கு 8 பரப்புக் காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே 30
சண்டிலிப்பாய், ஆலங்குளாய் முருகன் கோயிலுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணர் ஆனந்த கிருஷ்ணர் என்பவரால் காலஞ்சென்ற அவரது மனைவி சிவகெங்கையின் ஞாபகார்த்தமாக 8 பரப்புக் காணி நன்கொடையாக அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

8 பரப்புக் கொண்ட இந்தக் காணியில் திருமணமண்டபம் அமைக்கப்படவுள்ளது.

கோயிலின் வருடாந்த மகோற்சவ தினத்தில் வைத்து அந்தப் பகுதி கிராம சேவையாளர் நா.நித்தியானந்தனால் ஆலய நிர்வாகத்திடம் மேற்படி நன்கொடை உறுதி வழங்கப்பட்டுள்ளது. (ங-5)

# குற்றம் நிரூபிக்கப்படாமையால் கொலைச் சந்தேகநபர்கள் விடுதலை

யாழ்ப்பாணம்,மே 30
நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றம் நிரூபிக்கப்படாதமையால், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர்கள் 3 பேர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு தீர்ப்புக்காக யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாரந்தனை மத்தி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அந்தோனி ஞானசீலன் (வயது -40) என்பவர் அவரது வீட்டுக்கு அண்மையிலுள்ள குளம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அவரது சடலம் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், மொட்டையான ஆயுதம் ஒன்றினால் அடித்துக் கொலை செய்யப்பட்டமை வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் போது தெரிய வந்தது.

ஞானசீலனை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த சகாயராஜா சுதர்சன், ஜேசுதாசன் தேவறொபின்சன், இராஜரட்ணம் கிறிஸ்ரி ஆகிய 3 பேரும் கைது செய்யப்பட்டனர். குறித்த மொட்டையான ஆயுதம் பொலிஸாரால் கைப்பற்றப்படவில்லை.

சந்தேகநபர்கள் மீதான கொலைக் குற்ற வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது.

சந்தேகநபர்கள் 3 பேர் தொடர்பில் சாட்சிகளும் சாட்சியமளித்திருந்தனர். விசாரணையின் பின்னர் மேல் நீதிமன்ற ஆணையாளர் நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

3 சந்தேகநபர்களும் ஞானசீலனைக் கொலை செய்திருக்கக் கூடும் என்றே நிரூபிக்கப்பட்டுள்ளது. சந்தேகங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவரைக் குற்றவாளியாகக் காண முடியாது. சூழ்நிலைச் சான்றுகள் அனைத்தும் எதிரிகளை நோக்கியுள்ளன என்று தெளிவான முடிவுக்குவர முடிகின்றது.

எனினும் 3 பேர் மீதான குற்றச்சாட்டுக்களும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே இவர்கள் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுகின்றனர் என்று மேல்நீதிமன்ற ஆணையாளர் தனது தீர்ப்பில் தெரிவித்தார். (த-4)

# குட்டைப் பாவாடைகளுடன் நயினை அம்மனிடம் வராதீர்

## ஆலய அறங்காவல் சபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே 30
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் எமது பாரம்பரிய பண்பாடுகளைப் பேணும் வகையில் உடைகளை அணிந்து வருமாறும், பெண்கள் குட்டைப் பாவாடை அணிந்து வருவதையும், தலைவிரி கோலமாக வருவதையும் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ப.க.பரமலிங்கம் கோரியுள்ளார்.

இந்த முறை பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆலயத்துக்கு வருகை தருவார்கள் என்பதால் 10ஆம் திருவிழா முதல் தீர்த்த உற்சவம் வரை இ.போ.ச. பஸ் சேவை 15 நிமிடத்துக்கு ஒரு தடவை இடம்பெறும் எனவும், தனியார் பஸ் 1/2 மணி நேரத்துக்கு ஒரு தடவை இடம்பெறும் எனவும் பஸ் சேவைகளுக்கு அமைவாகப் படகுச் சேவைகளும் இடம்பெறும் எனவும் பரமலிங்கம் மேலும் தெரிவித்தார். (த-7)

# யாழ். அரச உயரதிகாரிகள் 5 நாள் அம்பாந்தோட்டையில்

யாழ்ப்பாணம்,மே 30
யாழ். மாவட்ட அரச நிர்வாக சேவையின் உயர் அதிகாரிகள் அனைவரும் 5 நாள் பயணமாக அம்பாந்தோட்டைக்குச் சென்றுள்ளனர். இதன் காரணமாக அரச அலுவலகங்களில் மக்கள் தங்களுக்குரிய சேவைகளைப் பெறுவதில் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

அரச நிர்வாக சேவையின் உயர் அதிகாரிகளான மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனச் சகலரும் அம்பாந்தோட்டைக்கு நேற்றுப் பிற்பகல் புறப்பட்டனர்.

6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த 5 நாள் பயணத் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்களைப் பார்வையிடுவதற்கும், சில கருத்தரங்குகளில் பங்கெடுப்பதற்காகவுமே நேற்றையதினம் யாழ். மாவட்ட அரச அதிகாரிகள் பயணமாகியுள்ளனர்.

இதனால் திணைக்களங்களுக்குச் செல்லும் பொதுமக்கள் தமது சேவைகளைப் பெறுவதில் நேற்று புதன்கிழமை சிரமங்களை எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# விபத்துக்குள்ளாகி வீதியில் கிடந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம்,மே 30
விபத்துக்குள்ளாகி வீதியில் மயங்கிக் கிடந்தவர் ரோந்து சென்ற பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

யாழ்.நகரில் காங்கேசன்துறை வீதியிலேயே சிவத்தொண்டர் நிலையத்தை அண்மித்து இவர் மயக்க நிலையில் கிடந்துள்ளார்.

இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த இராசேந்திரன் திருக்கரன் (வயது-37) என்பவரே இவ்வாறு மயக்க நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழந்தார்.

யாழ். நகரில் வானொலி திருத்துநராக உள்ள இவர், வேலை முடிந்து தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் கருதுகின்றனர்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்தோ அல்லது கவனயீனமாகப் பயணித்ததாலேயோ விபத்து இடம்பெற்றிருக்கக் கூடும் என்றும் பொலிஸார் கருதுகின்றனர். அவரது கைத்தொலைபேசி வீதியில் கிடந்தது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ரோந்து சென்ற பொலிஸார் வீதியில் குறித்த நபர் மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டனர். அவருக்கு அருகிலிருந்த கைத்தொலைபேசியை எடுத்த பொலிஸார் அதில் இருந்த இலக்கம் ஒன்றுக்குத் தொடர்பை ஏற்படுத்திச் சம்பவத்தைக் கூறியுள்ளனர். உறவினர்கள் உடனே சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

“நேற்று அதிகாலை 1.30 மணியளவில் ரோந்து சென்ற பொலிஸார் வீதியில் குறித்த நபர் மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டனர்.

மயங்கிய நிலையில் கிடந்த அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சுமார் 10 நிமிடங்களில் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4)

# சாவகச்சேரியில் கள்ளநோட்டு

தென்மராட்சி,மே 30
சாவகச்சேரி சந்தையில் கள்ள நோட்டு கண்டுபிடிக்கப்பட்டதால் வியாபாரிகளும் பொது மக்களும் அவதானமாக இருக்குமாறு நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை சந்தையில் விற்பனைக்கு பலாப்பழம் கொண்டு வந்த ஒருவரிடம் கொடுக்கப்பட்ட ரூபா நோட்டில் சந்தேகம் கொண்ட அவர் அதனை அருகில் உள்ளவர்களிடம் காட்டினார். இதன்போது அது கள்ளநோட்டு என்று உறுதியானது. இதனையடுத்து அதைக் கொடுத்தவர் ரூபா நோட்டினைப் மீளப் பெற்றுக் கொண்டு சென்றுள்ளார்.

இது தொடர்பாக நகரசபைத் தலைவருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சந்தைக்கு பொருள்கள் கொண்டு வருவோரும் வியாபாரிகளும் அவதானமாக இருக்குமாறு நகரசபைத் தலைவர் அறிவித்துள்ளார். (த-9)

# சிறுமி மீது வன்புணர்வு சந்தேகநபர் விளக்கமறியலில்

வவுனியா,மே 30
வவுனியா சாந்தசோலையில் 13 வயதுச் சிறுமி வன்புணர்வு செய்த குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபரை வவுனியா நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

தனது சகோதரியின் தங்கையான 13 வயதுச் சிறுமியை, குறித்த சிறுமியின் தாய் வேலைக்குச் சென்ற சமயம் சந்தேகநபர் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சிறுமி தொடர்பான மருத்துவ பரிசோதனை அறிக்கைக்காகவும், மேலதிக விசாரணைகளின் பொருட்டும் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மகளிர் மீதான வன்செயல்களை ஒடுக்க நீதிமன்றத் தீர்ப்பு தூண்டு கோலாகட்டும்

எமது வாழ்க்கையை, எங்கள் முன்னோர் கட்டி வளர்த்த வாழ்வியல் ஒழுக்கங்களை பாரம்பரியங்களை அடித்து உடைக்கும், அறுத்து வீழ்த்தும், கெடுதி தரும் கொடுமைகளைத் தட்டிக் கேட்க எவருமில்லை. கனதியுடன் சுட்டிக்காட்ட எந்த நிறுவனமும் இல்லை என்ற பெரும் போக்கு நிலை தகர்த்து எறியப்பட்டுள்ளது.

சமூக நலனில், வருங்காலச் சந்ததியினரான சிறுவர் நலனில், அவர்களின் மேம்பாட்டில் அக்கறை உள்ள எல்லோரையும் மனம் கிறங்க வைத்துள்ளது யாழ். மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பு.

சிறுவர்களின் எதிர்காலம், சமூக ஒழுக்கம் குறித்த சமூக மேம்பாட்டை நேசிக்கும் பல லட்சக்கணக்கான எமது மக்கள், பெற்றோர்கள் அதனை மனதார, உளம் நிறைந்து வரவேற்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். அண்மைக் காலத்தில் மக்களின், பெற்றோரின் உள்ளங்களை உணர்வுபூர்வமாகக் கவர்ந்த தீர்ப்பு அது.

பதினேழு வருடங்களுக்கு முன்னர் எங்கள் மண்ணின் ஒழுக்க நெறியை கறுப்பு மை பூசி அழித்த ஒருவருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு, இப்போதைய சமூகப் பிறழ்வுகளில் ஈடுபடுவோருக்கு ஒரு படிப்பினையாக அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசன் அன்று அறுப்பான்; தெய்வம் நின்று அறுக்கும் என்ற எமது தமிழ் முதுமொழிக்கும் யாழ். மேல் நீதிமன்றத் தீர்ப்பு உச்சமான உதாரணமாக எழுந்து நிற்கிறது.

ஏழு வருடங்களுக்கு முந்திய நிலையுடன், இப்போது எமது மண்ணில் நடைபெறும் சமூக விரோதச் செயல்களையும் ஒழுக்கப் பிறழ்வுகளையும் ஒப்பிட்டால், நிலைமை எங்கே செல்லுமோ, கட்டுக்கடங்காமல் உயருமோ, என்ற ஏக்கமும் கவலையும் சமூக நலனில் அக்கறை உள்ள ஒவ்வொருவர் உள்ளங்களையும் உருக்கும்.

சிறுமிகள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள், பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள், பதின்மூன்று வயதுச் சிறுமியை வன்புணர்வு செய்த சந்தேகத்தின் பேரில் உறவினர் கைது போன்ற செய்திகள் மற்றும் தகவல்கள் இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டன. கேட்கவே நாராசமாகிவிட்ட இந்த நிலைமை நீடித்தால், எம்மை நாமே பாழ் கிணற்றில் வீழ்த்தும் நிலைமை உருவாகும்.

எம்மை வெவ்வேறு வழிகளில் துறைகளில் தட்டி வீழ்த்தி, மண் கவ்வ வைப்பதற்கு தங்களுக்கு உள்ள பலத்தைப் பயன்படுத்தக் காத்திருப் போருக்கு வாய்ப்பும் வசதியும் நல்கி உதவும் சோணகிரிகளாவோம். இது மறந்துவிடக் கூடிய ஒன்றுமல்ல.

எங்கள் மத்தியில் சமூகப் பொறுப்புணர்வு கேள்விக்குறியாகி வருவதையும், சாய்ந்தால் சாய்கிற பக்கமே சாயும் போக்கையும் நிரந்தரமாக்குவதில் பங்களிக்கிறோம். அதனை மறந்துவிடக் கூடாது. தெரிந்தும் தெரியாதவர்கள் போன்று அசட்டை செய்யும் தன்மை வளர்வது எல்லா வகைகளிலும் எமது சமூகத்தின் பின்னடைவுக்கே வழி செய்யும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், சிறுமிகள் மீதான துன்புறுத் தல்களும் உலகளாவிய ரீதியில் உயர்ந்து வருவதால் எமது பிரதேசப் பெண்களும் அவற்றுக்கு இரையாகி வருகிறார்கள் என்று குதர்க்கத் தனமான முடிவுக்கு வந்துவிடலாகாது.

மறுபுறத்தில், நவீன விஞ்ஞானத்துறையும் அதனூடு தொழில்நுட்பத் துறையும், அவற்றின் சாதனங்களும், வளர்ச்சியும் முன்னேற்றமும் மனித வாழ்க்கைக்கு ஒவ்வாத கீழ்த்தரமான செயற்பாடுகளுக்குக் காரணமாகவும் தூண்டுதலாகவும் உள்ளன என்பதனைப் புறம் ஒதுக்கிவிட இயலாது.

எவ்வாறாயினும், அவற்றால் பெண்கள், சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு ஆளாவதனை எந்த வகையிலும் நியாயப்படுத்த இயலாது. மேலும் சிறுவர்களுக்கு எதிரான வன்செயல்கள் தடுக்கப்படக் கூடியவை, தவிர்க்கப்படக் கூடியவை என்று உலகளாவிய மட்டத்தில் ஆய்வுகள் மூலம் புள்ளி விவரங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

மேலும்–

பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் குறித்து ஆய்வுகளை நடத்தி அவற்றைத் தடுக்க வல்ல வழிமுறைகளைக் கண்டறிந்து பரிந்துரைகளை முன்வைக்குமாறு, ஐ.நாவின் அங்கத்துவ நாடுகளைப் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

அது ஒருபுறமிருக்க–

இலங்கையில் இப்போது பெண்கள் சிறுவர்களுக்கென தனியான அமைச்சு ஒன்று செயற்படுகிறது. அந்த அமைச்சின் கீழ் மாவட்டங்கள் தோறும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் பணி புரிகின்றனர்.

அதற்கும் மேலதிகமாக, பெண்கள் சமவுரிமை, பெண்கள் விடுதலை சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுக்கு உயிரூட்டும் வகையில் வெளிநாட்டு உதவிகளைப் (Support)பெற்றுக் கொடுப்பதற்கென அமைப்புக்களும் இயங்குகின்றன.

ஆயினும், இந்நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்செயல்களைத் தடுப்பதில் குறிப்பிடக் கூடிய அளவுக்கு முன்னேற்றம் எதுவும் இல்லை என்றே கருத முடியும்; கொள்ள வேண்டும்.

மனம் உண்டானால் இடமுண்டு. உரிய அக்கறையுடன், பெண்கள் நலன் நாடுவோரையும், சமூகத்தின் பல்வேறு அங்கங்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுவது அவசியம்.

நேற்று முன்தினம், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய சரித்திரப் பிரசித்தி பெறவல்ல தீர்ப்பை மனதில் இருத்தி, உரிய செயல் வடிவங்களை வகுத்துப் பணியாற்றினால் பலன் கிடைக்கும் என நம்பலாம். பெண்கள் நலன்களையும் உரிமைகளையும் நாடி உழைப்பதற்கு ஊக்கமருந்தாக, நீதிமன்றத் தீர்ப்பைக் கொள்ளலாமே.

எங்கள் சமூகத்துக்கு எதிராக, எங்கள் தாய் குலத்துக்கு எதிரான வன்செயலாளர்களை ஒடுக்க அத்தீர்ப்புத் தூண்டு கோலாகட்டும். நன்றே செய்வோம் அதனை இன்றே செய்வோம் என்ற வீச்சுடன் முனையுங்கள்; ஆக்கபூர்வமான பெறுபேறுகள், பலன்கள் கிடைக்கட்டும் என்ற எதிர்பார்ப்புடனும் தளரா நம்பிக்கையுடனும்.

# தோட்டக் காணிக்குள் நுழைய தொல்பொருள் அமைச்சு தடை

### மன்னார் கட்கிடந்த குளம் கிராமத்தில்

மன்னார்,மே 30

மன்னார் நானாட்டான் கட்கிடந்த குளம் கிராமத்தில் அமைந்துள்ள 6 ஏக்கர் தோட்டக் காணியினுள் அதன் உரிமையாளர்கள் உள் நுழைய தொல்பொருள் ஆராய்சி அமைச்சு தற்போது அனுமதி மறுத்துள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

அடர்ந்த காடாகக் காணப்பட்ட குறித்த காணி கடந்த 33 வருடங்களுக்கு முன் துப்புரவு செய்யப்பட்டு குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்களினால் தோட்டச் செய்கை மேற்கொள்ளப் பட்டு வந்தது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளர்கள் குறித்த காடு களைத் துப்புரவு செய்து தோட்டச் செய்கை மேற்கொண்டு வந்தனர். வாழை, தென்னை, பப்பாசி உட்பட பல்வேறு கன்றுகள் நட்டு தோட்டச் செய்கையை மேற்கொண்டு வந்தனர்.

குறித்த 6 ஏக்கர் காணியில் பௌத்த விகாரைக்கு ¾ ஏக்கர் காணி உள்ளது என முன்னர் கூறப்பட்டதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

அன்றைய காலத்தில் உதவி அரசாங்க அதிபரினால் 4 பேருக்கு அங்கு அனு மதிப்பத்திரமும் வழங்கப்பட்டிருந்தது.

இந்த அனுமதிப்பத்திரத்தை வைத்து தற்போது சுமார் 33 வருடங்களுக்கு மேலாக அவர்கள் குறித்த காணியில் தோட்டச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்த நிலையில் தொல்பொருள் ஆராய்ச்சி அமைச்சில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் அந்த மக்களோடு பேசிய பின்னர் குறித்த காணியில் புதிதாக எதனையும் நடக் கூடாது எனக் கூறி அறிவித்தல் பலகை நட்டுச் சென்றுள்ளனர்.

தற்போது 11 பேர் குறித்த காணியில் தோட்டச் செய்கையினை மேற் கொண்டு வருகின்றனர். குறித்த காணி முழுவதையும் தற்போது விட்டு வெளியேறுமாறு தொடர்ந்தும் அவர்கள் வற்புறுத்தப்பட்டு வருகின் றனர். குறித்த காணியினுள் தொல் பொருள்கள் உள்ளதாகக் கூறி தோட் டச் செய்கையாளர்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுறது.

குறித்த 6 ஏக்கர் காணியில் பௌத்த விகாரைக்கு முக்கால் ஏக்கர் காணி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தக் காணியில் பயிர் செய்யத் தாம் அனுமதிக்கப்படாவிட்டால் தமது வாழ்வாதாரம் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும் என்று அங்கு விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கூறுகின்றனர். (த-12)

## 2014 இல் பால் உற்பத்தியை வடக்கில் அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,மே 30

வடமாகாணத்தில் 2014 ஆம் ஆண்டு 41.25 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாய, கால்நடை, காணி, நீர்ப் பாசன மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு அமைச்சின் செயலாளர் உதுமாலெப்பே முகமட் ஹால்டின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

> கடந்த வருடம் வடமாகாணத்தில் 24.3 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் அடுத்த வருடம் 41.25 மில்லியன் லீற்றர் பால் உற்பத்திக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வடமாகாணத்தில் 24.3 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் அடுத்த வருடம் 41.25 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யத் திட்ட மிடப்பட்டுள்ளது. தற்போது யாழ். மாவட்டத்தில் ஒரு நாளைக்கு 20 ஆயிரம் லீற்றர் வரையான பால் விற்பனை செய்யப்படுகின்றது. இத னடிப்படையில் விற்பனை செய் யப்படும் பாலை முன்பள்ளிகள், பால் விற்பனை நிலையங்கள், பால் உற்பத் திப் பொருள்கள் தயார் செய்யும் தொழிற் சாலைகள், நுகர்வோர் என பாலைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

தற்போது ஒரு லீற்றர் பால் 50 ரூபா வுக்கு விற்பனை செய்யப்படுகின் றது. இதனை விட உற்பத்தி செய்யப் படுகின்ற பால் வெளிமாவட்டங்களுக் கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் பால் உற்பத்தி போதுமானதாகவுள்ளது. எனினும் அடுத்த வருடம் பால் உற்பத்தியாளர் களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளாக உற்பத்தியை இரு மடங்காக அதிக ரிக்கச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. - என்றார். (வ-14)

## சுற்றாடல் வாரம் ஜூன் 5 இல் ஆரம்பம்

வடமராட்சி,மே 30

எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 12 ஆம் திகதி புதன் கிழமை வரை சுற்றாடல் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெறும் சுற்றாடல் வாரத்துக்கு உள் ளூராட்சி மன்றங்களின் முழுமை யான ஒத்துழைப்பும் பெறவுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தில் முதல்நாள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய ஆறு, ஏரி மற்றும் குளங்கள் சுத்தம் செய்யும் தினமாகவும் , இரண்டாம் நாள் உள்ளூராட்சி மன்ற அலுவலக வளாகங்களில் சிரமதானம் மேற் கொண்டு குப்பைகளை அகற்றுதல் தினமாகவும், மூன்றாம் நாள் உள்ளூராட்சி மன்றத்துக்குட்பட்ட பிரதேசங்களில் சிரமதானம் மேற் கொள்ளும் தினமாகவும், நான்காம் நாள் சமயத்தலங்களில் சிரமதான நாளாகவும், ஐந்தாம் நாள் மாநகர சபை செயற்றிட்ட நாளாகவும், ஆறாம் நாள் நகர அலங்கரிப்பு வேலைத்திட்ட நாளாகவும், ஏழாம் நாள் சூழல் மாசடைதல் தொடர்பில் விழிப்பூட்டல் நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட் டுள்ளன. (த-8)

## தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ்.மறைமாவட்டமும் இணைந்து நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாப் போட் டிகள் எதிர்வரும் ஜூன் 1 ஆம் திகதி வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட் டங்களிலும் ஒரே நேரத்தில் இடம் பெறுகின்றன.

பாடசாலை மாணவரிடையே நடத் தப்படவுள்ள பேச்சு, கவிதை, கட்டு ரைப் போட்டிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன என்றும் யாழ்ப் பாண மாவட்டத்துக்குரிய போட்டிகள் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய போட் டிகள் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும், முல்லைத் தீவு மாவட்டத்துக்குரிய போட்டிகள் ஒட்டுசுட்டான் மகா வித்தியா லயத்திலும், வவுனியா மாவட்டத்துக் குரிய போட்டி கள் இறம் மைக் குளம் மகளிர் தேசி யப் பாடசாலை யிலும்,



மன்னார் மாவட்டத்துக்குரிய போட் டிகள் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலையிலும் இடம் பெறவுள்ளன என்றும் போட்டிச் செயலர் அறிவித்துள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாண வர்களுக்குப் பெறுமதியான பரிசி களும், பதக்கங்களும் எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் யாழ். பல் கலைக் கழகத்திலும், யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கிலும் நடைபெற வுள்ள நூற்றாண்டு நிறைவு விழா வின்போதும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிகாயத்துக்கு இலக்கான தாய் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,மே 30
ஒரு வயதுக் குழந்தையின் தாய் எரிகாயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் அரியாலை, நாவலடியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. அதே யிடத்தைச் சேர்ந்த டான்சன் காயத்திரி (வயது- 19) என்பவரே எரிகாயங்களுக்கு உள்ளானார்.

## மின் தடை

யாழ்ப்பாணம், மே 30
வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்துவதற்காகவும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் இன்று முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை கீழ் குறிப்பிட்ட பிரதேசங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.
இன்று வியாழக்கிழமை செம்மணி, நாவற்குழி, இணுவில், மானிப்பாய் ஆகிய இடங்களிலும் நாளை வெள்ளிக்கிழமை மூளாய், வட்டுக்கோட்டை, பொன்னாலை ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் சனிக்கிழமை மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், விளான், பன்னாலை, காரை நகர், ஊர்காவற்றுறை, தீவகம் முழுவதும் மற்றும் மானிப்பாய், ஈஞ்சை வைரவர் கோயில் ஆகிய இடங்களிலும் -
எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரந்தன், நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, உரும்பிராய், கோண்டாவில், பல்கலைக்கழக மருத்துவபீடம், ஸ்ரான்லி வீதி திருநெல்வேலி, பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி ஆகிய இடங்களிலும் -
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மானிப்பாய், ஈஞ்சை வைரவர் கோயில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (400)

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்தும் நிலைப்பாட்டில் இ.தொ.கா. உறுதி

### ஒழிப்புக்கு துணைபோகோம்; இராஜதுரை எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 30
எந்த நோக்கத்துக்காக அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டதோ அது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், '13' ஒழிப்பு பிரசாரத்துக்கு ஒருபோதும் துணைபோகாது - என்று அக்கட்சியின் உப தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.இராஜதுரை திட்டவட்டமாகக் கூறினார்.
அரசமைப்பின் 13 விவகாரத்தில் இ.தொ.கா. இரட்டை வேடம் போடுகின்றதென்று பரவலாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், 13 தொடர்பில் இ.தொ.காவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
13ஆவது திருத்தச்சட்டமானது பல வருடங்களாக இந்த நாட்டில் இடம்பெற்ற போராட்டத்தின் வெளிப்பாடாகும். 1987இல் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையே இது ஏற்படுத்தப்பட்டது. இதன்மூலம்தான் மாகாணசபைகள் முறைமை உருவானது. இந்த 13 ஆவது திருத்தச்சட்டமானது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு படிதான்.
அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருந்தாலும் இது இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிரப்படவில்லை. எனவே, எந்த நோக்கத்துக்காக இந்தச் சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்டதோ அது முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே '13 பிளஸ்' எனக் கூறியுள்ளார். எனவே, '13 மைனஸ்' குறித்து நாம் பேசவேண்டியதில்லை. சட்டம் ஒன்று மக்களின் நலன் கருதி உருவாக்கப்படுமாயின், அதைப் பின்னர் நீக்குவதென்பது சட்டத்துக்கு முரணான கோட்பாடாகும். அரசியல் போட்டி காரணமாக ஒரு அரசால் கொண்டுவரப்படும் சட்டத்தை மற்றுமொரு அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நீக்குவது முறையல்ல.
அதேவேளை, வடக்கு, கிழக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றாக அன்று ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் அப்படியே இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம் - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜதுரை கூறினார்.

## முதலைக்கு கூச்சம்

### தப்பினார் மீனவர்

யாலகொட களப்பில் முதலையின் வாயில் சிக்கிக்கொண்ட மீனவர் ஒருவர் முதலைக்கு 'கூச்சமூட்டி' அதன் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.
மீன்பிடிப்பதற்காகச் சென்ற 65 வயதான மீனவர் ஒருவரே முதலையின் வாயில் சிக்கிக் கொண்டுள்ளார். அவருடைய கால்களை முதலை கௌவிக்கொண்டது. உடனடியாக கைகளை முதலையின் வயிற்றுக்கு கீழே கொண்டுபோன அவர் முதலையின் வயிற்றில் கிச்சுகிச்சுமூட்டியுள்ளார்.
கூச்சமடைந்த முதலை வாயை திறந்தவுடன் அதன்பிடியிலிருந்து தான் தப்பித்து கொண்டார் எனவும் இந்த முறைமை தொடர்பில் தான் முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தார் எனவும் அந்த மீனவர் தெரிவித்துள்ளார்.

# '13' ஒழிப்புப் பிரேரணை நாடாளுமன்றில் நேற்று

### ஹெல உறுமய சமர்ப்பிப்பு

கொழும்பு, மே 30
அரசமைப்பிலிருந்து 13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குமாறு கோரும் பிரேரணையை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பங்காளியான ஜாதிக ஹெல உறுமய நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.
நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு ஹெல உறுமயவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர் '13'ஐ ஒழிக்கக் கோரும் குறித்த பிரேரணையை நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கையளித்தார்.
ஹெல உறுமயவின் இந்த தனிநபர் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டு, அதை விவாதிப்பதற்கு திகதியொன்றை சபாநாயகர் ஒதுக்குவதற்கு முன்னர் நாடாளுமன்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், மத அமைப்புகள் ஆகியவற்றைச் சந்தித்து இவ்விடயம் சம்பந்தமான ஹெல உறுமய பேச்சு நடத்தவுள்ளது. இந்த விடயத்தை அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த வர்ணகுலசூரிய நேற்று உறுதிப்படுத்தினார்.
பிரேரணை கொண்டுவரப்பட்டதன் நோக்கம், இதை கட்சிகள் ஆதரிக்கவேண்டிய அவசியத்துவம் உட்பட முக்கிய சில விடயங்களை மேற்படி சந்திப்பின்போது அவற்றின் பிரதிநிதிகளுக்கு ஹெல உறுமய தெளிவுபடுத்தவுள்ளது எனத் தெரியவருகின்றது.
அதேவேளை, ஹெல உறுமயவின் இந்த முயற்சி தோல்வியில் முடியும் என எதிர்க்கட்சிகள் கருத்து வெளியிட்டாலும், வெற்றியை நோக்கி நகர்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அக்கட்சி பதிலடி கொடுத்துள்ளது.
குறிப்பாக, அரசமைப்பின் ஓர் அங்கமாக 13ஆவது திருத்தச் சட்டம் இருப்பதால் அதை இவ்வாறான பிரேரணைகள் மூலம் இரத்துச் செய்துவிட முடியாது. அமைச்சரவை அங்கீகாரத்துடன் அரசின்சட்டமூலமொன்றாக வரும் பட்சத்திலேயே பெரும்பான்மை ஆதரவுடன் அதில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்.
தனிநபர் பிரேரணையை கொண்டுவருவதற்கான அதிகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது. இதன் பிரகாரமே ஹெல உறுமய இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. எனவே, இதற்கும் அரசுக்கும் எவ்வித தொடர்புமில்லை என அரச தரப்பு உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

# 2 ஆயிரம் கோடி டொலர் சீனா வழங்குகிறது கடன்



கொழும்பு, மே 30
உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்காக இலங்கைக்கு 2 ஆயிரத்து 200 கோடி டொலர் கடன் வழங்க சீனா இணங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
பீஜிங்கில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர், சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள ஆழமான உறவுகள் குறித்து இந்தியா கவலையடையத் தேவையில்லை என்றும், இது எந்தவொரு நாட்டுக்கும் எதிரானதோ, இதனால் எந்தவொரு நாட்டுக்கும் ஆபத்தோ ஏற்படாது என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.
1.5 மில்லியன் டொலர் செலவில் வடக்கிற்கான அதிவேக நெடுஞ்சாலையை அமைக்க சீனாவும் சிறிலங்காவும் இணங்கியுள்ளன.
பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பான உடன்பாடு ஒன்றும் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.
பாதுகாப்புத் தொடர்பான பயிற்சிகள், விநியோக மற்றும் கடல்சார் பாதுகாப்பு, ஆகியவற்றில் ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இந்த உடன்பாடு வழிசெய்கிறது.
இந்த நகர்வுகள் மூலம், தனது அயல்நாடான இலங்கையில் சீனாவின் தலையீடுகள் விரிவாக்கம் பெறுவது இந்தியாவுக்குப் புதிய குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும் என்று 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேசத்தைப் புறக்கணித்து மாகாண அதிகாரத்தைப் பறிக்குக

### மஹிந்தவுக்கு தேசப்பற்று இயக்கம் மனு

கொழும்பு, மே 30
சர்ச்சைக்குரிய விடயமாக உருவெடுத்துள்ள வடமாகாண சபைத் தேர்தல், 2014 இல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தல், வடக்கு,கிழக்குப் பிரச்சினைகள், சர்வதேச விவகாரங்கள் உட்பட முக்கிய பல விடயங்கள் சம்பந்தமாகத் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஜனாதிபதியிடம் மனு ஒன்றை நேரில் கையளிப்பதற்குத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தீர்மானித்துள்ளது. அவ்வமைப்பின் முக்கிய பிரமுகரொருவர் இந்தத் தகவலை நேற்று உறுதிப்படுத்தினார்.
ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு நேரத்தை ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், சீனா சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் தமக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
சிலவேளை ஜனாதிபதி செயலகத்தால் ஜூன் இரண்டாம் வாரத்துக்குள் நேரம் ஒதுக்கித் தரப்படாவிட்டால் அந்த மகஜரை செயலகத்தினூடாக ஜனாதிபதிக்கு கையளிப்பதற்கும் அவ்வியக்கம் உத்தேசித்துள்ளது.
அதேவேளை, குறித்த மகஜரினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு அரச தலைமையிடமிருந்து சாதகமான பதில் கிட்டாவிட்டால் தீர்க்கமானதொரு முடிவை எடுப்பதற்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் முஸ்தீபு செய்துள்ளது எனத் தெரியவருகின்றது.
வடக்குத் தேர்தல், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஆகிய விடயங்கள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகளால் கடும் அரசியல் நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசுக்கு ஏற்பட்டுள்ள இவ்வேளையில், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் மகஜர் விவகாரமும் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது.
★ வடக்குத் தேர்தலுக்கு முன்னர் 13 இல் உள்ள முக்கிய அதிகாரங்களை விசேட சட்டமூலத்தினூடாகப் பறித்தல்.
★ சர்வதேச கோரிக்கைகளைப் புறக்கணித்தல்.
★ வடக்கு, கிழக்கில் வேலையின்மை, பொருளாதார ரீதியிலான பிரச்சினைகள் நீக்கப்படவேண்டும். இவ்வாறு செய்தால் அரசியல் தீர்வொன்று அவசியமில்லை.
★ 2014 இல் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அரசு செய்யவேண்டிய விடயங்கள் உட்பட முக்கிய சில கோரிக்கைகளே மகஜரில் முன் வைக்கப்பட்டுள்ளன.


## விபத்தில் ஒருவர் சாவு

### எழுவர் படுகாயம்

புத்தளத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 7 பேர் காயமடைந்துள்ளனர்.
புத்தளம், பள்ளம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்குளி பிரதேசத்திலேயே நேற்றுக்காலை இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.
தனியார் ஆடைத் தொழிற்சாலைக்கு தொழிலாளர்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த வானும் மற்றுமொரு தனியார் வானும் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.
ஆடைத்தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்லும் 23 வயதான இளைஞர் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.
காயமடைந்தவர்கள் சிலாபம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
உயிரிழந்தவரின் சடலம் சிலாபம் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரு.ஆதார வைத்தியசாலையில் முதியோருக்கென புதிய விடுதிகள்



வடமராட்சி,மே 30
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் முதியோர்களுக்கு சிகிச்சை வழங்கவென இரு விடுதிகள் நேற்று நண்பகல் 12 மணிக்குத் திறந்துவைக்கப்பட்டன.
வடமாகாண சுகாதாரத் திணைக்களச் செயலாளர் திருமதி ஜுட், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் ஆகியோர் இணைந்து இந்த விடுதிகளைத் திறந்து வைத்தனர்.
முதியோர்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த இரண்டு விடுதிகளிலும் 6ஆம் இலக்க விடுதி ஆண்களுக்கும், 2ஆம் இலக்க விடுதி பெண்களுக்கும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. திறப்பு விழா நடைபெற்ற நேற்றைய தினமே விருந்தினர்களால் முதலாவது முதிய நோயாளி ஒருவர் சம்பிரதாயபூர்வமாக விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.
முதியோர் விடுதியைத் திறந்து வைத்த விருந்தினர்கள் பிரசவ விடுதிக்கும் சென்று பார்வையிட்டனர். அங்கு நிலவும் குறைகள், தேவைகள் குறித்து மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சியாமளனிடம் கேட்டறிந்து கொண்டனர். பின்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய அதிகாரிகளுடனான கலந்துரையாடலிலும் விருந்தினர்கள் பங்கு பற்றினர். (ங-8)

# சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் புத்தூரில்

## சுதேச மருத்துவத் திணைக்கள ஏற்பாட்டில்

அச்சுவேலி, மே 30
சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் புத்தூர் நவக்கிரி சித்த மருத்துவ மூலிகைத் தோட்டத்தில் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.
ஜூன் மாதம் 10 ஆம், 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நிலாவரையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் சித்த மருத்துவ மூலிகைத் தோட்டத்தில் சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.
ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மூலிகைத் தோட்டத்தில் பல நூற்றுக் கணக்கான மூலிகைப் பயிர்கள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு பெறப்படும் மூலிகையில் இருந்து சுதேச மருந்துகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
சுதேச மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வு, மூலிகையின் பயன்பாடு, மூலிகைகளின் பாதுகாப்பு, சுதேச வைத்தியத்தின் பக்கவிளைவு இல்லாத இயல்பு, சுதேச மருத்துவத்தை விருத்தி செய்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு மூன்று தினங்கள் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் சித்த மருத்துவ மாநாட்டையும் கண்காட்சியையும் நடத்துகின்றது.



கண்காட்சியைப் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டுப் பயன்பெற வேண்டும் என வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சியாமா துரைரத்தினம் அறிவித்துள்ளார். (த-11)

## காதை கடித்தவர் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம்,மே 30
ஒருவரின் காதைக் கடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
நாவாந்துறையைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு காது கடிக்கப்பட்டுள்ளது. காதில் காயமடைந்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பினார். காதைக் கடித்த நபருக்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.
இதனடிப்படையில் நாவாந்துறையைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. (த-4)



யாழ்.நகர், மானிப்பாய் வீதி, முட்டாஸ் கடைச் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் மினி பஸ் ஒன்றும் நேருக்குநேர் நேற்று மோதிக்கொண்டன. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் தப்பினார். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ங-4-ரி)

## கொலைச் சந்தேக நபருக்கு நீதிமன்றால் பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், மே 30
கணவன், மனைவி இருவரையும் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்துள்ளது.
குற்றம் புரிந்த குறித்த சந்தேக நபர் மறைந்து வாழ்வதற்கு இடம் கொடுத்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மற்றைய நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
யாழ்.மேல்நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த இருவரின் பிணை விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டன.
நீர்வேலி வடக்கு, கோப்பாயில் 2011 ஆம் ஆண்டில் டிசெம்பர் 8 ஆம் திகதி மார்க்கண்டு உதயகுமார் (வயது-55), உதயகுமார் வசந்தி மாலா (வயது-46) ஆகிய இருவரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் மகனான குகதீபனும் கோடரி வெட்டில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். கணவன், மனைவியைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா சந்திரராசா (வயது -60) என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.
இவர் குற்றம் புரிந்த சம்பவத்தின் பின்பு மறைந்து வாழ இடம்கொடுத்த குற்றச்சாட்டில் அருணாசலம் கோணேஸ்வரநாதன் என்பவர் கைதுசெய்யப்பட்டார். அவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.
இந்த நிலையிலேயே சந்தேக நபர்கள் சார்பில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது.
இதனைப் பரீசீலித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை வழங்க மறுத்ததுடன் மற்றைய நபர் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.
இதன்படி அவர் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 2 லட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டார்.
மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் கோப்பாய் பொலிஸில் சந்தேக நபர் ஒப்பமிட வேண்டும் என்று மன்று நிபந்தனை விதித்தது. (த-4)

## கண், காது, வாய் ஆகிய மூன்றுக்கும் உரியதே முத்தமிழ்

### தனிநாயகம் நூற்றாண்டு நினைவு நிகழ்வில் புலவர் அரியநாயகம்

யாழ்ப்பாணம், மே 30
உடம்புக்குச் சிரசு முக்கியம். இங்கேதான் கண், காது, வாய் ஆகிய மூன்றும் உள்ளன. இந்த மூன்றுக்கும் உரியதே முத்தமிழ் என நெடுந்தீவு தனிநாயகம் அடிகள் மன்றத் தலைவர் புலவர் அ.வெ.அரியநாயகம் தெரிவித்தார்.
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தவத்திரு தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு நினைவு நிகழ்வு கல்லூரியின் அதிபர் திருமதி வீ.சண்முகரத்தினம் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றிய போதே அரியநாயகம் இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:-
இயற்தமிழ் படிப்பது வாய்க்கு, இசைத்தமிழ் கேட்பது காதுக்கு, நாடகத் தமிழ் பார்ப்பது கண்ணுக்கு. நாம் பெற்ற இந்த மூன்று உறுப்புக்களையும் வீணாக்கி விடக் கூடாது என்றே இந்த உறுப்புக்களுக்கு முத்தமிழை உரியதாக்கி வைத்தனர். ஆனால் நாங்கள் இவற்றைப் பொருட்படுத்தாது வாழ்ந்து வருகின்றோம். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும் என்ற பாரதியாரின் கனவை நனவாக்கியவர் தனிநாயகம் அடிகளார். பல்வேறு சமயக் கருத்துக்களைத் தன்னகத்தில் கொண்டிருந்த தமிழ்நாடு அவற்றைத் தன்மொழியாம் தமிழ்மொழியில் வெளியிட இடம்கொடுத்தது. வைஷ்ணவர்களும், சமணர்களும், இஸ்லாமியர்களும், சைவர்களும், பௌத்தர்களும், கிறிஸ்தவர்களும் தங்களின் சமயக் கருத்துக்களைப் படைத்து மகிழ்ந்த



உலக மொழி உண்டு என்றால் அது தமிழ் மொழி மட்டுமே என்று பெருமைப்படுத்தியவர் தனிநாயகம் அடிகள்.
அயல் நாட்டுத் தொடர்பாடலும் அயல் மொழிப் பயிற்சியாலும் நம் நாட்டு மொழிப் பற்று சிறந்து வளர்கின்றது. பிற மொழிகளுடன் தமிழ் மொழியைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது நாம் பெருமைப்பட முடியும். -என்றார். (த-7)

## வீதியைக் கடக்க முயன்ற இளைஞர் விபத்தில் காயம்

தென்மராட்சி,மே 30
வீதியின் மறுபக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸில் ஏறுவதற்காக வீதியைக் கடக்க முற்பட்ட இளைஞர் வாகனத்தினால் மோதுண்டார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மிருசுவில் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.
தலையில் காயமடைந்த நிலையில் காணப்பட்ட இளைஞரை உடனடியாக ஏற்றிச் சென்ற அதே வாகனச் சாரதி அவரை வைத்தியசாலையில் ஒப்படைத்துவிட்டு கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார்.
சாரதியின் மனிதாபிமான செயலினை அனைவரும் பாராட்டினர்.
மிருசுவில் தவசிக்குளத்தைச் சேர்ந்த இளைஞரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜப்பான் தமிழ் அறிஞர் நோபுரு கரஷிமாவுக்கு பிரதமர் மன்மோகன்சிங் பத்மஸ்ரீ விருது வழங்கினார்.

### ராஜிவ் கொலை வழக்கில் மறு விசாரணை

# ஜூன் 5 வரை காலக் கெடு

## சி.பி.ஐ. வெளியுறவுத் துறைக்கு நீதிமன்று நோட்டீஸ்



மதுரை, மே.30

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மறு விசாரணை நடத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் பதிலளிக்க வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் சி.பி.ஐக்கு சென்னை உயர் நீதிமன் றத்தின் மதுரை கிளை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ராஜிவ் கொலை வழக் கின் விசாரணை பல வரு டங்களுக்கு முன்பே முடிவ டைந்து 4 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் நளினிக்கு ஆயுள் தண்டனையாக குறைக் கப்பட்டது. பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரும் தூக்குக் கொட்டடியில் இருக்கின்றனர். அவர்களது கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதனால் அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளனர்.

> சாந்தகுமரேசன் என்ற வழக் கறிஞர் சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நேற்று முன்தினம் ஒரு பொது நலன் வழக்கைத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு உச்சநீதிமன் றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் மதுரை மேலூரைச் சேர்ந்த சாந்த குமரேசன் என்ற வழக் கறிஞர் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நேற்று முன்தினம் ஒரு பொதுநலன் வழக்கைத் தொடர்ந்தார். அதில், ராஜிவ் படுகொலை தொடர்பான சில காணொலிகள் சிறப்பு புலனாய்வு குழுவிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று ராஜிவ் கொலை வழக்கை விசாரித்த சி.பி.ஐ. முன்னாள் விசாரணை அதிகாரி ரகோத்தமன் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். இவ்வாறு சில காணொலிக் காட்சிகள் ஒப்படைக் கப்பட்டு விசாரணை நடத் தப்படாத நிலையில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் தூக்குக் கொட்டடியில் இருக்கின்றனர். இதனால் உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கில் மீண்டும் மறு விசாரணை நடத்தி புதைக் கப்பட்ட உண்மைகளை வெளியே கொண்டுவர வேண்டும் என்று கோரி யிருந்தார்.

இம்மனுவை நேற்று விசாரித்த சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை, இது தொடர்பாக எதிர்வரும் 5 ஆம் திகதிக்குள் பதிலளிக்க வேண்டும் என்று வெளியுறவுத் துறை செயலாளர் மற்றும் சிபிஐ துணை இயக்குநர், றோரா இயக்குநர் ஆகியோரை பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

## வங்கக் கடலில் காற்றழுத்தம்

சென்னை, மே.30

தமிழகத்தில் இருந்து 1000 கி.மீ தொலைவில் வங்கக் கடலின் வட மேற்குப் பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இதனால் தமிழகத்தில் சில தினங்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் அருகே சில வாரங்களுக்கு முன்பு உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவடைந்து 'மகாசென்' புயலாக மாறியது.

இதன்மூலம் தமிழகத்தில் கணிசமான அளவு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் புயல் திசை மாறி பங்களாதேஷ், மியான்மர் அருகே கரையைக் கடந்தது.

இந்தநிலையில் வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியானது தொடக்க நிலையில் உள்ளது.

அனேகமாக அடுத்த ஓரிரு நாள்களில் இது வலுப்பெறலாம். வங்கக் கடலில் தற்போது புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தில் சில தினங்களுக்காவது மழை பெய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. (வ)



## இலங்கை இராணுவத்துக்கு இந்திய பயிற்சியே வேண்டாம்

### கருணாநிதி கோரிக்கை



சென்னை, மே.30

இந்தியாவில் எந்த இடத்திலும் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கக் கூடாது என்று தி.மு.க, தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை இராணுவத்தினருக்கு சில குறிப்பிட்ட இராணுவப் பயிற்சிகள் மட்டுமே இந்தியாவில் அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுக்குத் தமிழகத்தில் பயிற்சி அளிக்கமாட்டோம் என்று நண்பர் ஏ.கே. அந்தோனி அவர்கள் தஞ்சையில் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். மத்திய அரசின் சார்பில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட செய்திதான் இது.

ஆனால், இலங்கைத் தமிழர்களைக் கொல்வதற்குக் காரணமாக இருக்கும் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவிலே எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதுதான் தமிழகத்திலே உணர்வுள்ள தமிழர்களின் கோரிக்கை, வேண்டுகோள். இந்திய அரசிடம் நாம் பலமுறை அந்த வேண்டுகோளை விடுத்து விளக்கியுள்ளோம்.

இந்தியாவிலே இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிக்க மாட்டோம் என்று இந்திய அரசின் சார்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்க அவர்களால் இயலவில்லை. இலங்கையில் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் எதிர்பார்த்த வேகத்தில் இல்லை என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனியே ஒருமுறை கூறியிருக்கிறார்.

இந்தியாவில் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்ட இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இந்தியாவில் இலங்கை இராணுவத்தினருக்கு அளிக்கப்படும் பயிற்சியை தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் எதிர்ப்பது பற்றிக் கவலையில்லை. அந்த அரசியல்வாதிகள் எழுப்பும் விவகாரங்கள் வெறுப்புணர்வால் ஏற்பட்டவை என்று கூறினார்.

அப்போதே அதற்குப் பதிலளித்த மத்திய அமைச்சர் அந்தோனி, தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் தெரிவித்த ஆட்சேபங்கள் வெறுப்புணர்வின் அடிப்படையில் எழுப்பப்பட்டவை என்று நான் கருதவில்லை. -என்றுள்ளது. (வ)

## வழக்கறிஞர் ஜெத்மலானி கட்சியிலிருந்து நீக்கம்

டில்லி, மே.30

பாரதீய ஜனதா கட்சியில் இருந்து மூத்த வழக்கறிஞரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராம் ஜெத்மலானி நீக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு கட்சியின் தேசிய தலைவராக இருந்த நிதின் கட்காரிக்கு எதிராக கருத்து தெரிவித்ததற்காக ராம் ஜெத்மலானியை கட்சி மேலிடம் நீக்கியது. அதன் பின்னர் சமரசம் ஏற்பட்டதையடுத்து அவர் கட்சியில் நீடித்து வந்தார்.

இந்த நிலையில் கட்சிக்கு எதிராக மீண்டும் கருத்துத் தெரிவித்ததால் அவரை அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து தகுதிகளில் இருந்தும் 6 ஆண்டுகளுக்கு நீக்கி மேலிடம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்சியின் நாடாளு மன்றக் குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறி ராம் ஜெத்மலானி செயல்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நாடாளுமன்றக் குழு தெரிவித்தது. (வ)

# இனிமேல் பேச்சுக்கு இடமில்லை

## நக்சல்களுடன் தாக்குதலைத் தீவிரப்படுத்துவோம் என்கிறார் உள்துளை இணை அமைச்சர்

டில்லி, மே.30

நக்சல்களுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்துவோம். இனிமேல் அவர்களுடன் பேச்சு நடத்தப் போவதில்லை என்று மத்திய உள்துறை இணையமைச்சர் ஆர்.பி.என்.சிங் தெரிவித்தார். இதுதொடர்பாக ஆர்.பி. என். சிங் டில்லியில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

நக்சல்களின் கொடூரமான படுகொலைகள் கடந்த 6 மாதங்களாக அதிகரித்துள்ளன. நக்சல்களுக்கு எதிரான கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும். அவர்களுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்துறை அமைச்சராக ப.சிதம்பரம் இருந்தபோது, பேச்சு நடத்த நக்சல்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், அதை நக்சல்கள் ஏற்கவில்லை.

அவர்களுக்கு ஜனநாயகத்திலும், பேச்சிலும் நம்பிக்கையில்லை. வன்முறையை அவர்கள் கைவிடாதவரை, பேச்சு நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை. சதீஸ்கரில் அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்ற காங்கிரஸ் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தீவிரவாதச் செயல்களால் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் பாதிக்காமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும்.



நக்சல்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கும் விடயத்தை மறு பரிசீலனை செய்யவுள்ளோம். முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதியை, சில மாநில அரசுகள் செலவிடாமல் அப்படியே வைத்துள்ளன.

வளர்ச்சிப் பணிகளை நடத்தி, அதன் பயன்கள் மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்தும் வழிவகைகள் குறித்து ஆராயப்படும்-என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏஞ்சலினா ஜூலியின் நிர்வாண ஓவியம் ஏலம்



நியூயோர்க், மே 30
பிரபல ஹொலிவூட் நடிகை ஏஞ்சலினா ஜூலியின் நிர்வாண ஓவியம் ஏலத்துக்கு வருகின்றது.

37 வயதான நடிகை ஏஞ்சலினா மேலாடை இன்றி அரை நிர்வாணமாக 'போஸ்' கொடுக்க, அதை சுவீடனை சேர்ந்த ஓவியர் ஜோகன் ஆண்டர்சன் வரைந்துள்ளார். அந்த ஓவியம் விரைவில் ஏலம் விடப்படவுள்ளது என்று கூறப்படுகிறது.

"இந்த ஓவியம் சுமார் 36 இலட்சம் ரூபா வரையில் ஏலமிடப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்" என்று கூறுகின்றனர் ஏலத்தை நடத்தவுள்ள நிறுவனத்தினர்.

ஏஞ்சலினா ஜூலி அண்மையில் புற்றுநோய் அபாயம் காரணமாக சத்திரசிகிச்சை மூலம் தனது மார்பகங்களை அகற்றி பரபரப்பை ஏற்படுத்தினார். (ற)

# ஏட்டிக்குப் போட்டி

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கத்தை அடுத்து சிரிய அரசுக்கு ஆயுதம் வழங்குகிறது ரஷ்யா

மொஸ்கோ, மே 30
சிரியா மீது ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டிருந்த ஆயுதத் தடை நீக்கப்பட்டதை அடுத்து சிரிய அரசுக்கு ஆயுத உதவிகளை வழங்கப் போவ தாக ரஷ்யா அறிவித்துள்ளது.

சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகள் ஆதரவு அளித்து வரும் நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் சிரியா மீது விதித்திருந்த ஆயுதத் தடையை நீக்கியுள்ளது. அதையடுத்து சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு நேரடியாக ஆயுதங்கள் வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுகிறது.



இந்த நிலையில், சிரிய விவகாரத்தில் வெளிநாட்டு தலையீடுகளைத் தடுக்கும் வகையில் சிரிய அரசுக்கு ஆயுதங்களை வழங்கத் தீர்மானித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக ஏவுகணைகள், வான் வழிக் கண்காணிப்புக் கருவிகள் என்பவற்றை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் ரஷ்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிரியாவில் இரண்டாண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை சுமார் 94 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று உத்தியோகபூர்வமற்ற புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. (ற)

## பிரிட்டனில் இயல்புநிலை பாதிப்பு

லண்டன், மே 30
பிரிட்டனில் இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தின் பின்னர் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக நடைபெற்ற வன்முறைகள் தொடர்பாக 200 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று மத நல்லிணக்கத்துக்கான அமைப்பு கூறுகின்றது.

இதேவேளை, குறித்த சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த ஆர்ப்பாட்டங்களில் முஸ்லிகளுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டமைக்காக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (ற)

## மியான்மரில் மீண்டும் மத வன்முறை

லாஷியோ, மே 30
மியான்மரின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஷான் மாகாணத்தில் மீண்டும் மத வன்முறைகள் ஏற்பட்டுள்ளன.

ஷான் மாகாணத்தின் தலைநகரான லாஷியோவிலேயே வன்முறைகள் ஏற்பட்டுள்ளன. அங்குள்ள புத்த மதத்தவர்களுக்கும், முஸ்லிம் மதத்தவர்களுக்கும் இடையே கடும் முறுகல் நிலை காணப்படுகின்றது.

புத்த மதத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை முஸ்லிம் மதத்தவர் ஒருவர் தீயிட்டுக் கொளுத்தினார் என்று பரவிய தகவலை அடுத்து வன்முறைகள் பெருமளவில் வெடித்துள்ளன.

பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகள் பெருமளவில் தீயிட்டுக் எரிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

மியான்மரில் அண்மையில் இடம்பெற்ற மற்றொரு மத வன்முறையில் 200க்கும் மேற்பட் டோர் உயிரிழந்திருந்தனர். (ற)

## சிரியா நிலை குறித்து ஐ.நா. ஆலோசனை

ஜெனிவா, மே 30
சிரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவசர ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது ஐ.நா. மனித உரிமைகள் சபை.

அமெரிக்கா, துருக்கி, கட்டார் ஆகிய நாடுகள் விடுத்த அவசர கோரிக்கையை அடுத்தே ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சிரிய உள்நாட்டுப் போர் காரணமாக துருக்கியில் அதிகளவான சிரிய மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்த நிலையில் துருக்கி இது தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வந்தது.

இதுகுறித்துக் கருத்துக் தெரிவித்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவநீதம்பிள்ளை,

"சிரியாவில் அரச தரப்பில் மட்டுமன்றி கிளர்ச்சியாளர்கள் தரப்பிலும் மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெற்றுள்ளன. குற்றவாளிகள் தண்டனை பெறாது தப்பிவிட முடியாது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அவர்களை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

இந்த அவசர ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை நடைபெறும் என்று தெரியவருகிறது. (ற)



எல்சவடோர் நாட்டின் தலைநகரான சான் சல்வடோர் நாட்டில் இயங்கி வந்த ஆயுதக் குழுக்கள் பொலிஸாருடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய தமது ஆயுதங்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்த நடவடிக்கையால் நாட்டின் குற்றச்செயல்கள் பெருமளவில் குறையும் என்று பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## நவாஸ் ஆட்சி அமைத்ததும் முஷாரப் மீது தேசத் துரோக வழக்கு



இஸ்லாமாபாத், மே 30
நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி ஆட்சி அமைத்தவுடன், பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மீது தேசத் துரோக வழக்கு தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளைக் கைது செய்து காவலில் வைத்தமை, பலுசிஸ்தான் மாகாணத்தில் இராணுவ நடவடிக்கை மூலம் முக்கிய அரசியல் தலைவர் ஒருவரைக் கொன்றமை ஆகிய வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள முஷாரப், தற்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் முஷாரப் மீது தேசத் துரோக வழக்கு தொடரப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு மட்டங்களிலும் எழுந்துள்ளது. ஆயினும் பாகிஸ்தானின் அரசியல் சட்டங்களின்படி தேசத் துரோக வழக்கை பாகிஸ்தான் அரசு மட்டுமே தொடரமுடியும். எனினும் முஷாரப் மீது வழக்கு தொடர தமக்கு அதிகாரம் இல்லை என்றும், புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அரசுதான் அது தொடர்பாக முடிவு எடுக்க முடியும் என்றும் தற்போது ஆட்சியில் உள்ள இடைக்கால அரசு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கவுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தாரிக் அஸீம்,

"முஷாரப் மீது தனிப்பட்ட முறையில் எமக்குப் பிரச்சினை ஏதும் இல்லை. அதே சமயம் அரசமைப்பை மீறியதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் கருதுகின்றார். இந்த விடயத்தில் அவர் உறுதியாக உள்ளார். அதன்படி ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முஷாரப் மீது தேசத் துரோக வழக்கு தொடரப்படும். அவர் செய்த தவறுக்கான தண்டனையை அவர் அனுபவிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## விண்வெளி நிலையம் சென்றனர் 3 வீரர்கள்

நியூயோர்க், மே 30
கஸகஸ்தான் பைகானூர் ஏவுதளத்தில் இருந்து மூன்று விண்வெளி வீரர்கள் நேற்று அதிகாலை சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் புறப்பட்டுள்ளனர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஏற்பட்டுள்ள கசிவு மற்றும் அழுத்தம் குறித்து சோதனை செய்வதற்காகவே இவர்கள் செல்கின்றனர்.

பயோதர் யுர்சிகின் (ஜோர்ஜியா), கரென் நைபெர்க் (அமெரிக்கா), லுகா பார்மிட்டோனா (இத்தாலி ) ஆகிய மூன்று விண்வெளி வீரர்களுமே சோயுஸ் ரொக்கெட் மூலம் பயணித்தனர்.

பூமியில் இருந்து 400 கிலோ மீற்றர் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அவர்கள் 6 மணி நேரத்திற்குள் சென்றடைவார்கள் என்றும், அங்கு சென்றவுடன் நிலையத்தின் கசிவு மற்றும் அழுத்தம் குறித்த சோதனைகளை மேற்கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது. (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ். அதிவேக நெடுஞ்சாலை திட்டமும் சீன அரசு வசம்

## இரு தரப்புப் பேச்சில் இணக்கம்

கொழும்பு,மே 30
யாழ்ப்பாணம் - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு உள்ளிட்ட வீதிகள், நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகளை அமைப்பது ஆகிய திட்டங்களில் முதலீடுகளை தன் வசப்படுத்தியுள்ளது சீனா.

பெய்ஜிங்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த இரு தரப்பு பேச்சுக்களிலேயே இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன் கீழ் கொழும்பு - யாழ். அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், கொழும்பு- கண்டி- குருநாகல அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம், மாத்தறை - கதிர்காமம் அதிவேக நெஞ்சாலைத் திட்டம் ஆகியவற்றை மேற்கொள்ளவும் சீனா இணங்கியுள்ளது.



அத்தனகல, மினுவாங்கொட, குருநாகல ஆகிய பகுதிகளில் நீர்விநியோகத் திட்டங்களில் முதலீடு செய்யவும், கண்டியில் அனைத்துலக மாநாட்டு மண்டபத்தை நிறுவவும், அனுராதபுரத்தில் கலையரங்கு ஒன்றை அமைத்துக் கொடுக்கவும், கொழும்பு மற்றும் ராகம மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்யவும் சீனா உதவவுள்ளது.

உத்தியோகபூர்வப் பயணமாக சீனா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சீன ஜனாதிபதி ஜி ஜின்பின்கை சந்தித்தபோது, இலங்கைக்கு தொடர்ந்து உதவிகளை வழங்க இணக்கம் தெரிவித்தார்.


இந்த சந்திப்புகளின்போது வர்த்தகம், மற்றும் சுற்றுலாத்துறை ஒத்துழைப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, நிதி உதவிகளை சீனாவிடம் இருந்து மேலும் பெறுவது தொடர்பாக சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் தலைவருடன் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பேச்சை நடத்தினார்.

உலக விடுதியில் காலையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் தலைவர் லி ருவோகுவுக்கு இலங்கைக்கு உதவிகளை வழங்கியமைக்காக மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தொடர்ந்து உதவத் தயாராக இருப்பதாக சீன வங்கியின் தலைவர் லி, உறுதியளித்தார். கடந்த ஏழு ஆண்டுகளில் இந்த வங்கி 37 திட்டங்களில் இலங்கையில் முதலிட்டுள்ளது. (ச)

## ஹற்றன் மக்கள் இடம்பெயர்வு மண் சரிவு அபாயத்தால்



நுவரெலியா,மே 30
மண்சரிவு அபாயத்தால் ஹற்றன் பிரதேசத்தில் 19 குடும்பங்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளன. தேசிய கட் டட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனைப் படி ஹற்றன், கொட்டகலை, வெலிங்டன் ஆகிய பிரதேசத்திலுள்ள 19 குடும்பங்களே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளன.

அவர்களுக்குத் தேவையான தற்காலிக கூடாரங்கள் இடர் முகாமைத்துவ அமைச்சின் மூலம் வ்ழாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

**கார் விற்பனைக்கு**

9 sri--- xxxx தொடரிலக்கமுடைய volk swagon 1300 மிக நல்ல நிலையில் இரண்டாவது உரிமையாளரை உடைய carnation red colour கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு:- தா. முருகையா, காளிகோவி லடி (சங்கரத்தைச் சந்திக்கு அருகில்) வட்டுக்கோட்டை.

T.P:- 021 320 6559

**UNIVERSITY OF JAFFNA**
**INVITATION FOR BIDS**

1. **The Chairperson, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No | Bid ID | Description of Work | Estimated Cost | Contract Period | Minimum Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/ RE/ 2013-08 | Renovation Works at Laboratory, Department of Biochemistry, University of Jaffna at Thirunelvely | Rs.15.0 million | 120 Calendar Days | ICTAD/ Business Registration with experience in at least 2 similar works within last 5 years | Rs. 150,000 | 17th October 2013 |
| 2 | YA/CWP/ RE/2013-09 | Completion of Balance Works of Fisheries Laboratory, Renovation of Insectory Block and Improvements and Painting for Specified Lecture Halls, University of Jaffna at Thirunelvely | Rs.9.8 million | 120 Calendar Days | C7 | Rs. 100,000 | 17th October 2013 |
| 3 | YA/CWP/ RE/ 2013-10 | Completion of rear side Boundary Wall at Faculty of Engineering at ariviyalnagar, Kilinochchi. | Rs. 9.0 million | 90 Calendar Days | C7 | Rs. 90,000 | 17th October 2013 |
| 4 | YA/CWP/ RE/ 2013-11 | Rehabilitation to Registrar's Office, University of Jaffna at Thirunelvely | Rs.2.87 million | 90 Calendar Days | C8 | Rs. 30,000 | 17th October 2013 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction except for work No 1 with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.
5. Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 30th May 2013 until 20th June 2013** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of rupees two thousand **(Rs.2,000/-)** for each bid.
7. Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 21st June 2013 or be deposited in the tender box kept in the Registrar's office.** Bids will be opened immediately thereafter **on 21st June 2013** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period for **91 days** from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule for work No 1 and 16.2 of the Bidding Data for the other works.
10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.30 hrs on the **13th June 2013.**

**Vice- Chancellor,**
**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely,Jaffna.**
**28.05.2013**

(C-9511)(2.6)

## போலி நாணயத்தாள்கள் புழக்கம்; பொதுமக்கள் விழிப்பாக இருங்கள்

### பொலிஸ் தலைமையகம் வேண்டுகோள்



கொழும்பு,மே 30
போலியாக அச்சிடப்படும் நாணயத் தாள்கள் தொடர்பில் விழிப்புடனும், அவதானத்துடனும் செயற்படுமாறு பொலிஸ் தலைமையகம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

போலி நாணயத்தாள்களை அச்சிடுதல், விநியோகித்தல், புழக்கத்துக்கு விடுதல் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர்கள் உடனடியாக 119 என்ற பொலிஸ் அவசர அழைப்புக்கோ, அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கோ தெரியப்படுத்துமாறு பொலிஸ் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

போலி நாணயத் தாள்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போலி நாணயத் தாள்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே அது தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது. (ச)

## ஹெலி இறங்கு தளத்தை பயன்படுத்த முடியாத நிலை

### நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலமே கொழும்பு வைத்தியசாலைக்கு

கொழும்பு, மே 30
ஹெலிகளை இறக்குவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹெலி இறங்குதளத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்த ஹெலி இறங்குதளம் நிர்மாணிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் இன்று வரை அந்த இறங்கு தளத்தில் ஹெலி எதுவும் இறக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.


இந்த இறங்கு தளத்தில் ஹெலிகள் இறக்குவது தொடர்பாக விமான சேவைகள் அதிகாரிகள் அனுமதி கிடைக்கப் பெறாததே அதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

அதனால் வான் மூலமாக அவசர நோயாளியொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்து வரபட்டிருந்தாலும் அந்த ஹெலியை காலி முகத்திடலில் தரையிறக்கி, பின்னர் அம்புலன்ஸ் வாகனம் மூலமாகவே வைத்தியசாலைக்கு எடுத்துவர வேண்டியுள்ளது.

அண்மையில் கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் தீக்குளித்த பௌத்த பிக்குவும் ஹெலி மூலமாகக் கொண்டுவரப்பட்டு காலி முகத்திடலில் இறக்கப்பட்ட பின்னர் அம்புலன்ஸ் வாகனம் மூலமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்தார். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## போருக்குப் பின்னர் மீண்டும் முகாவில் அம்மனுக்கு பொங்கல்





வடமராட்சி, மே 30
கடந்த கால போர்ச் சூழலுக்குப் பின்னர் இயக்கச்சி முகாவில், திரியாய் பர்வதபத்தினி அம்மன் கோயில் குளிர்த்தி பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொடக்கம் கடந்த சனிக்கிழமை காலை வரை ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச் சிறப்பாக நடைபெற்றது.
வடமராட்சி கிழக்கு- பச்சிலைப் பள்ளி எல்லைப்புறத்தில் அமைந்துள்ள மிகப் பழைமை வாய்ந்ததும் பிரசித்தி பெற்றதுமான இந்தக் கோயிலின் பொங்கல் வெள்ளி இரவு 10 மணிக்கு பண்டமரவடியில் இருந்து மரபு வழி முறையில் பண்டம் கோயிலுக்கு எடுத்து வரப்பட்டதைத் தொடர்ந்து திருக்குளிர்த்திப் பொங்கல் இடம்பெற்றது.
பெருந்தொகையானோர் தூக்குக்காவடி, பறவைக்காவடி, பாற்காவடிகளையும் பெண்கள் பாற்செம்புகளையும் எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றினர். (வ-8)

## தென்மராட்சியில் வீசும் காற்றால் தடைப்படும் மின்சாரம்



தென்மராட்சி, மே 30
தென்மராட்சி பிரதேசத்தில் வீசும் கடும் காற்றால் பெரிய பெரிய மரங்கள் முறிந்து வீழ்வதால் அடிக்கடி மின்சாரம் தடைப்பட்டு வருகிறது.
இதுவரை பத்துக்கு மேற்பட்ட பனை மரங்கள் முறிந்து மின் கம்பிகளில் சாய்ந்ததால் கம்பிகள் அறுந்ததுடன் கம்பங்களும் முறிந்துள்ளன.
கடந்த ஞாயிற்றுக்கிழமை கச்சாய், புங்கடி விநாயகர் ஆலய பொங்கல் உற்சவத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் உயரமான பனை மரம் ஒன்று வேருடன் சாய்ந்ததில் இரு மின் கம்பங்களும் நக்ல்ஸ் அம்மன் கோயிலுக்கு அருகில் பனை மரம் முறிந்ததில் ஒரு மின்கம்பமும் முறிந்தன.
கம்பிகள் அறுந்தவுடன் மின்சாரம் தடைப்பட்டதால் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. மின்சார சபையினர் உடனடியாக அவற்றைச் சீர்செய்து மின்சார விநியோகம் வழங்கப்பட்டது.
மரங்கள் முறிந்து வீழ்வதால் இடம்பெறும் மின் தடை பற்றி தினமும் பெருமளவு முறைப்பாடுகள் மின்சார சபையில் செய்யப்படுவதால் அங்கு கடமையாற்றுவோர் அவற்றைச் சீர்செய்யும் பணியை உடனுக்குடன் மேற்கொண்டு வருகின்றனர். (வ-8)

### யாழ். ஆஸ்பத்திரியில் காது, மூக்கு, தொண்டை நிபுணர் இல்லாததால்

# வெளி மாவட்டங்களை நாடும் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், மே 30
யாழ்.போதனா வைத்தியசாலையில் காது, மூக்கு மற்றும் தொண்டை சிகிச்சைகளுக்கு வைத்திய நிபுணர் கடமையில் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று சிகிச்சை பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.
போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே கடமையில் இருந்த வைத்திய நிபுணர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.
இதனையடுத்து வைத்திய நிபுணருக்கு பதிலாக புதிய வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டபோதும் அவரும் கடமையில் இல்லை. இதன் காரணமாக காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கு உள்ளாகும் நோயாளர்கள் வெளிமாவட்டங்களுக்கு குறிப்பாக தென்னிலங்கைப் பகுதி மருத்துவமனைகளை நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக தற்போது நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணரும் மேற்படிப்புக்காக கடமையில் இருந்து விலகி இருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த நிலையில் உதவி வைத்தியர்கள் மட்டும் கடமையில் இருந்து நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கி வருகின்றனர்.
எனினும் வைத்திய நிபுணர்கள் ஆலோசனைகளின் படி சிகிச்சை பெறமுடியாத காரணத்தால் கிளினிக் மூலம் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களும் சிகிச்சை பெறுவதைத் தவிர்த்து வருகின்றனர்.
குறிப்பாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். தம் பெறும் சிகிச்சையில் திருப்தி இல்லாத காரணத்தால் வெளி மாவட்டங்களில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனைகளை நாடிச்செல்கின்றனர். அத்துடன் அவசர நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இது தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பவானி பசுபதிராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-
ஏற்கனவே கடமையில் இருந்த வைத்திய நிபுணரை மீள வைத்தியசாலைக்கு நியமிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது கடமையில் உள்ள உதவி வைத்தியர்கள் நோயாளர்களுக்கு போதுமான சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (வ-14-8)

## பதிவு செய்யப்படாத 122 விடுதிகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 30
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உள்ள 162 விடுதிகளில் 40 விடுதிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. 122 விடுதிகள் இன்று வரை பதிவு செய்யப்படாமலேயே இயங்கி வருகின்றன. நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் இவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று யாழ். மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ். மாநகர எல்லைக்குள் பல விடுதிகள் உள்ள போதும் அவற்றில் 40 விடுதிகள் மட்டுமே இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாமல் இயங்கும் விடுதிகளாக எம்மால் 122 விடுதிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
யாழ். மாநகர எல்லைக்குள் இனங்காணப்படாத நிலையில் மேலும் எத்தனை விடுதிகள் இயங்கி வருகின்றன என்பது தொடர்பில் இன்னும் முழுமையான தகவல் இல்லை.
இது தவிர வார இறுதி நாள்களில் மாத்திரம் இயங்கும் விடுதிகள் தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவை தொடர்பில் நாளை மறுதினம் தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. விடுதிகளாக இயங்குவதற்கு உரிய வசதிகளைக் கொண்டிராதவை அனைத்தும் இழுத்து மூடப்படும் . அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் -என்றார். (த-4)

## பொது நூலக மாடிக் கட்டட பணி விரைவில் நிறைவுறும்

### கரவெட்டி பிரதேச சபை தீர்மானம்

வரமராட்சி, மே 30
அல்வாயில் உள்ள கட்டைவேலி உப அலுவலக பொது நூலகத்தின் மாடிக் கட்டடப் பணிகளை பூர்த்தி செய்ய கரவெட்டிப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.
கட்டைவேலி உப அலுவலகத்துடன் உள்ள பொது நூல் நிலையத்தின் மேல்மாடிக் கட்டடம் நிறைவு பெறாமல் நீண்டகாலமாக இருப்பது குறித்து கரவெட்டிப் பிரதேச சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதன்போது மாடிக்கட்டடத்தின் கட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதென தீர்மானிக்கப்பட்டது.
இதேவேளை வேரொண்டையில் புதிதாக கொல்களம் அமைப்பதுடன் சபையின் தலைமை அலுவலகத்தில் வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.
இந்த வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதியை சபை நிதியிலிருந்தே பெற்றுக்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## வெசாக் தினத்தில் மதுபானம் விற்ற 4 பேர் கைது


யாழ்ப்பாணம், மே 30
வெசாக் விடுமுறை தினத்தில் மதுபானம் விற்ற குற்றத்தின் பெயரில் 4 நபர்களை அச்சுவேலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.
இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-
வெசாக் தினத்தில் மதுபானம் விற்பனை செய்வதற்கு தடை



விதிக்கப்பட்டிருந்த போதும் சட்டவிரோதமாக மது விற்பனை செய்த 4 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்களுகள் 2 பேர் அச்செழுவையும் மற்றைய இருவர் அச்சுவேலியையும் சேர்ந்தோர் என தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்டுள்ள நால்வரையும் நாளை வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (வ-ரி)

## சந்தைகளில் களைகட்டும் ஈச்சம்பழ வியாபாரம்

யாழ்ப்பாணம், மே 30
குடா நாட்டில் தற்போது பரவலாக ஈச்சம் பழம் வியாபாரம் களைகட்ட ஆரமபித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளும் ஆர்வத்துடன் ஈச்சம் பழங்களை வாங்கிச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.
கடற்கரையுடன் சேர்ந்த காடுகளில் ஈச்சம்பழங்கள் அதிகம் விளைச்சல் அடைந்துள்ளதால் அந்தந்த கிராமங்களைச் சேர்ந்த சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் அதிகாலையிலேயே சிறு காடுகளுக்குச் சென்று ஈச்சம் பழங்களைப் பிடுங்கி வந்து வீதிகளில் வைத்து விற்பனை செய்துவருகின்றனர்.
வன்னிப் பகுதியில் பலாப் பழ விற்பனை களைகட்டுவதைப் போன்று யாழ்.மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசங்களில் ஈச்சம்பழம் வியாபாரம் களை கட்ட ஆரம்பித்துள்ளது.
சுற்றுலாப் பயணிகளே இதனை அதிகமாக விருப்பத்துடன் வாங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிந்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் காரைநகர், பொன்னாலை, தீவுப் பகுதிகள் மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களிலும் ஈச்சம் பழம் வியாபாரம் மும்முரமாக நடக்கிறது.
ஈச்சம் பழம் சீசன் தற்போது ஆரம்பம் என்பதால் விற்பனைக்காக சந்தைகளுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஈச்சம் பழ வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.



யாழ்.மாவட்டத்தில் காரைநகர், பொன்னாலை, தீவுப் பகுதிகள் மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களிலும் ஈச்சம் பழ வியாபாரம் மும்முரமாக நடக்கிறது.

கடந்த வருடங்களை விட இந்த வருடம் ஈச்சம் மரக்காடுகள் அதிகளவு அழிக்கப்பட்டமையால் கிடைக்கக் கூடிய ஈச்சம் பழங்கள் கிராமப் புறங்களிலேயே விற்பனை செய்ய போதுமானதாக இருப்பதுடன் நகர்புறச் சந்தைகளில் ஈச்சம் பழம் அதிகமாக விற்பனை செய்யப்படுவதில்லை எனவும் பாதிப்படைந்துள்ள ஈச்சம் பழ வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்த நிலையில் களை கட்ட ஆரம்பித்துள்ள ஈச்சம் பழ வியாபாரம் ஒரு சுண்டு 50 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல்லுக்கு எரியூட்டும் போது அவதானமாக இருக்கவும்

## பூநகரிப் பிரதேச சபை தவிசாளர் வேண்டுகோள்

பூநகரி, மே 30
பூநகரிப் பிரதேசத்தில் உள்ள வயல்வெளிகளில் காணப்படும் காய்ந்த புல்லுக்கு எரியூட்டும் போது அவதானமாக இருக்குமாறு பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புல்லுக்கு எரியூட்டும் போது அங்கு காணப்படும் ஓலை வேலிகளும், குடிசைகளும் பாதிக்கப்படக் கூடும் என்பதால் இந்த வேண்டுகோள் அவரால் விடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

பூநகரிப் பிரதேசத்தில் அறுவடை முடிவடைந்ததும் அடுத்த வருடம் மேற்கொள்ளப்பட வேண்டிய நெற்செய்கைக்கு வசதியாக, வயல் வெளிகளிலும் வரம்புகளிலும் வளர்ந்திருக்கும் புல்லைத் தீ வைத்து அழிப்பது வழக்கமாகும்.

இந்த வகை யில் தற்பொழுது புற்றரைகளுக்குத் தீ வைத்து எரிப்பதற்கான ஒழுங்குகளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர்.

கடுங்காற்று வீசுவதால் தீ வைக்கும் போது அருகில் உள்ள ஓலை வேலிகளுக்கும் குடிசைகளுக்கும் தீ பரவக் கூடும் என்பதனால் மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு பிரதேச சபைத் தவிசாளர் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-115)

# அக்கராயன் மகா வித்தியாலயத்தின் உயர்தர வகுப்புக்களில் ஆசிரியர் இல்லாததால் பெரும் ஏமாற்றம்

அக்கராயன், மே 30,
அக்கராயன் மகா வித்தியாலயத்தில் அண்மையில் பெரும் எதிர்பார்ப்புடன் ஆரம்பிக்கப்பட்ட க.பொ.த. உயர்தர வகுப்புகளின் கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் மாணவர்களும், பெற்றோர்களும் ஏமாற்றமடைந்து காணப்படுகின்றனர்.

அக்கராயன் மகா வித்தியாலய நிர்வாகத்தினர் மற்றும் பழைய மாணவர்கள் சங்கம் எடுத்த பெரும் முயற்சி காரணமாக க.பொ.த. உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பௌதிகவியல் பாடத்துக்கு மட்டுமே ஆசிரியர் உள்ளார். ஏனைய பாடங்களுக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை நியமிக்கப்படவில்லை.

அக்கராயனிலுள்ள மாணவர்கள் கிளிநொச்சிக்குச் சென்று வருவதில் பல்வேறு சிரமங்கள் உள்ளதால் அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இதற்குத் தேவையான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் நெருக்கடியான நிலை தோன்றியுள்ளது. (க-18)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



உள்ளம் மகிழ 17 . 09 . 1917

உள்ளம் உருக 30 . 04 . 2013

அமரர் கோவிந்தர் பொன்னுத்துரை

குடும்பத்தின் அகல் விளக்காய்
உற்றார்க்கு விடி வெள்ளியாய்
இறுதிவரை எமக்கெல்லாம் அரணாக
எமையெல்லாம் அரவணைத்து காத்த
எம் தலைவாசலே, மூத்த உயிர் நாடியே
உங்கள் இழப்பு எமக்கெல்லாம் பேரிழப்பு ;
குடும்ப விருட்சத்தின் ஆணிவேர் – நீங்கள்
இன்று வேரறுந்த மரமாக நாமெல்லாம்
ஆடிப்போய் நிற்கின்றோம் – எமக்காக
இனியொருமுறை வருவீர்களா – இவ்
வையகத்திற்கு எதிர்பார்கின்றோம் ஈரவிழிகளுடன்.

393/34, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (17771) (45.6)

குடும்பத்தினர்



வைத்திய சேவை

வாதரோகங்கள், சருமரோகங்கள், நோய்வு, நீரிழிவு, குழந்தைகளின் வருத்தங்கள், உடல் மெலிவு, உடல் பருமன் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு நற் சிகிச்சை நல்கப்படும்.

டாக்டர் த. சிவானந்தன்
"கோப் கிளினிக்"
100 - அராலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P.077 899 6281 (17717) (6.45)


# மன்னாரில் கைப்பற்றப்பட்டது ஹெரோயின் போதைப்பொருள்

மன்னார், மே 30
மன்னார் அடம்பனில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மன்னார் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் அடம்பனிலுள்ள வீடொன்றில் கடந்த வியாழக்கிழமை தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய சிறிய பொதியொன்று கைப்பற்றப்பட்டதுடன் நபரொருவரும் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் விடத்தல்தீவு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார். இந்த நபர் மீதான விசாரணைகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து மறுநாள் காலை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்டார்.

பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் 14 தினங்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று வாரமாக குற்றத் தடுப்புப் பொலிஸார் போதைப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் முகமாக சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-12)


கண்ணீர்மல்க

முதலாம் ஆண்டில்...



அகிலத்தின் மடியில்
17.04.1943

அம்பிகையின் திருவடிகளில்
30.05.2012

அமரர் பிரம்மஸ்ரீ
சுப்பிரமணிய ஐயர்
யோகீஸ்வரசர்மா

ஆண்டுகள் பல கடந்தாலும் எமது நெஞ்சங்களில் நீங்காது வாழ்ந்திருப்பீர்!
பாணன்குளம் நாச்சி அம்பாளின் திருவடிகளில் கீழ் சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மகன் மற்றும் குடும்பத்தினர்.
நல்லூர், யாழ்ப்பாணம்.



வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி பகுதியில், நல்ல சுற்றாடலில் 1 பரப்பு 6 குளி காணியில் அமைந்த அழகிய, ரைல்ஸ் பதித்த வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 077 3273 125 (17733)(10.6)



விற்பனைக்கு

தரமான கொங்கிரீட் (Ready mix) களுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்
SANKEN CONSTRUCTION (PVT) LTD,
No.31, Wyman Road, Nallur, Jaffna.
T.P. 071 864 3636/ 021 222 4840/ 021 224 1185 (சி/9427)(8.2)


## மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் தமது நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதியொன்றையும் மேல் நீதிமன்ற ஆணையாளர், மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 14.06.2013 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சீலிடப்பட்ட உறையில் வைத்து கையளித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பருத்தித்துறை நீதிமன்ற வளாக சுத்திகரிப்புப் பணிக்கான கேள்விப் பத்திரம் 2013/2014 என தவறாது குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய நிபந்தனைகள் பின்வருமாறு

1 விண்ணப்பிப்போர் மீளளிக்கத்தக்க கேள்வி வைப்பாக ரூபா1000.00 யை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற கணக்காளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று அதன் இலக்கத்தையும் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.
2 சுத்திகரிப்புப் பணிக்காக ஒரு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 06 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இதில் 03 பேர் பெண்களாக இருத்தல் வேண்டும்.
3 காலை 7.30 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
4 சுத்திகரிப்பிற்குரிய உபகரணங்கள் ஏனைய மூலப்பொருள்கள் யாவும் தங்களால் விநியோகிக்கப்படல் வேண்டும்.
5 சனி, ஞாயிறு பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்கள் கடமை நாள்களாக கருதப்படும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் மேல்நீதிமன்றப் பதிவாளருடன் அல்லது சம்பந்தப்பட்ட நீதிமன்றப் பதிவாளர்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஜெ.விஸ்வநாதன்
தவிசாளர், மேல்நீதிமன்ற கேள்விச் சபை, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2012 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள், **2013.06.15(சனிக்கிழமை)** இலிருந்து பின்வரும் மக்கள் வங்கிக் கிளைகளில் காலை 8.30 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | ஏலம் விடப்படும் | |
|---|---|---|---|
| | | திகதி | இடம் |
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி<br>மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | - | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய்<br>அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |

| கிளைகள் | சேவை நிலையம் | ஏலம் விடப்படும் | |
|---|---|---|---|
| | | திகதி | இடம் |
| நெல்லியடி | -- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| பருத்தித்துறை | புலோலி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/15100) (5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் நபர் ஹெரோயினுடன் மாட்டினார்

கொழும்பு,மே 30
ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் நபர் ஒருவரை ஒறுகொடவத்தை பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.
அவர் 5 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் ஹெரோயினை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.
லாகூரை சேர்ந்த சந்தேகநபர் பாகிஸ்தான் செய்தி முகவரகம் ஒன்றில் பணியாற்றுகின்றார்.
இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இவர் 20 தடவைகள் பயணம் செய்துள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)





சீனா சென்றுள்ள ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் பெய்ஜிங்குக்கு அருகில் அமைந்துள்ள 1200 வருடங் கள் பழைமை வாய்ந்த பௌத்த விகாரைக்குச் சென்று வழிபட்டனர்.

## சீன நபர் கைது

கொழும்பு,மே 30
அருகிவரும் உயிரினங்களை வைத்திருந்த சீன நபர் ஒருவர் மிரிஜ்ஜவில பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த சீன நபருக்குச் சொந்தமான உணவகத்தில் இருந்து இலங்கைக்கே உரித்தான சில உயிரினங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஹம்பாந்தோட்டை வன திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சீன நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அருகிவரும் உயிரினங்கள் உணவுக்காக பயன்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்களை ஹம்பாந்தோட்டை வன திணைக்கள அதிகாரிகள் திரட்டிய சந்தர்ப்பத்திலேயே இந்த நபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# போரினால் இடம்பெயர்ந்த அனைவரும் மீள்குடியேற்றம்

### ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு



கொழும்பு,மே 30
போரால் இடம்பெயர்ந்த சகலரும் மீள்குடியேற்றப்பட்டு விட்டனர். அதற்கமைய மொத்தமாக 295, 873 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனிவாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.
ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சில் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்காக பலாலி உள்ளிட்ட இராணுவ முகாம்களில் நிலைநிறுத்தப்பட்டிருந்த படையினரை அகற்றிக் கொள்வது குறித்து ஆராயப்பட்டுவருகின்றது.
பலாலி விமான நிலையம், காங்கேசன்துறைத்துறை முகம் ஆகியவற்றை விஸ்தரிக்க காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
இந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகளின்போது காணிகளை இழப்போருக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.
போர் நிறைவடைந்த காலத்தில் இரண்டாயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. தற்போது நூறு சதுரக் கிலோமீற்றருக்கும் குறைவான பகுதியில் மட்டுமே நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளைத் தொடர வேண்டியுள்ளது.-என்றார். (ச)

## பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை

### சந்தேகநபர் விடுதலை

கொழும்பு,மே 30
காணி மீட்டல் மற்றும் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கடமையைச் செய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை என்று நீதிமன்றம் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
கொம்பனி வீதியைச் சேர்ந்த மொஹமட் பைசார் என்பவரையே கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிவான் திலின கமகே கடந்த திங்கட்கிழமை இவ்வாறு விடுதலைச்செய்தார்.
நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இடத்தில் சட்ட விரோதமாக தற்காலிக கூடாரத்தை அமைத்திருந்ததாக அவருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததுடன் அந்தக் கூடாரத்தையும் அகற்றியுள்ளனர்.
இந்தநிலையில் இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
இந்த விவகாரத்தில் பொலிஸார் முழுமையாக சட்டத்தை மீறி செயற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய நீதிவான், அந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு பொலிஸாருக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை என்று சுட்டிக் அதற்கான அதிகாரம் காணி மீட்டல் மற்றும் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கே இருக்கிறது என்று சுட்டிக்காட்டி நீதிவான் சந்தேகநபரை விடுதலை செய்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



## நிறைவேற்று அதிகாரத்தை உடன் ரத்துச் செய்யுங்கள்

### இனங்காவிட்டால் பொது வேட்பாளரை நிறுத்த நேரிடும் என்கிறார் சோபித தேரர்

கொழும்பு,மே 30
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வதற்கு பிரதான கட்சிகள் இணங்காவிட்டால் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க நேரிடும் என்று சாதாரண சமூகத்துக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுலுவே சோபித தேரர் தெரிவித்தார்.
கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:-
இந்த பொதுவான வேட்பாளர் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட மூன்று மாதங்களில் நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்வார்.
நாட்டின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணஆர்வம்காட்டவிட்டால்,பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த நேரிடும் .-என்றார். (ச)

## தரம் 1 இல் மாணவர் தொகையை குறைக்கத் திட்டமிடுகிறது அமைச்சு

கொழும்பு,மே 30
பாடசாலைகளில் முதலாம் வகுப்பு ஒன்றில் இருக்கக்கூடிய ஆகவும் கூடுதலான மாணவர் தொகையை தற்போதைய 45 இலிருந்து 35ஆக குறைப்பதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டு வருகின்றது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
சில முன்னணி பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் 50 மாணவர்கள் வரை சிலவேளைகளில் சேர்க்கப்படுகின்றனர் என்று அவர் கூறினார்.
எனினும் அதனை 2016 ஆம் ஆண்டளவில் வகுப்பு ஒன்றில் 35 மாணவர்கள் எனக் குறைக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் பணித்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.
சர்வதேச நியமங்களின்படி ஒரு வகுப்பில் 30 மாணவர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று அவர் கூறினார். (ச)

## ஷிராணியின் கணக்கை ஆராய்வதற்கு தீர்மானம்



கொழும்பு,மே 30
முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வங்கிக் கணக்குகளை ஆராய்வதற்கு இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.
அதற்கமைய அவர் கணக்குகளை வைத்துள்ள வங்கிகளிடமிருந்து விவரங்கள் கோரப்படவுள்ளன.
இதன் முதற்கட்டமாக அடுத்த வாரத்தில் குறித்த வங்கிகளின் அதிகாரிகள் இந்த ஆணைக் குழு முன் தோன்றி முன்னாள் பிரதம நீதியரசரின் கணக்கு விவரங்களை வெளியிடவுள்ளனர்.
சட்டத்துக்குப் புறம்பான வகையில் சொத்துகளைச் சேர்த்தார் என்று குற்றச்சாட்டின் கீழ் இவர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## தரம் ஒன்றுக்கு மாணவரை இணைக்க 30 இற்கு முன்னர் விண்ணப்பியுங்கள்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மே 30
அரச பாடசாலைகளில் 2014 ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த பாடசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.
தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய நிபந்தனைகளை உள்ளடக்கிய சுற்றறிக்கை கல்வி அமைச்சால் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய 2014 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதியன்று 5 வயது பூரணமான பிள்ளைகள் அரச பாடசாலைகளில் தரம் ஒன்றுக்காக விண்ணப்பிக்க முடியும்.
வெற்றிடங்களின் எண்ணிக்கையிலும் குறைவான எண்ணிக்கையான விண்ணப்பப் படிவங்களைப் பெறும் பாடசாலைகள் மாத்திரம் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை நேரில் சமர்ப்பிக்க முடியும். எனினும் அதனை சமர்ப்பித்ததற்கான பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வது அவசியம் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ள விசேட புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதேவேளை சகல அரச மற்றும் கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்க்கும்போது வசதிகள் சேவைக் கட்டணமும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கட்டணமும், தவிர்ந்த வேறு கட்டணமோ, உதவிப் பணமோ பாடசாலைக்கு பெற்றுக் கொடுப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
99 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா மொபைல்ஸ்' மாவூசந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொபைல் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, ஜோதி புக் சென்டர் மன்னார் : 0232222052 'பீசாலை கஜானன்' கண்டி வீதி, பீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசக்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி வலைக்கிற்றி' முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' சிவன் கோவிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# காலமறிந்த தீர்ப்பு

சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த ''அந்நியன்'' படத்தை அநேகர் பார்த்திருப்பீர்கள். ''தண்டனை இல்லாததால்தான் தவறுகள் தொடர்கின்றன'' என்ற மையப்புள்ளியைக் கொண்டதாக அந்தப் படம் எடுக்கப்பட்டிருந்தது. மற்றவர்களைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் தம்முடைய சுயநலத்தை மாத்திரம் கருத்திற்கொண்டு சமூகத்துக்கு ஒவ்வாத விடயங்களில் ஈடுபட்டு வருபவர்கள், அந்நியன் வழங்கும் விகனிதமான தண்டனைகளுக்குப் பயந்து தவறு செய்வதில் இருந்து திருந்துகிறார்கள். அப்படித் திருந்தாதவர்களுக்கு நரகலோகத்தில் வழங்கப்படும் தண்டனை முறைகளை அந்நியன் வழங்குகிறார் என்பதாக அந்தப் படத்தின் கதை அமைந்திருந்தது.

வணிக ரீதியான, யதார்த்தத்தை கணக்கில் எடுக்காத வகையில் அந்தப் படம் இருந்தபோதும் அது சொல்லிச் சென்ற செய்தி மிக முக்கியமானது. அதாவது தண்டனைகளே தவறுகளைக் குறைப்பதற்கான ஒரே வழி. சிறுசிறு தவறுகள் கூட பெரிய அழிவுக்கு வித்திடலாம். எனவே சிறு தவறுக்கும் பெரும் தண்டனை கிடைக்கும் என்ற பயம் ஏற்பட்டால் சின்னத் தவறுகளைக்கூடச் செய்யாமல் மக்கள் மாறக்கூடும்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் மக்களுக்கு எறிகணை, குண்டு வீச்சு விமானங்கள், ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர் என்பவற்றுக்குத்தான் பயம் இருந்தது. வன்புணர்வு, பாலியல் சீழ்ிவு, கொலை, கொள்ளை போன்ற சமூகச் சீர்கேடுகள் எப்போதாவதும் அருமை பெருமையாகவே நடந்தன. அப்படி நடந்தாலும் அதற்கு கிடைக்கும் தண்டனை மரண தண்டனையாகவோ அல்லது வாட்டுவாகலில் மாதக் கணக்கில் ஒளிபுகாத பதுங்குழி வாசமாகவோ இருக்கும்.

குறிப்பாக சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களை நடுவீதியில் வைத்து புலிகள் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றினார்கள். அதனால் சிறுவர்களை தங்களது பாலியல் இச்சையைத் தீர்க்கும் கருவிகளாக கனவில்கூட எவரும் எண்ணுவதில்லை. இதனால் புலிகளின் காலத்தில் சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் மிகமிகக் குறைவாகவே பதிவாகியுள்ளன. அவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்களும் உயிருடன் இருப்பதற்கான சாத்தியங்களும் இருந்திருக்கவில்லை.

ஆனால் இப்போது நிலைமை அப்படியல்ல. என்ன செய்தாலும் தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லை என்ற நிலைமை. இதனால் இத்தனை காலமும் சில மனிதர்களுக்குள் உறங்கிக் கிடந்த காம மிருகம் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெளிக்கிளம்பியுள்ளது. அதனால் பத்திரிகைகளில் சிறுமி மீது வன்புணர்வு, மாணவி பாலியல் துஷ்பிரயோகம் போன்ற செய்திகளை அடிக்கடி காணமுடிகிறது. ஆனால் இந்தச் செயலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை கிடைத்ததாக எந்தச் செய்தியும் வெளிவந்திருக்கவில்லை. இந்த நிலையில்தான் 10 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உள்ளாக்கிய காமுகனுக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 17 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. மிகச் சரியான தருணத்தில் யாழ்.மேல் நீதிமன்றம் வழங்கிய இந்தச் சாட்டையடி போன்ற தீர்ப்பானது காமவெறியோடு சிறுவர்களைக் குறிவைக்கும் மிருகங்களைக் கட்டுப்படுத்துமா என்பதை காலம்தான் சொல்ல வேண்டும்.

# கேள்விக் குறியாகும் நாட்டின் இறையாண்மை

■ கந்தவனம் கோணேஸ்வரன்

தமிழர்களுக்கெதிரான முள்ளிவாய்க்கால் அவலம் நடந்து நான்காண்டுகள் நிறைவுற்றதன் பின்னரும்கூட இலங்கை அரசு இனவாதப் போக்கிலிருந்து இறங்கிவந்ததாகத் தெரியவில்லை. இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகளே தடையாக நிற்கிறார்கள் என்று கடந்த முப்பதாண்டு காலமாக ஆட்சி செய்த எல்லோரும் சொல்லி வந்தார்கள். இந்த வாய்ப்பாட்டைச் சில தமிழர்களும் ஒப்புவித்துவந்தார்கள். விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக இலங்கை அரசுக்கள் சித்திரித்ததை நம்பிய உலகம், 2009 தமிழர் பேரழிவின் பின்னர்தான் உண்மையை உணர்ந்துகொண்டது.

சர்வதேச நாடுகள் தனதாட்சிக்கு எதிராக நகரத் தொடங்குவதை உணர்ந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழர்களைச் சமஉரிமையுள்ள பிரஜைகளாக வாழவைப்பதாகவும், மாகாண சபை அதிகாரங்களுக்கு மேலாகச் சிந்தித்து அவற்றினூடாகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்துவைப்பதாகவும் உலகுக்கு அறிவித்தார். ஒரு நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் அவரது அறிவிப்பை உலக நாடுகள் சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக்கொண்டன. நாள்கள் போகப்போக, இலங்கை அரசின் போக்கும் யுத்த அவலக் கொடூரங்களின் வெளிப்பாடுகளும் உலகைச் சீற்றங்கொள்ள வைத்தன. இலங்கை அரசு உண்மையல்லாதவற்றையே பேசுகிறது; அதன் வாக்குறுதிகளும் அத்தகையனவே என்ற நிலைக்கு உலக நாடுகள் வந்ததன் பின்னர்தாம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இரண்டு தடவைகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இவ்விரு தீர்மானங்கள் மூலமும் இலங்கைஅரசுக்கு அழுத்தங்கள் தான் கொடுக்கப்பட்டனவேயொழிய உள்ளகத் தலையீடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. சுருக்கமாகச் சொன்னால் போர்க் காலங்களில் படைகள் தமிழர்களுக்குச் செய்த கொடூரங்களுக்குப் பரிகாரம் தேடுங்கள். தெளிவான மனதுடன் பேசி தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுங்கள் என்பவைதான் அவற்றின் கருப்பொருளாக அமைந்தன. ஆனால், இலங்கை அரசு இவற்றில் எதைச் செய்யவும் தயாராக இல்லை என்பதையே அரசின் செயற்பாடுகள் உணர்த்திவருகின்றன.

அபிவிருத்தி என்றபெயரில் படையினரின் விரைவான போக்குவரத்துக்கும், துரிதமான சிங்களக் குடியேற்றத்துக்கும் இசைவாகவே அரசு செயற்பட்டுவருகிறது. வடக்கிலும் கிழக்கிலும் அரச பிரதானிகளின் பெயர்களிலும், அவர்களுக்கு வேண்டியவர்களின் பெயர்களிலும் காணிகள் ஒதுக்கப்பட்டுவருகின்றன. தமிழர்களின் நிலங்கள் வழிபடுவதற்குக்கூட யாருமற்ற விகாரைகளாக மாற்றம் பெற்று வருகின்றன. படைத்தள விஸ்தரிப்பு என்ற பெயரில் வட பகுதியில் தமிழர்களின் உறுதிக் காணிகள்கூட அபகரிக்கப்படுகின்றன. இவையெல்லாம் வெற்றி கொள்ளப்பட்ட பிறநாடொன்றின்மேல், வெற்றிகொண்ட நாடு தனது இருப்பைப் பலப்படுத்துவதற்காக மேற்கொள்கின்ற நடவடிக்கைகள்போல்தான் அமைந்திருக்கின்றன. தமிழர்களை வெற்றிகொண்டதாகக் கருதித் தமிழர்கள் மீதான இனவொழிப்புத் தினத்தை பெருமெடுப்பில் வெற்றிவிழாவாகக் கொண்டாடும் இலங்கை அரசு, அன்றைய தினத்தில் தங்கள் நியாயமான உரிமைகளுக்காகப் போராடி உயிர்நீத்த உறவுகளின் நினைவாகப் பொது இடத்தில்கூடித் தமது துயரங்களை வெளிப்படுத்தும் உரிமையைக்கூடத் தமிழர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. இலங்கை அமைதியாகவும் ஆனந்தமாகவும் இருக்கிறது.

இவற்றைக் குழப்புவதற்கு இடமளிக்க மாட்டோம் என்றும், பௌத்த சிங்களவருக்கே இந்நாட்டில் முதலிடம்.

ஏனையோர்கள் பௌத்த சிங்களவர்களின் மனம்நோகாமல் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்றும் தவறான சிந்தனைகளை விதைத்து வருகிறது. தமிழர்களின் மனதை நான் அறிவேன். பொன்னம்பலத்தை தோற்கடித்து கொப்பேகடுவவுக்கு அதிக வாக்களித்தவர்கள் அவர்கள் என்று கோமாளித்தனமாகப் பேசவைக்கிறது. இந்தச் சின்னச் சிந்தனைகளின் உச்சங்கள், வடமாகாணசபைக்கான தேர்தல் இடம்பெறலாம் எனத் தெரிய வந்ததும் மிக மோசமான வகையில் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்த விடமாட்டோம் என்று ஒரு தரப்புச் சொல்கிறது. காணி, பொலிஸ் அதிகாரங்களை அகற்றினால்தான் வடமாகாணசபைத் தேர்தலை நடத்த அனுமதிப்போம் என்கிறது இன்னொரு தரப்பு. இவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு மாகாணசபைகளை ஒழித்து விடுவதற்கான தனிநபர் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார் மற்றுமொருவர். இவர்களில் எவரும் வெளியாள்களல்லர். அரசின் பார்வையில் நாட்டை நேசிக்கும் உன்னத சக்திகள்; அரசின் பங்காளிகள்; அரச இலக்கை முன்னெடுத்துச் செல்வதற்கான கடமையைச் சிரமேற் தாங்கியவர்கள். இவர்களின் வார்த்தைகள், செயற்பாடுகள் என்பவற்றைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. உத்தியோகபூர்வமாக அரசு வெளிப்படுத்தத் தயங்குகின்றவற்றை மக்களிடையே கொண்டுவரும் சக்திகள் இவைகள். வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூட, எவர் என்ன சொன்னாலும் வடமாகாணசபைத் தேர்தல் நடந்தே தீரும். ஏனைய விடயங்களில் அரசு காலப்போக்கில் கவனம் செலுத்தும் என்றுதான் சொல்லியிருக்கிறாரே தவிர, எவற்றையும் மறுத்துப் பேசவில்லை. இப்படியிருந்தும்கூட அரசு பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தில் உள்ளபடி காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபையிடம் கையளிக்க விரும்பவில்லை. இன்றுவரை அவ்வதிகாரங்கள் அரசின்வசமே இருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் சிங்களவர் அல்லாதவரின் மாகாண சபைகள் அமைந்துவிடும் என்ற அர்த்தமற்ற பயத்தைத் தவிர, அரசின் தயக்கத்துக்கு வேறு காரணங்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தென்னிலங்கை மாகாணசபைகளையும் மக்களையும் பொறுத்தவகையில் அதிகாரங்கள் யார் கையில் இருந்தாலும் எல்லாம் சீராகவே இருக்கும். ஆனால், வடக்குகிழக்கு மாகாணசபைகளையோ மக்களையோ பொறுத்த மட்டில் நிலைமை வேறானது. வடக்கு, கிழக்கு மக்கள் குடியேற்றங்களாலும் காணி அபகரிப்புகளாலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருபவர்கள். எனவே, அவர்களால் அமைக்கப்படும் மாகாணசபைகள் தம் மக்களையும் நிலத்தையும் பாதுகாத்துக்கொள்வதற்காகத் தமக்குக் கிடைக்கும் அதிகாரங்களை உச்ச அளவில் பயன்படுத்தவே முனையும். இது அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும். அத்தகைய ஒரு நிலைமையை எதிர்கொள்ள விரும்பாத அரசு முன்னேற்பாடாகவே காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான சட்டங்களை மாகாண சபைகள் செயற்படுத்தாவண்ணம் தடைபோட்டு வைத்திருக்கிறது. ஆனால், ஜாதிக ஹெல உறுமய கட்சியோ இன்னும் ஒருபடி மேலேபோய் பதின்மூன்றாம் திருத்தச் சட்டம் எனப்படும் மாகாண சபைகள் சட்டத்தையே அரசியல் அமைப்பிலிருந்து அகற்றிவிடுவதற்கான முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. இந்த முயற்சி வெற்றி பெறுமா இல்லையா என்பதைவிட அதன் நோக்கம் பாரதூரமானது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. எனினும், இத்தகைய சிங்கள இனவாத முயற்சிகளுக்கு சிங்கள மக்கள் எல்லோரும் துணைபோகிறார்கள் என்று கருதமுடியாது. விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார, டி.யு.குணசேகர, திஸ்ஸ விதாரண, போன்ற சக்திமிக்க பல மனிதர்கள் பகிரங்கமாகவே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவருகிறார்கள். அதேபோல் மல்வத்த பீட மகாநாயக்கர் மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இலங்கை அரசு உள்ளூர விரும்பினாலும் மாகாண சபைகள் சட்டத்தை ஒழித்துவிடும் முயற்சிக்கு அது ஆதரவு தெரிவிக்குமானால் அது தற்கொலைக்கு ஒப்பான முயற்சியாகவே அமையும். உலக நாடுகளை ஒட்டுமொத்தமாக அவமதிப்பதாகவும், இந்தியாவின் நல்லிணக்கத்தைக் காலில் போட்டு மிதிப்பதாகவுமே அமையும்.

பிரிந்து செல்வதைத் தவிர, வேறு முடிவு எதுவுமில்லை என்ற தீர்மானத்துக்குத் தமிழர்கள் அனைவரையுமே அழைத்துச் செல்லும் நிலைக்குக் கொண்டுபோய் விடும். இலங்கை இன்னமும் இறைமை, சுயாதிபத்தியம் என்றெல்லாம் பேசிக் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்க முடியாது. இறைமை, சுயாதிபத்தியம் என்பவையெல்லாம் ஒரு நாடு தன் விவகாரங்களைத் தானே கவனித்துச் செயற்படுகின்ற நிலைமை இருக்கும்வரையில்தான் நிலைத்து நிற்கும். தன் பிரச்சினைகளைத் தான் தீர்த்துக்கொள்ளத் தவறும்போதோ, விருப்பமற்று வாளாவிருக்கும் போதோ, தன் நாட்டவர்களின் ஒருபகுதியாரை அடிமைப்படுத்த முயலும்போதோ சுயாதிபத்தியமும், இறைமையும் தாமாகவே செயலிழந்து விடுகின்றன.

இந்த உண்மையை இந்தியா, ஒப்பரேஷன்பூமாலை நடவடிக்கைமூலம் இலங்கைக்குத் தெட்டத்தெளிவாக உணர்த்தியிருக்கிறது.

தம்மால் இறைமையைப் பாதுகாக்க முடியாது போய்விட்டதைப் பிறருக்குத் தெரியாமல் சட்டரீதியாக மறைப்பதற்காக ஜே.ஆர். எடுத்த சரணாகதி முயற்சிதான் இந்திய – இலங்கை உடன்படிக்கை என்பதை அரசியல் கற்றுக்குட்டிகளால்கூட உணரமுடிகின்றபோது, இலங்கை வறட்டு நியாயம் பேசுவதில் எவருக்கும் இலாபம் இருக்கப்போவதில்லை. காலத்துக்குக் காலம் வாய்ப்புக் கிடைக்கும் வேளைகளிலெல்லாம் தமிழர்களை ஒழித்துவிடவேண்டும் என்ற இனவாத கருத்துகளுக்கு ஊக்குவிப்பு வழங்கும் தன் போக்கை இனிமேலாவது மாற்றிக்கொண்டு இலங்கை என்ற நாட்டையும் அதன் இறைமையையும் பாதுகாப்பதற்கு அரசு முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடை நாசினிகளைப் பாதுகாப்பாக பாவிப்போம்

க.குகபாலசிங்கர்
பா. விதான உத்தியோகத்தர்
(பயிர் பாதுகாப்பு) விவசாயத்
திணைக்களம், யாழ்ப்பாணம்

தொடர்ச்சியாக அதிகரித்து வரும் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளமை நாம் முகம் கொடுக்கும் ஒரு சவால் ஆகும். ஆனால் இந்த அதிகரிப்புக்கு ஏற்ப நிலத்தின் அளவை அதிகரிக்க முடியாது. பயிர் செய்யும் நிலப்பரப்புக்கும் ஒரு எல்லைப்பாடு உண்டு. உலகின் அதிகரிக்கும் சனத்தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்ட பயிர் செய்யும் நிலத்தின் அளவு குறைவாகவே உள்ளது. 1965 இல் ஒரு தனிநபர் உணவுத் தேவைக்கான நிலத்தின் அளவு 4000 சதுரமீற்றர் ஆகவும் 1980 இல் 3000 சதுரமீற்றர் ஆகவும் 1988 இல் 2700 சதுர மீற்றர் ஆகவும் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2025 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 8500 மில்லியனாக இருக்கும் எனவும் தனிநபருக்கான உணவுக்காக பயிரிடும் நிலத்தின் அளவு 1600 சதுரமீற்றர் ஆகவும் இருக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனவே நாம் தனிநபர் உணவுத் தேவைக்காகப் பயிரிடும் நிலப்பரப்பில் இருந்து விளைச்சலை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை மேற்கூறப்பட்டவற்றில் இருந்து அறிந்து கொள்ள முடியும். அவ்வாறு அதிகரிக்க வேண்டுமெனில் பயிர்ச் செய்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட பயிர்ப்பாதுகாப்பு மிகவும் முக்கிய பங்கை வகிக்கும். இந்த நிலையில் பீடை நாசினிகளின் பங்கும் பிரதானமானதொன்றாகும். புதிய திருந்திய உச்ச விளைவு தரும் வர்க்கங்கள் நில அமைப்பு, மாற்றுப் பயிர்கள் சமச்சீர்ப் பசளைப் பிரயோகத்துடன் பயிர் பாதுகாப்பும் பங்களிப்புச் செய்தால் மட்டுமே அதிகரித்த விளைவு என்பது சாத்தியமாகும். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பில் பீடை நாசினிப் பாவனை தற்கால விவசாயத்தில் தனியிடத்தைப் பிடித்துள்ளது. பீடை நாசினிகள் கொடிய நச்சுத்தன்மை கொண்டவை என்பதனால் அவற்றைத் தவறாகப் பிரயோகிப்பதால் தெளிப்பவர்களும் சூழலும் பாதிக்கப்படலாம். பீடை நாசினி மூலம் நாம் எதிர்பார்க்கும் பீடைக் கட்டுப்பாட்டை அடைவதுடன் பாதுகாப்பற்ற முறையில் பாவிப்பதனால் கையாள்பவருக்கும் சூழலுக்கும் ஏற்படும் அபாயத்தை தவிர்த்துக் கொள்வதும் மிக முக்கியமானதாகும். விவசாயிகள் பீடைநாசினிகளைப் பிரயோகிக்கும் போது தங்களையும் சமூகத்தையும் சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பீடை நாசினிகளைத் தவறான வழியில் கையாள்வதனால் ஏற்படும் தீங்குகள் பற்றி அறியாத விவசாயிகள் தமது உற்பத்திகளை நாசினி விசிறிய மறு நாள்களிலேயே சந்தைப்படுத்துவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே விவசாயிகள் பீடை நாசினி



சம்பந்தமான அனைத்து விடயங்களிலும் பூரண அறிவைப் பெறுவதுடன் அதன் பாதுகாப்பற்ற பாவனை மூலம் ஏற்படக்கூடிய அபாயத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் இந்தக் கட்டுரையில் அடங்கியுள்ள ஆலோசனைகளை உரியமுறையில் கைக்கொள்ளுதல் வேண்டும்.

**01. பொருத்தமான பீடைநாசினிகளைத் தெரிவு செய்யுங்கள்**

பீடைநாசினிகள் கட்டுப்படுத்தப்படவுள்ள இலக்கின் அடிப்படையில் கீழ்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. பூச்சிநாசினி பூச்சிகளைக் கட்டுப்படுத்த
2. பூஞ்சண நாசினி பூஞ்சணங்களைக் கட்டுப்படுத்த
3. களை நாசினி களைகளைக் கட்டுப்படுத்த
4. சிற்றுண்ணி நாசினி சிற்றுண்ணிகளைக் கட்டுப்படுத்த
5. நத்தை நாசினி நத்தைகளைக் கட்டுப்படுத்த
6. கொறிப்பான் நாசினி கொறிப்பான்களைக் கட்டுப்படுத்த
7. விலாங்குப்புழு நாசினி விலாங்குப் புழுக்களைக் கட்டுப்படுத்த

எனவே எமது பயிரைத் தாக்கி சேதப்படுத்தும் இலக்கினை சரியாக இனம் கண்டு பொருத்தமான பீடை நாசினியைத் தெரிவு செய்தல் வேண்டும். இதனால் இலக்கு வினைத்திறனாகக் கட்டுப்படுத்தப்படும். உணவுச் சங்கிலியில் தேவையற்ற நஞ்சடைதல் தவிர்க்கப்படும். இலக்கற்ற பூச்சிகள், நன்மை தரும் பூச்சிகள் பாதுகாக்கப்படும். பீடைகள் எதிர்ப்புத் தன்மையை உருவாக்காது. இயற்கைச் சமநிலை பேணப்படும். சூழல் மாசடைதல் குறைக்கப்படும்.

பொருத்தமான பீடை நாசினியைத் தெரிவு செய்து அதனை வாங்கிய பின் கொண்டு செல்லும்போது

நன்றாகப் பொதி செய்யப்பட்டுள்ளதா? எனப் பார்க்கவும். தனியாக எடுத்துச் செல்லவும். உணவுப் பண்டங்கள் கால்நடை உணவுகள் முதலானவற்றுடன் கொண்டு செல்வதைத் தவிர்க்கவும். கொண்டு செல்வதற்கு சிறுவர்களை அனுமதிக் காதீர்கள். முற்பகல் வேளையில் எடுத்துச் செல்லவும். சிந்தினால் ஒற்றி எடுக்க துணித் துண்டை எடுத்துச் செல்லவும். பொதுப் போக்குவரத்து வாகனங்களில் எடுத்துச் செல்ல வேண்டாம்.

வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட பீடை நாசினியைக் களஞ்சியப் படுத்தி வைக்கும்போது. படுக்கை அறைகள், குசினி. குசினிக் களஞ்சிய அறை என்பவற்றில் களஞ்சியப்படுத்துவதை தவிர்க்கவும்.

சிறு பிள்ளைகள், செல்லப் பிராணிகளுக்கு எட்டாத உயரமான இடத்தில் பெட்டிகளில் தனியாக வைத்துப் பூட்டவும். பெட்டிக்கு இடும் பூட்டு சிறிய துவாரம் கொண்டிருத்தல் நன்று.

நெருப்புக்கு அண்மையில் அதிக உஷ்ணம், சூரிய ஒளி படுமிடங்களில் களஞ்சியப்படுத்துவதைத் தவிர்க்கவும். சேமிக்கும் பெட்டியை காற்றோட்டமான இடத்தில் வைக்கவும்.

**விசிறுவதற்கு முன் கவனத்திற் கொள்ள வேண்டியவை**

யார் விசிறுவது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

காயம் இல்லாதவர், நடுத்தர வயதுள்ளவர், ஆரோக்கியமானவர், அனுபவமுள்ளவர், பொறுப்புணர்ச்சி உடையவர்.

சிறுவர்கள், அங்கவீனர்கள், முதியவர்கள், பலவீனமுடையவர்கள் ஆகியோரை விசிறுவதற்கு அனுமதிக்க வேண்டாம்.

கடும் காற்று, மழை, அதிக வெயில் என்பவற்றைத் தவிர்க்கவும். தனியாக விசிறச் செல்ல வேண்டாம். உதவிக்கு ஒருவரை அழைத்துச் செல்லவும்.

செல்லும்போது வாளி, குறடு, சவர்க்காரம், மேலதிக பீச்சு முனை, மாற்று உடை, நாசினி அளக்கும் முகவை, பீச்சு முனை அடைப்பு எடுக்க தூரிகை என்பன கொண்டு செல்லப்படுவதை உறுதிப்படுத்தவும்.

கிணற்று வாளி, கால்நடைக்கு உணவு வைக்கும் வாளிகளை பாவனைக்கு உட்படுத்துவதைத் தவிர்க்கவும்.

தெளிகருவி ஒழுக்கு இல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தவும்.

ஒழுக்கு இருப்பது அவதானிக்கப்பட்டால் பழுது பார்த்து ஒழுக்கு இன்மையை உறுதி செய்யவும்.

நாசினி கலக்கும்போது கிணற்றுக்கு அல்லது கலக்கும் நீர் நிலைக்கு தூரத்தில் நாசினி, தெளிகருவி என்பவற்றை வைக்கவும். பீடை நாசினிப் போத்தலில் உள்ள சுட்டியை 2 தடவை மிகக் கவனமாக வாசிக்கவும்.

நாசினியை அளக்கும் முன் பாதுகாப்பு உடையை அணிந்து கையுறைகளைப் போட்டுக் கொள்ளுங்கள்.

நாசினியை அளப்பதற்கு மூடிகளைப் பயன்படுத்தாமல் அளவுசாடியைப் பயன்படுத்தவும். கையால் கலக்குவதைத் தவிர்த்து தடியினால் கலக்கவும்.

தாங்கியின் மூடி நன்றாக மூடியிருப்பதை உறுதிப்படுத்திய பின் தாங்கியை மற்றவரின் உதவியுடன் தூக்கி தோளில் கொழுவவும்.

**விசிறும்போது பின்வருவனவற்றை அனுசரியுங்கள்:**

திசையைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். எதுவித உணவு, பானம் அருந்துவதையும், புகைப்பிடிப்பதையும் தவிர்க்கவும். சீரான வேகத்தில் விசிறவும். பீச்சு முனை அடைத்தால் வாயினால் ஊதி அடைப்பெடுப்பதைத் தவிர்க்கவும். வாயினால் பீச்சு முனை கழற்றுவதைத் தவிர்க்கவும். குனிந்து கொழுவுவதைத் தவிர்க்கவும், விசிறும்போது விசிறும் வேலைகளைத் தவிர வேறு வேலை செய்வதைத் தவிர்க்கவும்.

**விசிறிய பின் கவனத்தில் கொள்ள வேண்டியன.**

தெளி கருவியை 2-3 தடவை சுத்தமான நீரினால் கழுவி சுத்தம் செய்யவும். கழுவிய நீரை தூரத்துக்கு எடுத்துச் சென்று குழியினுள் ஊற்றி மண்ணால் மூடவும். புறம்போக்கான இடத்தில் உடைகளைக் களைந்து சுத்தம் செய்யவும். உடலை நன்கு சவர்க்காரம் கொண்டு கழுவிச் சுத்தம் செய்யவும். மாற்று உடை உடுத்துக் கொள்ளவும். சுத்தமான காற்று வரும் நிழலான இடத்தில் சற்று நேரம் ஓய்வெடுக்கவும்.

**முதலுதவி**

**தோல் மூலம் நஞ்சூட்டல் ஏற்படல்**

நனைந்த உடைகளை அகற்றவும்.

சவர்க்காரம் கொண்டு கழுவவும்.

நன்றாக உடலைத் துடைத்து போர்வையால் போர்த்தி உடலைச் சூடாக வைக்கவும்.

கண்ணில் படும்போது கண்ணைக் கூடிய சீக்கிரம் கழுவவும்.

கண் இமைகளை நன்றாகத் திறந்து நீர் வடிந்து செல்லக்கூடிய வகையில் 15 நிமிடம் தூய நீரினால் கழுவவும்.

**சுவாசித்தலால் ஏற்படும் போது**

நோயாளியை நன்றாகக் காற்றோட்டமுள்ள இடத்துக்கு எடுத்துச் செல்லவும். இறுக்கமான உடைகளைத் தளர்த்தவும், நோயாளியை அமைதியாக இருக்கச் செய்யவும். தேவை ஏற்படின் செயற்கைச் சுவாசத்தை ஏற்படுத்தவும். உடலைப் போர்த்தி சூடாக வைத்திருக்கவும்.

**வாய் மூலம் ஏற்படும்போது**

வாந்தி எடுக்கச் செய்ய வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க லேபிளை வாசிக்க வேண்டும்.

நோயாளி உணர்வுள்ள நிலையில் உள்ளபோதே வாந்தியெடுக்கச் செய்யவும்.

விரல் ஒன்றை தொண்டைக்குள் விட்டு வாந்தி எடுக்கச் செய்யவும்.

வாந்தி எடுக்கும் போது முகம் குப்புற இருக்கச் செய்யவும்.

வாந்தி எடுக்க நீரைக் கொடுக்கலாம்.. ஆனால் பாலோ உப்பு நீரோ கொடுக்க வேண்டாம்.

வாயில் சளி, உணவு இருப்பின் துப்புரவு செய்யவும்.

நஞ்சூட்டப்பட்டவரை டாக்டரிடம் எடுத்துச் செல்லும் போது விசிறிய பீடை நாசினிப் போத்தலையும் கொண்டு செல்லவும்.

**விவசாயிகளின் கவனத்துக்கு**

காபோபியூறான், காபறில், புறப்பனில், குளோர்பைறிபொஸ் ஆகிய பீடை நாசினிகளின் இறக்குமதி விவசாயத் திணைக்களத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கிருமிநாசினிகளின் பாவனையை நிறுத்தி பாதிப்பினில் குறைந்த நாசினிகளைப் பாவிக்கவும். இந்த நாசினிகளுக்குப் பதிலீடு இல்லாத சந்தர்ப்பங்களில் இந்தக் கிருமிநாசினிகளின் பாவனையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைக்கேற்ப பாவிக்கவும். ★

# பேர்முடா முக்கோணம்

இது ஒரு முக்கோண கடல் பகுதி. இங்கு வந்த பல கப்பல்கள் மாயமாக மறைந்து போகின்றன. இந்தக் கடல்பகுதிக்கு மேலே பறந்த பல விமானங்களும் காணாமல் போகிறது. ஏன் என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. அவ்வாறு காணாமல் போன அனைத்து விமானங்களும் கப்பல்களும் எங்கே செல்கின்றன? என்ன ஆகின்றன? என்பது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது.

இந்தக் கடல் பகுதியில் எத்தனை விபத்துகள் நடந்தாலும் விபத்துக்குள்ளான கப்பல்களிலோ விமானங்களிலோ அல்லது அதனுள் இருந்தவர்களில் ஒருவர் உடல்கூட இன்னும் கிடைக்கவில்லை. உடல்களை விடுங்கள் - அவை சிறியவை. விபத்துக்குள்ளாகிய கப்பல்கள் அல்லது விமானங்களின் பாகங்கள் கூடக் கிடைக்காமல் மாயமாக மறைகின்றன. பல வருடங்களாக நடைபெற்றுள்ள காரணம் கூறப்படாத விபத்துக்கள்' எல்லாவற்றிலும், இப்படியான மாய மறைவுகள் தான் ஒரேயொரு ஒற்றுமை என்பது ஆச்சரியமாக இல்லையா?

இந்த இடத்தில் இருக்கும் மர்மம் என்ன என்பது பெரும் புரியாத புதிராகவே உள்ளது. பெர்முடா முக்கோணம் எனப்படும் இந்த இடத்துக்கு மற்றொரு பெயர், பிசாசு முக்கோணம் (Devil's Triangle).

முதலில் இந்தப் பகுதியில் பயணம் செய்த மிகப்பெரிய அளவிலான கப்பல் காணமல் போனது. பின்னர் அதனைத் தேடும் பணியில் நான்கு விமானங்கள் மற்றும் இரண்டு கப்பல்கள் அனுப்பப்பட்டன . பின்னர் அவையும் காணாமற் போனமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. பின்னர் அவர்கள் ஒரு ஏவுகணையை அந்த இடத்துக்குச் செலுத்தினர். என்ன ஆச்சரியம்? அதுவும் வெடிக்கவில்லை; காணாமற் போய்விட்டது.

இந்த இடத்தில் புவியின் ஈர்ப்பு விசை இல்லாதது தான் அனைத்து மாயத்துக்கும் காரணம் என்று கூறப்படுகிறது. சிலர் அங்கு உள்ளீடற்ற உலகின் நுழைவாசல் (hollow Earth Entrance) இருப்பதாகவும் கூறுகின்றனர். ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சிப் பலன்கள்

■ எம்.பி.ராமன்

## குடும்பத்தில் மகிழ்ச்சி; உற்சாகம்; வியாபாரத்தில் நல்ல இலாபம்



## மகரம்

(உத்தராடம் 2, 3, 4 பாதங்கள், திருவோணம், அவிட்டம்1, 2 பாதங்கள்)

பொதுப்பலன்

குருபகவான் 27.5.2013 முதல் சனிபகவானை அதிபதியாகக்கொண்ட உங்கள் ராசிக்கு ஆறாம் இடமாக விளங்கும் மிதுன ராசியில் சஞ்சரிப்பதால் அதிக பாதகங்களும் இல்லாமல் தேவைக்கு மேல் கொடுக்காமல் சரிசமமாகவே வழங்கவிருக்கிறார். பொதுவாக இந்த ராசிக்காரர்கள் எதற்கும் அஞ்சாதவர்களாகவும், வாட்டசாட்டமாக எதையும் எதிர்த்து நிற்கும் பலசாலியாகவும் இருப்பார்கள். தோற்றத்திலேயே எதிரிகளை பயமுறுத்தி வைத்திருப்பார்கள்.

வலிய சென்று வம்பிழுத்து மாட்டிக் கொள்வார்கள். நாளையைப் பற்றி நாளைப் பார்த்துக் கொள்ளலாம். இன்று இருக்கிறதா அது போதும் என்ற மனநிலையே பெரும்பாலானவர்களுக்கு இருக்கும். தொழில் திறமையும், வியாபார தந்திரமும் கைவரப் பெற்றவர்கள்தான் என்றாலும் சரிவர கவனிக்க மாட்டார்கள். அதிகம் ஓய்விலேயே ஜாலியாக ஊர் சுற்றி பொழுதை கழிப்பதிலேயே ஆர்வமாக இருப்பார்கள். அதிகம் சொல் புத்தியும் இருக்காது. சுய புத்தியும் இருக்காது.

நூறுரூபாய்சம்பாதித்து இருநூறுக்கும் செலவு வைத்திருப்பார்கள். அதிக நண்பர்கள் உடனிருந்தாலும் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் இவர் செய்யும் செலவுக்காகவே நட்பாகப் பழகுவார்கள். சொல்லிலும் செயலிலும் ஒரு வேகம் இருக்குமே தவிர விவேகம் இருக்காது. பொலிஸ், வழக்கு, தண்டனை என அடிதடிகளில் பழக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

தெய்வபக்தி இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்கள். மனத்துக்குள்ளேயே கும்பிட்டு வேண்டிக் கொள்வார்கள். குடும்பத்தில் ஏதேனும் சண்டை சச்சரவுகள் இருந்து கொண்டே இருக்கும். இவரைப் புரிந்துகொள்பவர்கள் வெகு சிலர் மட்டுமே இருப்பார்கள். இந்த ராசியில் மட்டும் இருந்தால் கோடீஸ்வரர்களாக இருப்பார்கள். இல்லையென்றால் கூலி வேலை செய்பவர்களாக இருப்பார்கள். எல்லா திறமையும் பெற்றிருந்தாலும் அதைப் பயன்படுத்திக் கொள்வதிலும், வருமானம் ஈட்டுவதிலும் சொற்ப எண்ணிக்கையில் தான் இருப்பார்கள். மனைவி மற்றும் பிள்ளைகளிடத்தில் அன்பாகப் பழகுவார்கள். அவர்களின் தேவைகளை கடன் பட்டாவது பூர்த்தி செய்வார்கள். பிள்ளைகளை நன்கு படிக்க வைப்பார்கள். பணம் செலவு பற்றி கலைப்படாமல் பெரிய பள்ளிகளில் சேர்ப்பார்கள். இவர்களின் குணத்துக்கேற்ற மனைவி அமைவார்கள். அதிர்ந்து பேச மாட்டார்கள். இவர்களின் பேச்சுக்கு எதிர் பேச்சு பேசமாட்டார்கள். படித்து, வேலையில் இருக்கும் மனைவி அமைவது இந்த ராசிக்காரர்கள் அதிர்ஷ்டமாகும்.

முதலில் இவர்கள் விட வேண்டியது முன்கோபத்தைதான். யாரையும் வேண்டும் வேண்டாம் என்று வைத்துப் பார்க்க மாட்டார்கள். இந்த குணத்தை அடியோடு மாற்றிக் கொள்ள வேண்டும். தேவையில்லாத பிடிவாதம் வேண்டாம். யாரே செய்த குற்றத்துக்காக முன்னின்று வாதாடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

அலுவலகத்தில் உயரதிகாரிகளின் கருணைப்பார்வையால் சம்பள உயர்வு, கேட்டிருந்த இடமாற்றம் பெறுவார்கள். சகோதரி மற்றும் பிள்ளைகளின் திருமணத்துக்கான ஆரம்ப கட்ட வேலைகள் தொடங்குவார்கள். கேட்டு வைத்திருந்த பணத் தொகை உரிய நேரத்தில் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பங்காளிகள் குடும்பத்துடன் தெய்வ திருத்தலங்களுக்குச் சென்று வருவார்கள். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

வெளியூர் பயணம் அலைச்சலை ஏற்படுத்தினாலும், முக்கிய நபரின் சந்திப்பு நிகழும். அவரின் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். எண்ணெய், சிமெந்து, காகிதம், வாகனம், தானிய வகைகள், உணவுப் பொருள்கள் நல்ல இலாபம் கிடைக்கும். எந்தக் காரியத்தை செய்யும் போதும் தாய் தந்தையின் ஆலோசனையையும் ஆசியையும் கேட்டு அதன்படி நடக்கத் தவற வேண்டாம்.

குருபகவான் அருளைப் பெற வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து, அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரித்து பக்தியுடன் வணங்கி வர வேண்டும். முதலில் விநாயகப் பெருமானையும் பின் குரு பகவானையும், பிறகு உங்கள் ராசிக்கு அதிபதியான சனிபகவானையும் வணங்க வேண்டும்.

பெண்களுக்கு

சதாசர்வகாலமும் தாய் வீட்டினரைப் பற்றியே பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். நல்ல வேலையில் கைநிறைய சம்பாதித்தாலும் குறைகளையே அதிகம் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அடுத்தவர்களைப் பார்த்து தன்னை ஒப்பிட்டுப் பார்க்கும் குணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். சேமிப்பதிலும், செலவழிப்பதிலும் சரிசமமாக நடந்துக் கொள்வார்கள்.

மாணவ - மாணவிகளுக்கு

டி.வி., சினிமா, கேளிக்கை நிகழ்ச்சிகள் பார்ப்பதை குறைத்துக்கொண்டு, படிப்பில் இன்னும் ஆர்வமும் கவனமும் செலுத்த வேண்டும். சக மாணவர்கள் உங்களைப் பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னேறிக் கொண்டிருப்பதை கண்டு வருந்த வேண்டியிருக்கும். அதனால் குடும்பத்தில் பிரச்சினைகளையும், தாய், தந்தையின் மோதல் போக்கையும் மனதில் ஏற்றிக் கொள்ளாமல் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறும் லட்சியம் ஒன்றை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும்.

**27.2.2013 முதல் 9.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், மூன்றாம்பாதம், செவ்வாய் சாரத்தில், சஞ்சரிக்கிறார் இந்தக் காலக்கட்டத்தில் தொழிலில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. தொழிலில் அதிக போட்டி நிலவுவதால் அதை சமாளிக்க வேண்டியிருக்கும். புதிய கிளைகள் ஆரம்பிப்பதில் அவசரம் காட்ட வேண்டாம்.

மாணவ, மாணவிகள் நேர்முகத்தேர்வில் தேர்வாகி உடனடியாக வேலை வாய்ப்பை பெறுவார்கள். ஆண்டு விழா, போட்டிகளில் கலந்து கொண்டு பெற்றோருக்கு ஆசிரியர்களுக்கும் பெருமைசேர்ப்பார்கள். படிப்பிலும் நல்ல முன்னேற்றம் காணப்படும். புதிய மாணவர்களின் நட்பு கிடைக்கும்.

**10.6.2013 முதல் 24.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், நான்காம் பாதம், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கிறார் இந்தக் காலக்கட்டத்தில் வெளியூர் பயணம் மிகுந்த உடல் சோர்வையும், மனவேதனையையும் கொடுக்கும். கொடுத்த கடன் திரும்ப வாங்குவதற்குள் படாதபாடு பட வேண்டியிருக்கும். ஓரளவுக்கு வருமானம் இருந்தாலும் அதற்கான செலவும் பின்னாலேயே வந்து கொண்டிருக்கும். பூர்வீக சொத்து பிரிப்பதன் மூலம் வரும் தொகையை நிலம், நகைகளில் முதலீடு செய்வது பயனளிக்கும். பிள்ளைகளிடமிருந்து மகிழ்ச்சியான செய்தி வரும்.

**25.6.2013 முதல் 8.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், முதல் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். உடல் நிலையில் சிறு சிறு மாற்றம் ஏற்படும். குறைந்த அளவு மருத்துவ செலவு செய்ய வேண்டியிருக்கும். உடன் பிறந்தோரிடம் தேவையில்லாமல் பகை உணர்வு தோன்றும். உற்சாகத்துடன் அனைவரிடமும் கலகலப்பாக இருந்தாலும் ஒரு வித வெறுமை இருந்து கொண்டே இருக்கும். பணவரவு நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் எந்த வித சிக்கலும் இருக்காது. வருவதிலும் கொஞ்சமேனும் சேமிப்பது நல்லது.

**9.7.2013 முதல் 23.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், இரண்டாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் செய்ய நினைத்த காரியங்கள் அனைத்தும் எந்த விதமான சிக்கலும் இல்லாமல் நடந்தேறும். தொழில் போட்டிகளை சமாளிக்க வேண்டியிருக்கும். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும்.

**24.7.2013 முதல் 8.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், மூன்றாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பெற்றோரிடம் இருந்து வந்த மோதல் போக்கை கைவிட்டு இணக்கமாவார்கள்.

கூலித்தொழில் செய்து கொண்டிருந்தவர்கள் சொந்தமாக சுய தொழில் ஆரம்பித்து அதிக வருமானம் ஈட்டுவார்கள். அக்கம் பக்கத்து வீட்டினரின் ஆதரவு பெருகும். குடும்பத்தில் ஏற்படும் சுப நிகழ்ச்சிக்காக அலைச்சல் அதிகரிக்கும்.

**9.8.2013 முதல் 26.8.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதத்தில், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பிள்ளைகளிடம் கண்டிப்புடன், எந்த நேரமும் சிடுசிடு என்று இருப்பதை விட்டுவிடுங்கள். நெருங்கியப்பழகி அவர்களின் மனதில் என்ன இருக்கிறது என்று புரிந்து கொண்டு நிறைவேற்றுங்கள்.

தொழில் ஏற்ற இறக்கம் இரண்டும் இருக்கும். புதிய கிளைகள் தற்போது வேண்டாம். போட்டியின் காரணமாக முதலீடு இழப்பு ஏற்படும். உணவு விஷயத்தில் எச்சரிக்கையாக இருங்கள்.

**27.8.2013 முதல் 16.9.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும். புதிய வீடு மற்றும் புதிய வாகனம் வாங்குவார்கள். நீண்ட காலமாய் தள்ளிப்போய்க் கொண்டிருந்த பிள்ளையின் வேலைக்கான உத்தரவு வந்து சேரும். மனைவின் உடல்நிலையில் சிறுசிறு வியாதிகள் வந்து விலகும். வெளிநாட்டிலிருந்து வந்த உறவினர்களின் ஆதரவு உதவியாக இருக்கும். பெற்றோர்களின் உடல் நிலை நன்றாக இருக்கும்

**17.9.2013 முதல் 18.10.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். வாடகை வீட்டில் குடியிருப்போர் வீட்டு சொந்தக் காரர்களிடம் ஏற்படும் பிரச்சினையால் வேறு வீடு மாறும் சூழ்நிலை உருவாகும். அக்கம் பக்கத்து வீடுகளிலும் விரோதப் போக்கு ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் அதிகரிக்கும். காதல் விவகாரங்களில் ஈடுபடும் மகன், மகளுக்கு ரகசிய திருமணம் செய்து வைக்க நேரிடும். அதனால் அலைச்சலும், மன உளைச்சலும் உண்டாகும்.

**19.10.2013 முதல் 13.11.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தொழிலாளர்களுக்கு நிறைவான சம்பளம் கிடைக்கும்.

சகோதர, சகோதரிக்கு நல்ல முறையில் சீரும், சிறப்புடன் திருமணம் செய்து வைப்பார்கள். அலைச்சல், வெளியூர் பயணம் ஆகியவற்றால் உடல்நிலை பாதிப்படையலாம். பெற்றோர் மற்றும் மனைவியின் ஆலோசனை பேருதவியாக இருக்கும்.

**14.11.2013 முதல் 1.12.2013 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிலையில் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், சஞ்சரிக்கிறார். உத்தியோகம் பார்ப்பவர்கள் வேறு ஓர் ஊழியர் செய்த தவறுக்காக தண்டனை பெறுவார்கள்.

மாணவ, மாணவிகள் தங்கள் திறமையால் வெளி உலகத்தினரின் பாராட்டுக்கும், மதிப்புக்கும் ஆளாவார்கள். அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியால் மேற்படிப்பும் நல்ல விதமாக முடிப்பார்கள். வெளிநாட்டில் வேலை செய்யும் மோகம் அதிகரிக்கும். பெற்றோர்களின் உடல் நிலையை கவனித்துக்கொள்ளவும்.

**2.12.2013 முதல் 2.1.2014 வரை**

இப்போது குருபகவான் தன் வக்கிர நிலையை மாற்றிக் கொள்ளாமல் புனர்பூச நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில், தொடர்ந்து சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் தொழிலாளர்கள் எதிர்பார்த்த ஊதிய உயர்வு போன்றவை தாராளமாக பெறுவார்கள். வியாபாரிகள் முதலுக்கு இரட்டிப்பு இலாபம் கிடைக்கும். தொழில் போட்டியை சமாளிக்க ஏற்படும் சிரமங்களை தவிர்க்க முடியாது. புதிய கிளைகளை தொடங்குவதன் மூலம் தொழில் விருத்தியடையும். பொருளாதாரம் சிறப்பான நிலைக்கு உயரும்.

**3.1.2014 முதல் 26.1.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம் தொடர்ந்து தனது நிலையை மாற்றிக் கொள்ளாமல் வக்கிர நிலையிலேயே சஞ்சரிப்பதால், பிள்ளைகளின் மேற்படிப்புக்கு அதிக செலவு செய்ய வேண்டியிருக்கும்.

வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். புதிய தொழில் தொடங்குவதற்கான நிதியுதவி வந்து சேரும். அதனால் மிக உயர்ந்த நிலைக்கு செல்வீர்கள். வீடு, நிலம், வாகனம், வீட்டுக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள்.

**27.1.2014 முதல் 11.3.2014 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிவர்த்தி பெற்ற நிலையில் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். மாணவ, மாணவிகள் படிப்புக்குத் தேவையான உபகரணப் பொருள்களுக்கு சுயதொழில் மூலம் பணம் சம்பாதிப்பார்கள். படிப்பிலும் நல்ல புள்ளிகள் பெறுவார்கள். கெட்ட நண்பர்களை கண்டுகொண்டு அவர்களிடமிருந்து விலகுங்கள். குடும்பத்தில் மகிழ்சி உண்டாகும்.

**12.1.2014 முதல் 6.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம்முதலாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் தொழிலில் ஏற்படும் போட்டியின் காரணமாக போட்டியாளர்களிடம் பகை ஏற்படும்.

நான்கு காரியங்கள் செய்து முடிக்க நினைப்பீர்கள். அதில் ஒன்று மட்டுமே நடக்கும். மற்ற காரியங்கள் தள்ளிப்போகும். உடன் பிறந்தோரிடம் கடன் கேட்பதன் மூலம் மனஸ் தானம் ஏற்படும். கடனுக்கு நெருக்கடிகள் அதிகரிக்கும்.

**7.5.2014 முதல் 25.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் எந்த காரியம் செய்ய நினைத்தாலும் அவசரப்பட வேண்டாம். பெற்றோர்களின் ஆலோசனையைக் கேட்டு அதன் படி நடந்து கொள்ளுங்கள். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். கடன் தொல்லை குறையும்.

வீடு மீது வாங்கிய கடன் கட்டி முடிக்கப்பட்டு சொந்தமாக்கிக் கொள்வார்கள். நீண்ட காலமாய் ஏங்கித் தவித்த தம்பதிகளுக்கு புத்திரபாக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் பெருகும். உடன் பிறந்தோரின் திருமண பேச்சு ஆரம்பமாகும்.

**26.5.2014 முதல் 11.6.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் நினைத்தது எல்லாம் வெற்றியாக முடியும். வியாபாரம் செழித்து இலாபத்தைக் குவிக்கும். வருவது அத்தனையும் செலவு செய்யாமல் நிலம், வீடு, நகைகளில் முதலீடு செய்யுங்கள். வெளிநாட்டுப் பிள்ளைகளிடமிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு அரசிமிடமிருந்து வரும் அறிக்கை பல சலுகைகளை வழங்கும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடம்பனில் ஹெரோயினுடன் சிக்கிய நபர் விளக்கமறியலில்

மன்னார், மே 30

மன்னார் அடம்பனில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மன்னார் குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் அடம்பனிலுள்ள வீடொன்றில் கடந்த வியாழக்கிழமை தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய சிறிய பொதியொன்று கைப்பற்றப்பட்டதுடன் நபரொருவரும் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் விடத்தல்தீவு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார். இந்த நபர் மீதான விசாரணைகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து மறுநாள் காலை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்டார்.

பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் 14 தினங்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று வாரமாக குற்றத் தடுப்புப் பொலிஸார் போதைப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் முகமாக சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டத்தின் ஒரு பகுதியை கையளிக்க ஏற்பாடு

அக்கராயன்,மே 30

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள கரும்புத் தோட்டத்தின் ஒரு பகுதி கரும்பு ஆராய்ச்சி சபைக்கு வழங்கப்படவுள்ளது.





ஸ்கந்தபுரம் கிராமத்திலுள்ள 100 ஏக்கர் கரும்புத் தோட்டம் இராணுவத்தின் பிடியின் கீழ் தற்போது உள்ளது. இதில் 57 ஏக்கர் காணியே கரும்பு ஆராய்ச்சி சபைக்கு வழங்கப்படவுள்ளது.

கரைச்சி பிரதேச செயலகத்தினால் மேற்படி காணி அளவீடு செய்யப்பட்டு கரும்பு ஆராய்ச்சி சபைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இந்தக் கரும்பு ஆராய்ச்சி சபைக்கு வழங்கப்படும் காணியில் சர்க்கரை ஆலையொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடப்பெயர்வுகளுக்கு முன்னர் இந்த 100 ஏக்கர் காணியில் கரும்பும், நெல்லும் செய்கை பண்ணப்பட்டன. இங்கு இயங்கிய கரும்பு ஆலை செயலிழந்ததை அடுத்தே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

புலிகளுக்குரிய காணி என்ற பெயரில் இராணுவம் நிலை கொண்டிருப்பதன் காரணமாக 100 ஏக்கர் நிலமும் தரிசு நிலமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## உரிய விளைச்சலைத் தராத பாதிக்கப்பட்ட தென்னைகள்



அக்கராயன்,மே 30

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கடந்த காலப் போரின்போது உயிர் தப்பிய தென்னைகள் போர்ப் பாதிப்புக் காரணமாக உரியளவு தேங்காய்களைத் தர முடியாத நிலையில் உள்ளதாக தெங்குச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

போரின் பாதிப்புக்களிலிருந்து உயிர் தப்பியுள்ள இந்தத் தென்னைகள் எறிகணைகள் மற்றும் துப்பாக்கி ரவைகளினால் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாகவே போதிய தேங்காய்களை உற்பத்தி செய்ய முடியாத நிலையில் இவை உள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்போது இத்தகைய தென்னைகளுக்குப் பதிலாக புதிய தென்னங்கன்றுகளை நடும் முயற்சியில் தெங்குச் செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அரச உதவிகள் தமது தென்னைச் செய்கைக்கு அதிகளவில் தேவைப்படுவதாக தென்னைச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### துணுக்காய், கல்விளான் கிராமத்தில்

## சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை

அக்கராயன், மே 30

துணுக்காய் கல்விளான் கிராமத்தில் வயல் காணியற்ற குடும்பங்களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு அரச அதிபர் தலைமையில் கல்விளான் கிராமத்தில் இடம்பெற்ற சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தின்போது காணியற்ற 70 குடும்பங்கள் தமக்கு சிறுபோக நெற்செய்கைக்குரிய காணிகளை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தன.

இதனைத் தொடர்ந்து பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டு 18 ஏக்கர் நிலம் சிறுபோக நெற்செய்கைக்காகத் தயார் செய்யப்பட்டது.

மேலும் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் புதிய சிறுபோக நெற்செய்கைப் பகுதிக்கு வாய்க்கால் அமைத்து நீர் வழங்கலை மேற்கொள்ளும் பொறுப்பு வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இதுவரை நீர் வாய்க்கால்கள் அமைக்கப்படாததால் சிறுபோக நெற்செய்கையை முழு அளவில் மேற்கொள்ளமுடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

தமது அவல நிலை தொடர்பாக முல்லைத்தீவு அரச அதிபர், துணுக்காய் பிரதேச செயலர், வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (க-18)

## நிரந்தரக் கட்டடம் இல்லாத மட்டுவில்நாடு அ.த.க.பாடசாலை

அக்கராயன்,மே 30

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் நிரந்தர கட்டடம் ஒன்று கூட இல்லாத நிலையில் மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை இயங்கி வருகின்றது.

தற்போது 65 மாணவர்களுடன் இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றது.

1991 ஆம் ஆண்டு பூநகரி மீது இராணுவத்தினர் மேற்கொண்ட வலம்புரி படை நடவடிக்கையின்போது இந்தப் பாடசாலை மூடப்பட்டது. மீண்டும் 2012 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.


கிணறு, மலசலகூட வசதிகள் உட்பட எந்தவித அடிப்படை வசதிகளும் இந்தப் பாடசாலையில் இல்லை. போக்குவரத்து நெருக்கடியையும் மாணவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் 300 மாணவர்கள் கல்வி கற்றுவரும் நிலையில் 6 ஆசிரியர்கள் மட்டுமே பணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மாடுகளுக்கு இரையாகின சுவையான பலாப்பழங்கள்

புதுக்குடியிருப்பு,மே 30

முன்பள்ளிக் கட்டடத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் 75 பலாப்பழங்கள் மாடுகளுக்கு இரையாகின.



இந்தச் சம்பவம் உடையார் கட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

உடையார்கட்டுப் பகுதிக்கான கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் ஒன்றை அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் நடத்துவதற்கு நிர்வாகத்திடம் அனுமதி கோரப்பட்டது. ஆனால் அதற்கு முன்பள்ளி நிர்வாகம் மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இதனால் ஆத்திரமடைந்த கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர் முன்பள்ளி வளாகத்திலிருந்த பலாமரங்களில் காணப்பட்ட பலாப்பழங்களை பாலர் பாடசாலை நிர்வாகமோ அல்லது மாணவர்களோ பயன் படுத்தக்கூடாது என எச்சரிக்கை விடுத்ததுடன் மரங்களில் காணப் பட்ட சுமார் 75 பலாப்பழங் களை வெட்டி மாடுகளுக்கு இரையாக வழங்கியுள்ளனர்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் தொடர்பாக விசனமடைந்துள்ள முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர் இது தொடர்பாக அந்தப் பகுதி கிராம சேவகரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-400)

## வேப்பங்குளம் வீட்டுத் திட்டத்தில் திருட்டு முயற்சி

நெளுக்குளம்,மே 30

வவுனியா வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்ற திருட்டு முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத்திட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரவு 8 மணியளவில் திருடர்கள் கூரையைப் பிரிக்க முற்பட்டபோது அந்த வீட்டுக்கு அருகில் வசிக்கும் கூலித்தொழிலாளர்கள் இதனைக் கண்டதும் கூக்குரல் இட்டனர். இதனையடுத்து அந்த ஊர் மக்கள் திரண்டு வந்த போது திருடர்கள் சைக்கிள் ஒன்றை அந்த இடத்தில் கைவிட்டு விட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாததால் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மேலும் வீதிகள் உரிய வகையில் அமைக்கப்படாமையாலும், அரச ஊழியர்கள் குடிபுகாமையினாலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக இங்கு வசிக்கும் அரச ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-402)

## செஞ்சிலுவையின் கிளிநொச்சிக் கிளைக்கு புதிய ஆளுநர்சபை தெரிவு

கிளிநொச்சி,மே 30

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் புதிய ஆளுநர்சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டம் கடந்த 26 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் முன்னாள் தலைவர் த.குருகுலராஜா தலைமையில் ஆரம்பமானது.

வரவேற்புரையை எஸ்.நித்தியானந்தம் நிகழ்த்தினார். தலைமையுரையைத் தொடர்ந்து கிளையின் முதலுதவிப் பயிற்சியில் உயர்தரத்தில் சித்தி பெற்றவர்களுக்கும் சர்வதேச செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு கடந்த 4 ஆம் திகதி நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கிளையின் நிர்வாக அறிக்கையினையும் கணக்கறிக்கையினையும் கிளையின் நிறைவேற்று அலுவலர் பீ.இராஜசிறீகாந்தன் சமர்ப்பித்தார்.

இறுதியாக புதிய ஆளுநர் சபைத் தெரிவினை அதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட குழுவினர் மேற்கொண்டனர். அனைத்துப் பதவிகளுக்கும் ஒவ்வொரு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதால் தெரிவுகள் ஏகமனதாக இடம்பெற்றன.

கிளையின் புதிய ஆளுநர் சபையில் தெரிவு செய்யப்பட்டோர் பின்வருமாறு காணப்படுகின்றது.

தலைவர்- சு.தர்மரட்ணம், செயலாளர்- த.சேதுபதி, பொருளாளர்- தி.சிவரூபன், உப தலைவர்- செ.சிவகுருநாதன், ஆளுநர் சபை உறுப்பினர்கள்- எம்.சி.எல்.மனுவல், ச.பெர்னாந்து, க.சச்சிதானந்தசிவம், இ.செல்வராசா, ஆ.இராசரத்தினம், ச.சந்திரசேகரம்,





தொடர்ந்து புதிய ஆளுநர் சபையில் தெரிவு செய்யப்பட்டோர் தம்மை அறிமுகம் செய்தனர். இறுதியாக செயலாளர் த.சேதுபதி நன்றியுரை நிகழ்த்தினார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச்செயலக பிரதிநிதியாக சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் எஸ்.பாலகிருஸ்ணன் கலந்து கொண்டார். (க-405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிக்கு தீக்குளிப்பு தியாகமல்ல மோசமான முன்னுதாரணமே

## எல்லாவல மேதனாந்த தேரர் சாடல்

''பிக்குகள் அனைவரும் கொழும்புக்குப் படையெடுத்து வந்து தீக்குளித்தாலும் மிருக வதையைத் தடுத்து நிறுத்த முடியாது''

- இவ்வாறு தெரிவிக்கின்றார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர். எல்லாவல மேதானந்த தேரர். ''தீக்குளித்ததன் மூலம் இந்திரரத்ன தேரர் நாட்டுக்கும் உலகுக்கும் மோசமான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளார். தீக்குளித்து உயிரை மாய்த்துக் கொள்வது பிரச்சினைக்குத் தீர்வாகுமா?என்றும்அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

''எனவே, இவ்வாறான செயற்பாடுகளில் எவரும் ஈடுபடக்கூடாது. இந்தப் பிக்குவின் உயிரிழப்பைத் தியாகம் எனக் கருதிவிட முடியாது. உயிரை மாய்த்துக் கொள்வதன் மூலம் மாடு அறுக்கப்படுவதையோ அல்லது மிருகங்கள் கொல்லப்படுவதையோ தடுத்துவிட முடியாது. அதேவேளை, இதை சட்டத்தால் மாத்திரமும் செய்துவிட முடியாது. இது விடயத்தில் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அமைச்சரை உரையாற்ற விடாது பிக்குகள் கூச்சலிட்டு எதிர்ப்பு

## தேரரின் இறுதி நிகழ்வில் பெரும் அமளி

''உங்களது பேச்சு இங்கு தேவையில்லை'' என்று போவத்தை வண. இந்திர ரத்ன தேரரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அரச நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன உரையாற்றும்போது பிக்குகள் சிலர் கூச்சலிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் பெரும் அமளி ஏற்பட்டது.

இதையடுத்து பெரும் சிரமத்திற்கு மத்தியில் தமது உரையை அவசர அவசரமாக நிறைவு செய்தார் அமைச்சர் ஜோன் செனவிரட்ன.

தலதா மாளிகை முன்பாக தீக்குளித்து உயிரிழந்த போவத்தே இந்திர ரத்ன தேரரின் இறுதிச் சடங்கு கஹவத்தையில் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற போதே இவ்வாறு இடையூறு விளை விக்கப்பட்டுள்ளது.

சிங்கள ராவய எனத் தம்மை இனங்காட்டிக் கொண்ட சிலரே அமைச்சர் உரையாற்றும் போது கூச்சலிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போவத்தை இந்திரரத்ன தேரரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அமைச்சர் ஜோன் செனிவிரட்ண, தேரரின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து உரையாற்றியுள்ளார்.

அமைச்சர் உரையாற்றியமைக்கு எதிர்ப்பு தெரிவித்த சிலர், உங்களது பேச்சு இங்கு தேவை யில்லை எனக் கூச்சலிட் டுள்ளனர்.

இதனால் அமைச்சர் தமது உரையை இடைநிறுத்தியபோது, அமைச்சர் பேசுவதற்கு இடமளியுங்கள் என இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித்த தேரர் குறித்த தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தபோதும், அவர்கள் தொடர்ந்தும் கூச்சலிட்டுள்ளனர்.

இந்நிலையில் தமது உரையை முழுமையாகத் தொடர முடியாமல் அவசர அவசரமாக நிறைவு செய்துள்ளார் அமைச்சர் செனவிரட்ன.

### நானாட்டான் ம.வியில் சின்னம் சூட்டும் விழா

மன்னார்,மே 30

நானாட்டான் மகாவித்தியாலயத்தின் புதிய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் இடம் பெற்றது.

அதே தினம் பழைய மாணவ தலைவர்களுக்கு பாராட்டு விழா, புதிய உயர்தர வகுப்புக்களின் ஆரம்பம், ஆசிரியர்களின் பாதுகாவலரும் டிலாசால் அருட் சகோதரர்களின் ஸ்தாபகரும் ஆகிய புனித ஜோன் பப்ரிஸ்ட் டிலாசால் அவர்களுக்கான விழா என்பன பாடசாலையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு இலங்கை டிலாசால் அருட் சகோதரர்களின் தலைவர் அருட் சகோதரர் டென்சில் பெரேரா, முருங்கன் வைத்திய அதிகாரி சாள்ஸ் ஒஸ்மன் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், மாணவத் தலைவர்களின் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க மேம்பாட்டுக்குழுவினர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(க-12)

# மீனவர்கள் பிரச்சினையில் இந்திய அரசு பாராமுகம்

## இராமேஸ்வரம் மீனவர் குற்றச்சாட்டு

புதுக்குடியிருப்பு,மே 30

மீன்களின் பெருக்கத்துக்காக 40 தினங்களாகத் தமிழகத்தில் இருந்து வந்த மீன்பிடி தடை நேற்று புதன்கிழமையுடன் முடிவடைந்தது.

இந்தக் காலத்தில் இலங்கை அரசும், இந்திய அரசும் மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடி ஒரு முடிவை எட்டியிருந்திருக்கலாம். எனினும் இந்திய அரசு அப்படிச் செய்யவில்லை என இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் தாக்குதல்கள் காரணமாக அனேக மீனவர்கள் தமது தொழிலை விட்டு வேறு தொழில்களை நாடிச் செல்கின்றனர்.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாதிருந்த காலத்தில் இரண்டு அரசுகளும் பேச்சுக்களை நடத்தி மீனவர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண முயன்றிருக்க வேண்டும் எனவும் இராமேஸ்வரம் மீனவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(த-7)

# சிறுமி பலாத்காரம் மாட்டினர் மூவர்

அக்குரஸ்ஸ, கோணேகம பிரதேசத்தில் 14 வயதான சிறுமி ஒருவரை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி பிற்பகல் வேளையில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆறு பேர் குறித்த சிறுமியை கடத்திச் சென்று பலாத்காரத்திற்கு உட்படுத்தியுள்ளனர்.

இதுவரை இவர்களில்மூவரை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பில் அக்குரஸ்ஸ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின்போது சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இன்றைய நாள்

அருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

நாளை

*வைகாசி-17 வெள்ளிக்கிழமை 31.05.2013*
*திதி: ஸப்தமி மு.இ. 07.07 வரை*
*நட்சத்திரம்: அவிட்டம் பி.ப. 01.01 வரை*
*சுபநேரம்: 05.52 - 07.22 வரை*
*இராகுகாலம்: 10.22 - 11.52 வரை*



**மேஷர்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.



**இடபர்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்திற்கு ஆளாக்குவார்கள். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.



**மிதுனர்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.



**கடகர்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.



**சிங்கர்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.



**கன்னி:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**துலார்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிள்ளைகளின் உடல் நிலை சீராகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.



**விருச்சிகர்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உண்டு. சகோதர வகையில் மகிழ்ச்சி கிடைக்கும்.



**தனுசு:** எதையோ இழந்ததைப்போல் ஒருவித கவலை வந்து நீங்கும். அடுத்தவர்களின் விவகாரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. யாரையும் தாக்கிப் பேச வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.



**மகரர்:** எதிர்காலம் பற்றிய பயம், வீண் பதற்றம் வந்துச் செல்லும். முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம்.



**கும்பர்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.



**மீனர்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 8 | | | | |
| 2 | | 5 | | | 6 | | 8 | |
| 1 | 8 | 4 | | 5 | 9 | | 2 | |
| | | 2 | 6 | 9 | | 3 | | |
| | | | 1 | | 8 | | | |
| | | 9 | | 2 | 7 | | | |
| | 9 | | 8 | 7 | | 1 | 6 | 2 |
| | 7 | | 2 | | | 9 | | 3 |
| | | | | 4 | | | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 7 | 4 | 8 | 2 | 5 | 3 | 1 |
| 2 | 3 | 5 | 7 | 1 | 6 | 4 | 8 | 9 |
| 1 | 8 | 4 | 3 | 5 | 9 | 6 | 2 | 7 |
| 8 | 1 | 2 | 6 | 9 | 4 | 3 | 7 | 5 |
| 7 | 5 | 6 | 1 | 3 | 8 | 2 | 9 | 4 |
| 3 | 4 | 9 | 5 | 2 | 7 | 8 | 1 | 6 |
| 4 | 9 | 3 | 8 | 7 | 5 | 1 | 6 | 2 |
| 5 | 7 | 8 | 2 | 6 | 1 | 9 | 4 | 3 |
| 6 | 2 | 1 | 9 | 4 | 3 | 7 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருக்கின்ற பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபதளங்கள் என்றும் அழைக்கின்றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பிரபலமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## பொது நிலையினர் மாநாடு

கொழும்புத்துறை, மே 30

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் முன்னெடுக்கும் பொது நிலையினர் வருடாந்த மாநாடு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனித பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொள்வார். 'நம்பிக்கையில் வேரூன்றி வாழ்வில் கனி கொடுப்போம்' என்னும் தொனிப் பொருளில் இடம்பெறும் இந்த மாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

பொதுநிலையினர் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-135)

சுகாதாரக் குழுவினரின் திடீர்சோதனை

## பாவனைக்கு உதவாத பழங்கள் அழிப்பு சின்னக்கடை பொதுச் சந்தையில்



குருநகர் சின்னக்கடை பொதுச் சந்தையில் பாவனைக்கு உதவாத ஒரு தொகுதி பழ வகைகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் சென்ற குழுவினர் சந்தையில் மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கையின்போது பப்பாசிப்பழம், பலாப்பழம் போன்ற ஒரு தொகுதி பழ வகைகள் மீட்கப்பட்டன. வியாபாரிகளால் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த இந்தப் பழங்கள் யாவும் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்டன.

பழுதடைந்த பழங்கள் யாவும் மீட்கப்பட்டு உடனடியாகவே அழிக்கப்பட்டதாக பொதுச் சந்தை சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா தெரிவித்தார்.

மக்களின் பாவனைக்கு உதவாத பழவகைகள் விற்பனை செய்த வியாபாரிகள் எச்சரிக்கப்பட்டதுடன் அழுகிய பழ வகைகள் விற்பனை செய்வோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வியாபாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டது. (ந-17)

மதுவை மறுத்து மறுமலர்ச்சி காண்போம்

## குருநகர் பிரதேசத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு



''மதுவை மறுத்து மறுமலர்ச்சி காண்போம்'' என்ற தொனிப் பொருளில் மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று குருநகர் பிரதேசத்தில் இடம்பெற்றது.

குருநகர் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.ராஜா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வு குருநகர் திருச்சிலுவை முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது. மதுபாவனையால் சமூகத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் அதன் விளைவுகள் குறித்த விவரணப் படமும் மக்களுக்கு காண்பிக்கப்பட்டது. (ந-17)

## நற்கருணைப் பேரணி

கொழும்புத்துறை, மே 30

கத்தோலிக்கத் திருச்சபை இந்த ஆண்டை நம்பிக்கை ஆண்டாக பிரகடனப் படுத்தியுள்ளது. அந்த நிலையில் அதன் சிறப்பு நிகழ்வாக யாழ். நகரில் நற்கருணைப் பேரணி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். யுவானியார் ஆலயத்தில் ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி வழியாக புனித அடைக்கல அன்னை ஆலயத்தைச் சென்றடையும்.

அங்கிருந்து 4 ஆம் குறுக்குத் தெரு வழியாக புனிதயாகப்பர் ஆலயத்தை அடைந்து பின்னர் பாங்சால் வீதி வழியாக யாழ் பேராலயத்தைச் சென்றடையும். ஒவ்வொரு ஆலயத்திலும் மறையுரைகளும், ஆராதனைகளும் இடம்பெறவுள்ளதாக நற்கருணைப் பேரணி ஏற்பாட்டாளர் யாழ். மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்திரு ஆர். எக்ஸ்.சகாயநாயகம் அடிகள் தெரிவித்துள்ளார். (ந-135-51)



2013 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கொழும்பு மாவட்டத்திலுள்ள 15 கோயில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அதற்குரிய ஆவணங்களை கோயில் பரிபாலன சபைத் தலைவர்களிடம் வழங்கிய போது அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் காணலாம்.

## விவசாய சம்மேளன புதிய நிர்வாகிகள்

வரணி,மே 30

வரணி வடக்கு விவசாய சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கே.சத்தியேந்திரன் தலைமையில் வரணி வடக்கில் இடம்பெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் வருமாறு:-

தலைவர்-வீ.பரமன், உபதலைவர் -வீ.பாலசிங்கம், செயலாளர்-க.தியாகராசா, உப செயலாளர்-மு.நடேசன், பொருளாளர்-வே.முருகேசபிள்ளை, நிர்வாக உத்தியோகத்தர்களாக வீ.சிதம்பரநாதன் மற்றும் க.நவரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-122)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர் 14 பேர் புதிதாக இணைப்பு

யாழ்ப்பாணம்,மே 30

யாழ்.போதனா வைத்திய சாலையில் நிலவிய தொண்டர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸில் 14 தொண்டர்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர்.

போதனா வைத்தியசாலையில் புதிய கட்டட வசதிகள் மற்றும் விடுதிகள் அதிகரிக்கப்பட்டதையடுத்து தொண்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக வைத்தியசாலை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 3 மாதகாலப் பகுதிக்குள் யாழ்.போதனா வைத்தியசாலையில் கட்டட அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு ஏதுவாக விடுதிகளும் அதிகரிக்கப்பட்டன.

இந்த நிலையில் நோயாளர்களின் தொகைக்கு ஏற்ப, கடமைக்கு தொண்டர்களின் தேவையும் ஏற்பட்டுள்ளதை அடுத்து ஏற்கனவே கடமையில் இருக்கக்கூடிய தொண்டர்களுக்கு மேலதிகமாக ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டது.

விடுதிகளில் வசதிவாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டதையடுத்து தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதற்கு ஏற்ப சிற்றூழியர்களும் தொண்டர்களும் போதுமானதாகக் கடமையில் இல்லை.

இந்த நிலையில் தொண்டர்கள் பற்றாக்குறை நிலவியதால் விடுதிகளில் தங்கவைக்கப்பட்டுள்ள நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் நோயாளர்களை தள்ளு வண்டிகளில் உறவினர்களே கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் தொண்டர்கள் 135 பேர் உள்ள நிலையில் கடந்த வாரம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் புதிதாக 14 தொண்டர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி,மே 30

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை யின் பொதுக் கூட்டம் எதிர் வரும் ஜூன் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறும்.

சபையின் தலைவர் யோ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும் என செயலாளர் மருத்துவர் ச.அம்பிகைபாகன் அறிவித்துள்ளார். (ந-9)

உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி, மே 30

உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை நாளை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர சபையினரும் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் இணைந்து அனுஷ்டிக்கவுள்ளனர்.

புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி அடிக் (ADIC) நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளனர்.

புகைத்தல் பொருள்கள் பாவனையால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக வணிக சமூகத்திற்கு விழிப்புணர்வினை ஊட்டக் கூடிய கருத் துரைகள் வழங்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி கல்வி வலயத்தின் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் சேவையாற்றக்கூடிய வயதெல்லை கொண்ட இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ,2:1, 2:II ஐச் சேர்ந்தவர்கள் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச்சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்போர் உரிய விண்ணப்ப படிவத்தை வலயக் கல்வி அலு வலக நிர்வாகக் கிளையில் பெற்று ஜூன் ஐந்தாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## நயினாதீவு மணிபல்லவ கலாமன்றதை கலைத்திறன் போட்டி முடிவுகள்

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தினால் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கலைத்திறன் போட்டிகளின் முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனடிப்படையில் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

பிரிவு 1 பேச்சுப் போட்டி

முதலாம் இடம்- ஜீ.ஜீவபூரணி (ந.கணேச வித்), இரண்டாம் இடம்- பா.தேனுஜன் (ந.கணேச வித்.), மூன்றாம் இடம்- சி.பானுஷா (ந.நாகபூஷணி வித்.).

பிரிவு 2 பேச்சுப் போட்டி

முதலாம் இடம்- ஜீ.ஜீவப்பிரியன் (ந.கணேச வித்), இரண்டாம் இடம்- அ.அபிநயா (ந.மகா வித்.), மூன்றாம் இடம்-கு.வித்தியா (ந.கணேச வித்.).

பிரிவு 3 பேச்சுப் போட்டி

முதலாம் இடம்- கு.தஜீபா (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- மு.முஜீபா (ந.கணேச வித்.), மூன்றாம் இடம்- த.கௌதமி (ந. மகா.வித்.).

பிரிவு 4 பேச்சுப் போட்டி

முதலாம் இடம்- அ.உ.தயமாலினி (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- க.சுகன்யா (ந. கணேச வித்), மூன்றாம் இடம்- சி.பவித்திரா (ந.மகா. வித்).

பிரிவு 5 பேச்சுப் போட்டி

முதலாம் இடம்- உ.நிரோஜா (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- க.சோபிதா (ந.மகா. வித்), மூன்றாம் இடம்- ச.வேணுஜா(ந.மகா வித்.

பிரிவு 1கட்டுரைப் போட்டி

முதலாம் இடம்- சி.தேனுஷா (ந.நாகபூஷணி), இரண்டாம் இடம்- மோ.தமிழீசன்(ந.கணேச வித்), மூன்றாம் இடம்- அ.சேனுஜா (ந.கணேச வித்),

பிரிவு 2 கட்டுரைப் போட்டி

முதலாம் இடம்- ம.சரணியா (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- கு.கோபிகா (ந.கணேச வித்), மூன்றாம் இடம்-க.கௌசிகன் (ந.கணேச வித்),

பிரிவு 3 கட்டுரைப் போட்டி

முதலாம் இடம்-கோ.ரம்மியா (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- நா.தனுசிகா (ந.கணேச வித்), கோ.டிலக்ஷன் (ந.மகா. வித்),

பிரிவு 4 கட்டுரைப் போட்டி

முதலாம் இடம்-க.விஜித்திரா (ந.கணேச வித்), இரண்டாம் இடம்-ப.சரணியா (ந.மகா. வித்), மூன்றாம் இடம்-த.லக்சனா (ந.கணேச வித்),

பிரிவு 5 கட்டுரைப் போட்டி

முதலாம் இடம்-சோ.சரண்யா (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- வெ.சிந்துஜா (ந.மகா. வித்), ச.வாசினி (ந.மகா. வித்),

பிரிவு 6 கவிதைப் போட்டி

முதலாம் இடம்- ப.சிந்துஜா (ந.மகா. வித்), இரண்டாம் இடம்- பா.தீபிகா (ந.மகா. வித்), மூன்றாம் இடம்- கோ.தனச்செல்வி (ந.மகா. வித்). (ந) (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

அளவெட்டியைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் ஜெயகாந் என்பவருடைய தே.அ.அ. (813072220V), சாரதி அனுமதிப் பத்திரம், தொழில் அடையாள அட்டை, வாகனக் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் இரு வங்கி அட்டைகள் என்பன யாழ்ப்பாணம் புல்லுக்குளத்துக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 644 2005

(37787) (45.6)

## பெயர் மாற்றம்

4ஆம் வட்டாரம், புங்குடுதீவில் வசிக்கும் கிருபானந்தன் சறோஜா ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை கிருபானந்தன் சறோஜாதேவி எனப் பெயர் மாற்றம் செய்து சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கி.சறோஜாதேவி

(37789)(45.6)

சுழிபுரம்-பறாளாய்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
விஜயவருஷம் 2013ஆம் ஆண்டு
நவோத்தர சகஸ்ர (1009)
மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம்

முருகன் அடியார்களே!

நிகழும் விஜய வருடம் வைகாசித்திங்கள் 17 ஆம் நாள் (31.05.2013) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் முருகப் பெருமானுக்கு (1009) சகஸ்ர சங்காபிஷேகமும் சண்முகப் பெருமானுக்கு நவோத்திர (109) சங்காபிஷேகமும் சண்முகார்ச்சனையும் நடைபெறவுள்ளது.

விசேட மேளக்கச்சேரி
'தேவஸ்தான வித்துவான்' சாந்தன் குழுவினர்
அகில இலங்கை புகழ் நாதஸ்வர சக்கரவர்த்தி
K.R.சுந்தரமூர்த்தி குழுவினர் (இணுவில்)
அகில இலங்கை புகழ் நாதஸ்வர செம்மல்
இரா.சிவகுமார் குழுவினர் (வழக்கம்பரை)
பிற்பகல் 12.30 மணிக்கு அன்னதானம்
விசேட மேளக்கச்சேரியுடன் மாலை 6.00 மணிக்கு முருகப்பெருமான் விசேட அலங்கார புஸ்ப விமான சாத்துப்படியுடன் வீதியுலாவருதல.

இரவு 7.00 மணி வில்லுப்பாட்டு : அகில இலங்கை புகழ்
ஸ்ரீதேவியின் வில்லிசைக் குழுவினர் வழங்கும் 'வள்ளி திருமணம்'

(#/9617)(6.6) சுழிபுரம் பறாளாய் முருகன் சங்காபிஷேக சபையினர்.

## வில்லூன்றிப் பெருவிழா

வில்லூன்றி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

தினமும் காலை 7.45 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடை பெறும். எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ)

## பொங்கல் விழா

சிவகுருநாதசுவாமி ஆலய வைகாசிப் பொங்கல் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து 8 மணியளவில் விஷேட அபிஷேக ஆராதனைகள். பொங்கல் படையல்கள் நடைபெறும். (வ)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த கனடாவில் நிரந்தர வசிப்பிடம் உள்ள பரணி நட்சத்திரம், வயது 24 உடைய (கிரகபாவம் 3½) மணமகனுக்கு பொருத்தமான அழகிய படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 766 9306 (#/6467) (45.6)

## தவறிவிட்டது

கதிர்வேலாயுத சுவாமி கோயில், சரவணை மேற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கந்தப்பா மருதமுத்து சர்மா என்பவரது தேசிய அடையாள அட்டை (831042680 V)சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய சிறிய பேஸ் கடந்த (25.05.2013) அன்று வீரசிங்கம் மண்டபத் திற்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். (37785)(5.6)

தொடர்பு: 077 363 9640, 077 955 5683



## விக்ஷேப என்றால் என்ன?

சிந்தனையை அழுக்கேற்றும் இரண்டாவது காரணி இது. விக்ஷேபம் என்பது அடிக்கடி ஊசலாடும் சிந்தையின் தன்மையை விளக்குகிறது.

ஒரு கண்ணாடியை அசையும் வண்ணம் வைத்தால் அல்லது அடிக்கடி அதற்கு அசைவு கொடுத்தால், கண்ணாடியிலுள்ள பிம்பமும் அசையும் அல்லது ஆடும். விக்ஷேபம் இது போலத்தான். அது சிந்தையின் நிலையற்ற இயல்பைக் காட்டுகிறது.

பல்வேறு ஆன்மிக சாதனைகள் மூலம் விக்ஷேபத்தை கட்டுப்படுத்தமுடியும். அதாவது தியானம், வழிபாடு ஒன்பது வகை பக்தி வழிகளைப் பின்பற்றுதல் என்பனவற்றின் மூலம் விக்ஷேபத்தைக் கட்டுப்படுத்தலாம்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

## வீரமாகாளி அம்மன் ஆலய திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 30

வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த பெருந் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 25 தினங்கள் திருவிழா இடம் பெறும். (வ)

## மாநகர சபை கூட்டம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாநகர சபையின் மே மாதத்துக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாநகர மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும். (வ-7)

## Dolphin வான் விற்பனைக்கு

54 - x x x x தொடரிலக்கமுடைய
D/Ac, Ad - Sheat, A - wheel
Dolphin வான் விற்பனைக்கு
தொடர்பு: 077 711 1349
(mahindra ஜீப் மாற்றும் வசதி உண்டு)

(37782) (45)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கிக்கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு யாழ்ப்பாணக் கிளைக்கும், கொழும்புக் கிளைக்கும் கீழ் காணப்படும் வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.

- எழுதுவினைஞர்
- விற்பனைப் பிரதிநிதி
- விற்பனை உதவியாளர்

குறிப்பு: ★ ஆண்கள் மட்டும்
★ கொழும்பில் தங்குமிடம் இலவசம்

தொடர்பு: 077 260 6684

(37781) (45)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை

திருமதி அற்புதமணி கிருபைராஜா

28.05.2013 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த செய்திகேட்டு துயரடையும் அதேவேளை, அவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி கழகம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(37772) (45.6)

## கடையுடன் காணி விற்பனைக்குண்டு

இரத்தினபுரம் (கிளிநொச்சி) பிரதான வீதியில் 02 பரப்புக் காணி கடையுடன் கூடியது விற்பனைக்கு உள்ளது. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 413 1908, 077 625 6576

(35144) (40.6)

## ஒருகள் விற்பனை

பழைய ஒருகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 070 8002

(37781) (45.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்
23*11*1949
இறைவன் அடியில்
30*04*2013


திருமதி
பாக்கியலட்சுமி செல்வராசா

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி செல்வராசா 30.04.2013 அன்று காலமானார். அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (30.05.2013) வியாழக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்தி வழிபாட்டிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(6351012.6)

## கண்ணீர்க் காணிக்கை



அமரர் தம்பு குமாரசாமி

அன்பான அழைப்பு பாசமிகு பார்வை மிடுக்கான நடை.....
தேடுகின்றோம் இவையாவும் இன்று
சாந்தியப்பா என்று நாமழைக்கும் போது
நீர் வந்து நிற்கும் எமது முற்றமும்...... தேடுகின்றதையா.....!

அன்னாரின் அமரத்துவத்தால் ஆழ்ந்த துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தோர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வாக்குக்கமைய அன்னாரின் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குருஸ்தான்,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(37783)(5.6)

சிவகுருநாதன் குடும்பம்
(சித்தப்பா-அன்ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற வீதிகளை நிர்மாணித்துள்ள ஒப்பந்தகாரரின் கொடுப்பனவு ரத்து

## கிழக்கில் நிலைமைகளை ஆராய விசேட குழு

திருகோணமலை.மே 30

கிழக்கு மாகாணத்தில் தரமற்ற வீதிகளை நிர்மாணித்துள்ள ஒப்பந்தகாரர்களின் கொடுப்பனவுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் தெரிவித்தார்.

மூதூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற அபிவிருத்தி ஒழுங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் கொங்றீட் வீதிகளின் தரத்தை பரிசீலிப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

அந்தக்குழு மேற்பார்வை செய்து எனக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. அதற்கமைய தரமற்ற வீதிகளை நிர்மாணித்த ஒப்பந்தக் காரர்களின் கொடுப்பனவுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரி ஆசிரியை
**கிறேஸ் வசந்தியின்** பாசமிகு தாயார்
இராஜேந்திரம் எலிசபெத்செல்லம்மா
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
ஆசிரிய வட்டம். (37792) (40.0)

# கைதிகளின் உளநல விருத்திக்கான விசேட திட்டம் விரைவில் ஆரம்பம்

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,மே 30

கைதிகளின் உளநல விருத்திக்கான விசேட திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது என்று சுகாதாரஅமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான உளநல விசேட நிபுணர்கள் மூவரை வெலிக்கடை, போகம்பர மற்றும் மஹர சிறைச் சாலைகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சின் உளநலப் பிரிவின் பணிப்பாளர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரி வித்தார்.

சிறைச்சாலைகளில் உளநலம் பாதிக்கப்பட்ட கைதிகள் இருப்பது தெரியவந் துள்ளது. எனவே அவ்வாறானவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு விசேட உளநல பயிற்சிகள் அளிக்கப் படவுள்ளன என்று அவர் கூறினார்.

இதன்போது அவர் களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. இதனூடாக அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், அவர்களால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளையும் குறைத்துக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ச)

# போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 30

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணி பாடநெறி தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் 07793 60607 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலன் அறிவித்துள்ளார். (ச)

# நகை திருட்டில் ஈடுபட்டு நால்வர் வசமாக மாட்டினர்

கொழும்பு.மே 30

நுகேகொடையில் நகை திருட்டில் ஈடுபட்டு வந்த நால்வர் மிரிஹான குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேகநபர் கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் புத்தக விற்பனையில் ஈடுபட்டிருந்தபோதே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தனது மூன்று சகாக்களுடன் நுகேகொடை, விஜேராம மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுப்பமை தெரிய வந்துள்ளது.

கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் கைது செய்யப்பட்டவர் போதைப் பொருள் விற்பனையுடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

**கண்ணீர் அஞ்சலி**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தொழில்நுட்ப
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
சிவலிங்கம் ஜசிதரன் அவர்களின் அன்புத் தந்தை

**செல்லப்பு சிவலிங்கம்**

நேற்று (29.05.2013) புதன்கிழமை இறைபதமடைந் துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/9523) (45.0)

ஊழியர் நலன்புரிசங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்).

**மரண அறிவித்தல்**



ஆயர்பாடி மயில்வாகனம்
**கோபாலகிருஷ்ணன்**

**(Accountant, Formally of Mackwoods Ltd- Colombo, Srilanka Transport Board – Medavachchiya, Ceylon German Technical Training Institute – Katubedda, Universal Marketing Service Ltd – Colombo, Jaffer Jee Brothers – Colombo, Hingurana Sugar Industries Ltd – Colombo, Samsons Silva & company Ltd – Colombo, Eswaran Brothers – Colombo, North East Coastal Community Development Projects – Trincomalee, Hon. Treasurer - Chinmaya Mission – Sri Lanka).**

மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆயர்பாடி மயில்வாகனம் கோபாலகிருஷ்ணன் 28.05.2013 காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாவிட்டபுரம் தெல்லிப்பழை அமரர் தம்பு மயில்வாகனம் திருமதி லஷ்மி மயில்வாகனம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் யாழ்ப்பாணம் தட்டாதெரு அமரர் அம்பலவாணர் முத்தையா பாக்கியம் முத்தையா தம்பதிகளின் மருமகனும் திருமதி நவமணியின் அன்புக் கணவரும் திருமதி. மைதிலி (Asst. Accountant - India Lanka Express Ltd Colombo). செல்வி. தாரணி (Final Year Environmental Science - Vavuniya Campus). ஆகியோரின் அன்பு தந்தையும் திரு உருத்திரன் செந்தில் தாசனின் (Australia) அன்பு மாமனும் திருமதி. Dr. சறோஜினிதேவி (Swiss), திரு ராமகிருஷ்ணன் (ஆயர்பாடி சோதிட நிலையம் - தெகிவளை), திரு ஸ்ரீகிருஷ்ணன் (சுங்க அதிகாரி கொழும்பு), திருமதி. ராதாதேவி (தெகிவளை), திருமதி. உருக்குமணிதேவி (Magnum Investment Colombo), திரு கிருஷ்ணதாசன் (Swiss), திருமதி. ஸ்ரீஆண்டாள் (Canada), ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திரு. முத்தையா சுப்ரமணியம் (பொறியியளாளர் - தெகிவளை), திருமதி. தவமணி (திருகோணமலை), திருமதி. கணேசம்மா (திருகோணமலை), திருமதி. செல்வநாயகி (திருகோணமலை), அமரர். தணிகாசலம் (திருநெல்வேலி), திரு தெய்வேந்திரராசா (London), திருமதி. ஆனந்தராணி (Canada), திரு தியாகராசா (Swiss), திருமதி. கமலாதேவி (தெகிவளை), திரு நடராசா (Magnum Investment Colombo), திரு அன்னலிங்கம் (தெகிவளை), திருமதி. கலாவதி (வெள்ளவத்தை), திருமதி. சுசிலாதேவி (Swiss), திரு பாஸ்கரன் (Canada), ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 30.05.2013 (வியாழக்கிழமை) பிற்பகல் 2.00 மணியாளவில் ஆரம்பித்து பிற்பகல் 4.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகன கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள் மற்றும் மைத்துனர்கள்

0779 681 291 / 0777 966 [illegible]

(C/8659)

**OBITUARY NOTICE**

**ATPUTHAMANI KIRUBAIRAJAH**
(Rtd.teacher Vembadi Girls' High School, Jaffna
and Chundukuli Girls' College, Jaffna)

ATPUTHAMANI KIRUBAIRAJAH (Rtd.teacher Vembadi Girls' High School, Jaffna and Chundukuli Girls' College, Jaffna) entered Eternal Rest. On 28.05.2013. Daughter of late Proctor Thillaiampalam Arumainayagam and Rose Rasamma. Beloved wife of late Geroge Rajaratnam Kirubairajah, loving mother of Evelyn Chrishanthana (U.K), Mother in-law of Justin Imayakanthan Navaratnam, affectionate sister of late Inpamani, late Thurairatnam, late Manonmani, late Ponmani, late Dr.Ariaratnam, late Dr. Selvaratnam, late Jeyaratnam, late Rasaratnam, and of Dr.Jeevaratnam(S.L) and Dr.Wijayaratnam (Aust.). Sister-in-law of late Mathiyaparanam, late Kanagamani, late Victor Rajaratnam, late Subramanium, Dr.Christa(U.S.A), Mercy(Malaysia), Yogam(Canada), Gnanaselvathy(S.L) and Dr.Leeda(Aust.) Funeral arrangements will be notified later.

INFORMER:
CHRYSHANTHANA
IMAYAKANTHAN (Daughter)

Martyn Lane,
Jaffna.

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகேந்திரநாதன் கிருஷ்ணகலாநிதி**
(கிராம அலுவலர் J/106, J/107)



யாழ்ப்பாணம், கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட நாகேந்திரநாதன் கிருஷ்ண கலாநிதி (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் அன்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகேந்திரநாதன் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி - ஊழியர்) அன்பு மனைவியும், கம்ஷப்பிரியாவின் (ஆண்டு 2 பொஸ்கோ பாடசாலை) பாசமிகு தாயும், கிருஷ்ண தயாநிதி (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பி/ உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் நமேஸ்குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான க.இரத்தினம்மா, மா.பரமேஸ்வரி மற்றும் நித்தியானந்தன் லக்சுமி (கனடா) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், சின்னத்தம்பி சுப்பிரமணியம் (அப்பையா) அவர்களின் மருமகளும், சத்தியலோகன், மேனகா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சயிலுஜாவின் அன்புப் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(2.0)(37794)

தகவல்:
ச.நாகேந்திரநாதன் (கணவர்)
நா.கம்ஷப்பிரியா (மகள்)

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு. 0779860613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...

21 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்போதைய விஞ்ஞான உலகில் எம்மால் நினைக்க முடியாத அளவுக்கு நாகரிகம் முன்னேற்றம் அடைந்துள்ளதென்பது யாவரும் அறிந்த விடயம்.

நவநாகரிகத்தை அதிகம் நாடிச்செல்வது பெண்களே, ஏனென்றால் அவர்களது ஆடை, அணிகலன், நடையுடை, பாவனை எல்லாமே சமுதாயத்துக்கு விரோதமாகவே இருக்கிறது.

முன்னைய காலத்துப் பெண்கள் நெற்றி நிறைய குங்குமப்பொட்டு வைத்து, தலைநிறைய பூ முடித்து சேலை உடுத்தி இருப்பார்கள். நவீன காலத்துப் பெண்கள் அப்படியில்லை ''ஸ்டிக்கர்'' பொட்டு வைத்து, தலைமுடியை விரித்து விட்டு உடலை ஒட்டினாற் போன்ற ஆடைகள் அணிவதும், வீதிகளில் செல்போன் கதைப்பதும் குறும் செய்தி அனுப்புவதும் இன்று எம் பெண் பிள்ளைகளால் அரங்கேறும் நிகழ்வுகள்.

சிலபெண்கள் சரும பராமரிப்பு என்று தினமும் 'மேக்-அப்' செய்கிறார்கள். பெண்கள் சிறிய குட்டையாக ஆடை இருக்கிறதென்று தெரிந்தும் அதை அணிந்து பொது இடங்களில் கால் மேல் கால்போட்டு உட்கார்ந்து கொள்கிறார்கள்.

சில பெண்கள் உள்ளங்கைகளில் மருதோன்றி பூச்சினால் வர்ணம் பூசுகிறார்கள். சில பெண்கள் கண் இமையை வழித்து விட்டு செயற்கையான ஐடெக்சினால் கோடு வரைகிறார்கள்.

இந்தக்காலத்து பாடசாலை மாணவிகளும் செல்பேசியின் துணை கொண்டு பல குற்றங்களை செய்கிறார்கள். வீட்டில் ஒரு சிம் அட்டை, வெளியில் ஒரு சிம் அட்டை என இரட்டை வேடம் கொண்டு பெற்றோரை ஏமாற்றி வாழ தலைப்பட்டுவிட்டனர். இதனால் கல்வியை இழந்து சமுதாயத்தில் கூடாத பெயரும் எடுக்கிறார்கள்.

அடக்கம், பணிவு, கீழ்ப்படிவு என்பன எங்கெல்லாமோ ஓடி ஒளிந்து கொண்டு விட்டன. பெற்றோரை ஏமாற்றி வாழ்வதும், பெற்றோரை மதியாமல் தம் பாதையில் பயணிக்கும் பிள்ளைகளே இன்று நம் சமுதாயத்தில் உள்ளனர். எனவே நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே.

ந.குபேரமூர்த்தி, இணுவில்.



"நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே, ஏனென்றால் அவர்களது ஆடை, அணிகலன், நடையுடை, பாவனை எல்லாமே சமுதாயத்துக்கு விரோதமாகவே இருக்கிறது.

## சிந்தியுங்கள்.... செயற்படுங்கள்..

**'வீட்டிற்குள் நகம் வெட்டினா... வீடு விளங்காது'**
வெட்டித் துண்டான நகம் எங்காவது விழலாம், உணவுப் பொருள்களில் அல்லது காலில் கூட ஏறிவிடலாம்.

**'நகத்தைக் கடித்தால் தரித்திரம்'**
நக இடுக்குகளில் உள்ள அழுக்கு வாய் வழியாக உடலுக்குள் சென்று பல்வேறு விதமான நோய்களுக்கு வழி வகுக்கும்.

**'உச்சிவேளையில் கிணற்றை எட்டிப் பார்க்கக் கூடாது'**
கிணற்றுக்குள் பல விஷ வாயுக்கள் உற்பத்தியாகும். உச்சி வெயில் நேரத்தில் நேரடியாக சூரிய வெளிச்சம் கிணற்றுக்குள் விழுவதனால் அந்த வாயுக்கள் வெப்பத்தால் லேசாகி மேலே பரவும், எட்டிப் பார்ப்பவர்களை அது தாக்கினால் ஆபத்து.

**'இருட்டிய பிறகு குப்பையை வெளியே கொட்டினால் லட்சுமி வெளியே போய்விடுவாள்'**
வீட்டிற்குள் பகல் முழுக்க நடமாடி நாம் ஏதாவது கீழே விழுத்த சந்தர்ப்பம் உண்டு. அது குப்பையில் சேர்ந்து இரவு நேரத்தில் அள்ளி வெளியே வீசினால் பின்பு தேடிக் கண்டு பிடிப்பது சிரமமாகும்.

**'வீட்டுத் தோட்டத்தில் ஆமணக்கு வளர்க்கக் கூடாது'**
ஆமணக்கு வளர்ந்தால் ஆமணக்கு காய் முற்றியவுடன் வெடித்து கீழே சிதறிக் கிடக்கும். அந்த நேரம் சிறுபிள்ளைகள் இருப்பின் அவற்றை எடுத்துச் சாப்பிட்டால் தொண்டையில் சிக்கினால் விபரீதம் ஆகிவிடும்.

**'வீட்டில் புறா வளர்க்கக் கூடாது. வளர்த்தால் குடும்பம் அழிந்து விடும்'**
புறாக்களின் வாசனை பாம்பை ஈர்க்க வல்லது. அதனைத் தேடி விஷப்பாம்புகள் வரும்.

**'இரவு நேரத்தில் கீரை சமைக்கக் கூடாது'**
கீரை எளிதில் ஜீரணமாகாது. இரவில் சாப்பிட்டால் தேவையற்ற உடல் உபாதை ஏற்படும். எனவே பகல் வேளையில் சாப்பிட்டால் எளிதில் ஜீரணமாகும்.

**'முருங்கை மரம் வாசலில் நடக்கூடாது'**
மரங்களில் மிகவும் மென்மையான மரம் என்பதால் குழந்தைகள் ஏறி விளையாடும் போது முறிந்து விடலாம். இதை தவிர முருங்கை மரத்தில் மயிர்கொட்டி மற்றும் பூச்சியினங்கள் வரும்போது எளிதில் வீட்டுக்குள் வந்து விடும்.

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................

முகவரி :-..............................................................

..............................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.





## தெய்வீக ஆரம்பம்

கவிதை எழுத முடிவு செய்தேன்
முதலில் எதைப் பற்றி எழுதுவது?
சிந்தித்தேன்!
கவிதை இலக்கணம்
தெரியாத எனக்கு
வார்த்தைகள் மட்டும் முண்டியடித்தன
இறுதியில் தெளிந்தேன்
எதைப் பற்றி எழுதினாலும்- நான்
எல்லாவற்றையும் நேசிப்பது உண்மை
ஆன்மாவின் தே[illegible]
அதில் தெய்வீ[illegible]
உணர்வது உண்மை.



## சந்தேகம்

வாழ்வில் வரக் கூடாதது
வந்தால்
வம்சத்தை துவம்சம்
செய்யக் கூடியது!
உள்ளங்களைக் கலைத்து
உறவுகளைப் பிரிப்பது
உன்னையும் என்னையும்
இன்னமும் தூரவே
வைத்திருப்பது!
இது தேவைதானா...

க.நிரஞ்சன், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



## வேலைவாய்ப்பு

பிறின்டிங் வேலை பழக
விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
நேரில்:- 02 06 2013 ஞாயிறு மு.ப.
(37799) 9-12 மணிவரை

யாழில் M கொழும்பு பிறிண்டேர்ஸ்
666, KKS Road, யாழ். இந்துக்
(37799) கல்லூரி அருகில், யாழ்ப்பாணம்.



## தவறிவிட்டது

சபாரத்தினம் கமல்ராஜ் ஆகிய எனது 810761210V இல NIC, லைசன்ஸ் என்பன வற்றாப்பளைக்கும் மானிப்பாய்க்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
(சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 0750409589



## பகிரங்க ஏல விற்பனை

01. ஆட்டுக் கடா (ஜமுனாபாதி) -1
02. பசுக்கன்று - 1
03. நாம்பன் மாடு - 1

இடம் - வலி தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், 7ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.
காலம்- 02.06.2013 (ஞாயிற்றுக்கிழமை)
பொது முகாமையாளர்
தொடர்பு- 0213201113 (37796) (14.9.7)


# ஐ.நா. – இலங்கை கூட்டறிக்கைக்கு இணங்க அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பு

## ஐ.தே.கவின் புதிய அரசமைப்பு நகலில் தெரிவிப்பு

கொழும்பு,மே 30

"ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கை, ஐ.நாவில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள், திஸ்ஸ விதாரண அறிக்கை மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் நாடாளுமன்றில் ஆற்றிய உரை முதலான வற்றுக்கமைய ஒற்றை ஆட்சி முறையின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும்."

- இவ்வாறு தமது புதிய அரசமைப்பு நகல் வரைபில் அதிகாரப் பகிர்வு குறித்து ஐக்கிய தேசியக் கட்சி முன்மொழிந்துள்ளது.

இதேவேளை, அரசமைப்பை வியாக்கியானப்படுத்துவதற்காக அரசமைப்பு நீதிமன்றமொன்று நிறுவப்படுவதுடன், பிரதமநீதியரசரைப் பதவி நீக்கம் செய்வது தொடர்பில் கொண்டுவரப்படும் குற்றப் பிரேரணையானது பொது நலவாய அமைப்பின் கோட்பாடுக்கமைய இந்த நீதிமன்றத்தினூடாக விசாரணைக்குட்படுத்தப்படும் என்றும் அந்த அரசமைப்பு நகல் வரைபில் முன்மொழியப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பு நகல் வரைபு கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுக்காலை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் மாநாயக்க தேரர்களும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், கலைஞர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஐ.தே.கவின் இந்தப் புதிய அரசமைப்பு நகல் வரைபின் முதற் பிரதியானது கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் மாநாயக்க தேரர்களிடம் கையளிக்கப்பட்டது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் **திரு.சரவணபவன் மோகனபவன்** அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I க்கு பதவி உயர்த்தப்பட்டமையை உளமார பாராட்டி வாழ்த்துகிறோம்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களும் ஊழியர்களும்
மாவட்ட திட்டமிடல் செயலகம், மாவட்ட செயலகம் - கிளிநொச்சி
(35146)(14.7)


# சீனாவிடமிருந்து இலங்கைக்கு முதல் தொடர்பாடல் செய்மதி

கொழும்பு,மே 30

இலங்கைக்கும் அதன் அயல் நாடுகளுக்கும் தொலைத்தொடர்பு மற்றும் ஒலி - ஒளிபரப்புச் சேவைகளை வழங்கும் முதலாவது தொடர்பாடல் செய்மதியை இலங்கைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் சீனாவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உலக சந்தையில் வர்த்தக செய்மதிகளை ஏவுவதற்கான சேவையை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரேயொரு நிறுவனமாக கிரேட் வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனம் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதுவரையில் 18 நாடுகளுக்கு 43 செய்மதிகளை ஏவிக்கொடுத்துள்ளதாக இந்தச் சீன நிறுவனம் கூறியுள்ளது. 2015ஆம் ஆண்டளவில் உலக செய்மதிச் சந்தையில் 10 சதவீதத்தைப் பிடிக்க சீனா எண்ணியுள்ளதாக இந்த நிறுவனம் கூறியுள்ளது. (த)


## காணி தேவை/ வாடகை கட்டடம் தேவை
### யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்

சமாஜத்தின் பயன்பாட்டிற்கு 2 பரப்பு காணி பலாலி வீதி, அல்லது இராஜவீதி அல்லது ஆடியபாதம் வீதி அல்லது பருத்தித்துறை வீதியில் (நல்லூர் பிரதேச செயலர் பிரிவு அல்லது கோப்பாய் தெற்கு, வடக்கு) தேவை.
மேற்படி பகுதியில் சமாஜத்துக்குவாடகை கட்டடம் தேவை.
தொடர்பு- 0213216331, 0776155930
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாஜம்
87, பலாலி வீதி, திருநெல்வேலி. (சி/9525)(14.9.7)



## குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலிகள்

12, 13 ஆம் திகதிகளில் நடைபெற்ற அக்ஷய திருதியை கொள்வனவில் வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறையில் நேற்று 29.05.2013 புதன்கிழமை தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளின் பரிசு விவரம்.

| | ப.சீ. இல. | |
|---|---|---|
| முதலாம் பரிசு | 28029 | ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகை |
| இரண்டாம் பரிசு | 27804 | 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை |
| மூன்றாம் பரிசு | 27925 | 25ஆயிரம் ரூபா பெறுமதியான நகை |

மேலும் 10 ஆறுதல் பரிசுகள் 2500 ரூபா பெறுமதி

| | ப.சீ.இ. | | ப.சீ.இ. |
|---|---|---|---|
| 1 | 27711 | 6 | 27700 |
| 2 | 27664 | 7 | 27725 |
| 3 | 27673 | 8 | 27841 |
| 4 | 05 | 9 | 27920 |
| 5 | 04 | 10 | 27922 |

(வெற்றியாளர்கள் பற்றுச்சீட்டுடன் நேரில் வரவும்.)
(சி/9527)
157/1,சாரங்கன் நகைமாடம் இல.1, சாரங்கன் நகையகம்
021 222 6972 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



தொழில்முறை மற்றும் பட்டப்படிப்பகம்
SCHOOL OF PROFESSIONAL AND DEGREE STUDIES [Pvt] Ltd

ஜூன் 01 முதல் ஆரம்பமாகிறது
போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்
01.இலங்கை கல்வி நிர்வாக சேவை. (SLEAS)
02.அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை. (Eligibility Bar Examination)
03.மாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கான நுண்ணறிவு வகுப்புகள்.
04.சட்டக் கல்லூரி புதுமுகத் தேர்வு.
05.திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணிக் கற்கைக்கான புதுமுகத்தேர்வு.
மேலதிக விவரங்களுக்கு:
School Of Professional And Degree Studies (pvt) Ltd
(சி/1509 0) 65, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 221 9793, 0777184410 - www.spads.edu.lk, spads.edu@gmail.com


## மரண அறிவித்தல்கள்



### முருகேசு சாந்தகுமார்

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சாந்தகுமார் நேற்று முன்தினம் (28.05.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் புஸ்பவதி தம்பதியரின் இளைய மகனும், சுரேஸ்குமார், சசிகலா, சிவகுமார், சந்திரகலா ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0094775983897

கரம்பொன் மேற்கு,
ஊர்காவற்றுறை.
(37797)(14.9.7)



### ஆறுமுகம் நமசிவாயம்
(ஓய்வுபெற்ற லிகிதர்)

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நமசிவாயம் நேற்று (29.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் (வள்ளிப்பிள்ளை) அன்புக் கணவரும் தேவமலர், இரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராசா (நிலா புடவையகம், சாவகச்சேரி), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் தாரணி (ஆசிரியை, மு/வள்ளிபுனம், கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), செந்தூரன், பிரதீபன், பிரசாத் (சுவிஸ்), பிரனேஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப.ஆனந்தராசா (மருமகன்)
நிலா புடவையகம் (சாவகச்சேரி)

இராமலிங்கம் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.
(35051)



### சபாரத்தினம் நாககுமார்
(தலைவர்) (உரிமையாளர் Ruby's take aways Ruby's super market)

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமாகிய சபாரத்தினம் நாககுமார் கடந்த (24.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் இளைய புதல்வனும் நவராணியின் (ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும் நவரமணன் (ஆஸ்திரேலியா), நவரஞ்சன் (ஆஸ்திரேலியா), நவறஞ்சினி (ஆஸ்திரேலியா), நவரூபி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆறுமுகம்- செல்லம்மா தம்பதியரின் மருமகனும் கந்தசாமி, சிவமணி, இந்திராணி, விமலராணி ஆகியோரின் சகோதரனும் நவநீத கிருஷ்ணன் (யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்), நவநீலயோகராசா (பெல்ஜியம்), சந்திரராணி (ஆஸ்திரேலியா), ரோகினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சிறிஸ்கந்தவேல் (சிறி- ஆஸ்திரேலியா), கிமாபிந்து (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனும் காசினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2013) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் Westchapel, kingston street, minchinbury தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ.நவநீதகிருஷ்ணன்
(மைத்துனர்) 0774598261

214/5, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.
(37797)(14.7)

## மரண அறிவித்தல்



### திருமதி தவரத்தினம் இராணி

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய், மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தவரத்தினம் இராணி நேற்று (29.05.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், துரைச்செல்வம், பாலக்கிருஷ்ணன் மற்றும் தவச்செல்வம், புஷ்பராணி, வசந்தராணி, உஷாராணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தவமணி, தினமணி மற்றும் சிவமணி ஆகியோரின் மைத்துணியும் சாந்தமதி, சந்திரவதனன், மதிவதனன், ஜெயமதி, ஜீவமதி, ஸ்ரீவதனன், ஜெயவதனன், சூரியவதனன் ஆகியோரின் தாயும் தர்மகுமார், தயாளினி, ரஜிதா, இந்திரகுமார், காலஞ்சென்ற, அருஜெயக்குமார், ரம்ஜா, சத்தியப்பிரியா, கிருஷாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியும் தர்ஷிகன், பானுஷா, ஜானுஷா, டெலக்ஷனா, குகதர்ஷனா, கஜனி, சாருமதன், ஜெயமதன், நர்மதா, ஜெயப்பிரியா, ஜெயக்கீத்தா, இந்திரிக்கா, கஜீவன், கஜானா, ஜவர்ஜன், அஜீவன், லஜனன், அருணன், அபிநாத், ஸ்ரீநித்தியா, சாஜனன், கஜானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
(37800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனிக்கு 'வாய்ப் பூட்டு'



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கெடுபிடி காரணமாக ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாக வாய்திறக்க மறுக்கிறார் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி.

சம்பியன்ஸ் தொடரில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து புறப்பட்டுச் சென்றுள்ளது இந்திய கிரிக்கெட் அணி. புறப்படுவதற்கு முன்னதாக மும்பையில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் இந்திய அணித் தலைவர் டோனி.

அப்போது "சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடரில் அனைத்தும் நேர்மையாக இருக்கும் என்ற நம்பிக்கையை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்துவது எந்த அளவு கடினமாக இருக்கும்?" என்று டோனியிடம் கேட்டார் ஓர் ஊடகவியலாளர். அதற்குப் பதில் கூற முயற்சித்த டோனியைத் தடுத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (பி.சி.சி.ஐ) ஊடக மேலாளர் பாபா, "சூதாட்டம் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டாம்" என்று கண்டிப்புடன் கூறினார். ஊடகவியலாளர்களிடமும் "சூதாட்டம் தொடர்பாக எந்தக் கேள்வியும் கேட்க வேண்டாம்" என்று கட்டுப்பாடுகளை விதித்தார்.

அதையடுத்து பதில் செல்ல ஆரம்பித்த டோனி சிரித்தவாறு அடங்கிவிட்டார்.

பின்னர் சம்பியன் தொடர் குறித்துக் கருத்துத் தெரிவித்த டோனி,

"இந்தத் தொடர் இளம் வீரர்களுக்கு சிறந்த வரப்பிரசாதம். ஆரம்ப வீரர்களாக செயற்படக் கிடைத்த வாய்ப்பை முரளி விஜய், ஷிகர் தவான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தில் வேகப் பந்துவீச்சு பயனளிக்கும். அதற்கேற்ப புவனேஷ்வர் குமார், உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா இருப்பது அணிக்கு உந்து சக்தியாக இருக்கின்றது. அவர்கள் ஒரு நாள் போட்டியின் புதிய விதி முறைக்கு ஏற்ப பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.


இந்திய அணி இதுவரை சம்பியன்ஸ் தொடரை வென்றதில்லை. கிண்ணம் வெல்ல இதுவே எங்களுக்கு கடைசி வாய்ப்பு. இரண்டு பயிற்சி ஆட்டங்கள் இருப்பதால், தொடருக்கு தயாராக போதிய கால அவகாசம் உள்ளது." என்று கூறிவிட்டு அங்கிருந்து நழுவிவிட்டார். (ற)

> இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடக மேலாளர் ஆர்.என். பாபா தமிழ்நாடு கிரிக்கெட் சங்க நிர்வாகியாகவும் செயற்படுகிறார். இவர் தற்போது ஐ.பி.எல். சூதாட்ட விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள சென்னை அணியின் உரிமையாளர் சீனிவாசனுக்கு நெருக்கமானவர். பாபாவின் மகன் பாபா அபராஜித் 19 வயதுக் குட்பட்டோருக்கான இந்திய அணியில் விளையாடி வருவதுடன், சென்னை அணியிலும் இடம்பெற்றுள்ளார்.



பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற நான்காம் நாள் மகளிர் ஒன்றையர் ஆட்டம் ஒன்றில் போலாந்தின் ரட் வென்ஸ் சேகா அமெரிக்காவின் மெலொல்றி புருட்ரிலய வீழ்த்தினார்.

# தொடரை வென்றது இங்கிலாந்து



நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் 247 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது இங்கிலாந்து.


இங்கிலாந்தின் லீட்ஸ் நகரில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 99 பந்துப்பரிமாற்றங்களில் 354 ஓட்டங்களும், நியூஸிலாந்து 43.4 பந்துப்பரிமாற்றங்களில் 174 ஓட்டங்களும் எடுத்தன. அதன்பிறகு 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து 5 இலக்குகள் இழப்புக்கு 287 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதையடுத்து 468 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி 4ஆவது நாளான திங்கட்கிழமை ஆட்டநேர முடிவில் 6 இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பித்த சிறிது நேரத்தில் மழை குறுக்கிட்டதால் சிறிது நேரம் ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னர் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 76.3 பந்துப் பரிமாற்றங்களில் 220 ஓட்டங்களுடன் சுருண்டது. 247 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிகண்டது இங்கிலாந்து.

இந்த வெற்றியின் மூலம் 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது இங்கிலாந்து.

கிரீம் ஸ்வான் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். இங்கிலாந்தின் ஜோ ரூட், நியூஸிலாந்தின் டிம் செதி ஆகியோர் தொடர் நாயகன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

முதல் டெஸ்ட் ஆட்டத்தில் 170 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றிருந்தது.(ற)




# விலக மாட்டேன்

## அடம் பிடிக்கும் சீனிவாசன்

இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து விலக முடியாது என்று அதன் தலைவர் சீனிவாசன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சூதாட்ட வழக்கில் சீனிவாசனின் மருமகன் குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து சீனிவாசன் விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகின்றது.

இந்தநிலையில் சீனிவாசனுக்கு மிகவும் நெருக்கமான இந்திய பிறிமியர் லீக்கின் தலைவர் ராஜீவ் சுக்லாவும் விசாரணைகள் முடியும் வரை சீனிவாசன் பதவியில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

"இந்த விடயத்தில் பதவி விலகுவதா வேண்டாமா என்ற முடிவு அவருடையதாக இருக்கலாம். ஆனால் பி.சி.சி.ஐயின் நன்மதிப்பைக் கருத்தில் கொண்டாவது அவர் தலைமைப் பதவியில் தற்காலிகமாக விலகியிருக்க வேண்டும்" என்று அவர் கூறியிருக்கிறார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சீனிவாசன்,

"சூதாட்டம் தொடர்பாக 3 பேர் கொண்ட விசாரணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அது ஓர் சுயாதீனமான குழு. அதில் நான் தலையிடப் போவதில்லை. எனவே பதவி விலகுவது என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று தெரிவித்தார். (ற)

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள அங்கித் சவான் தாக்கல் செய்திருந்த பிணை மனு நிராக்கரிக்கப்பட்டுள்ளது. அங்கித் தவானுக்கு எதிர்வரும் 2ஆம் திகதி திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.



> இந்த விடயத்தில் பதவி விலகுவதா வேண்டாமா என்ற முடிவு அவருடையதாக இருக்கலாம். ஆனால் பி.சி.சி.ஐயின் நன்மதிப்பைக் கருத்தில் கொண்டாவது அவர் தலைமைப் பதவியில் தற்காலிகமாக விலகியிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாணப் பாடசாலைகளுக்கும், தென்பகுதி பாடசாலை மாணவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டி விழா இன்றும், நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், ஹொக்கி, மற்றும் உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன என்றும், 500இக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இதில் கலந்து கொள்ளவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற-5)

## உதைபந்து தொடர் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், மே 30
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.
முதல் நாள் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்.
3.30 மணி: வல்வை வி. க. எதிர் நவசக்தி வி.க.
4.30 மணி : ஆதிசக்தி வி.க. எதிர் தொண்டமானாறு ஒற்றுமை வி. க. (ற-23)

## கிரிக்கெட் போட்டி முதலாம் திகதி

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையிலான நடத்தும் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 1ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ற-23)

## பாடும் மீன் வெற்றி

யாழ்ப்பாணம், மே 30
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பத்திநாதன் அருளானந்தம் வெற்றிக்கிண்ணத்திற்கான 9 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டு கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

### 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்

# வேரவில் இந்து சம்பியன்



மாங்குளம், மே 30
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 19 வயது ஆண்கள் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் வேரவில் இந்து மகா வித்தியாலயம் சம்பியன் ஆனானது.
இறுதியாட்டத்தில் வேரவில் இந்து ம.வியை எதிர்த்து இரணை தீவு றோ.க.த. மோதியது.
ஆட்டம் ஆரம்பமாகியதிலிருந்து இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக மோதின. ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை வேரவில் இந்து ம.வி.அணியின் வீரர் தமிழ்மாறன் கோலாக்க முற்பாதியாட்டத்தில் வேரவில் இந்து ம.வி. அணி முன்னிலை வகித்தது.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியதும் இரணை தீவு றோ.க.த. அணியினர் உத்வேகமாக மோதினர். அதனால் பிற்பாதி ஆட்டத்தில் வேரவில் இந்து ம.வி அணியினர் கோல் பெறும் முயற்சிகளை நிறுத்தி தடுப்பாட்டத்தில் இறங்கினர்.
12 ஆவது நிமிடத்தில் வேரவில் அணிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த அணியின் வீரர் பௌரின் பந்தை உயர்த்தி நேர்த்தியாக கொடுக்க சக வீரர் அருள்நாயகன் தலையால் பந்தைப் பரிமாற கிருஷ்லட் தலையால் தட்டி மிக அருமையான கோல் ஒன்று பெறப்பட்டது.
அதன் பின்னர் இரு அணியினரின் கோல் பெறும் முயற்சிகள் கைகூடவில்லை. இறுதியில் வேரவில் இந்து ம.வி. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுசம்பியனாகியது.(ற-422)

# வடமாகாண பெருவிளையாட்டு நாளை மறுதினம் ஆரம்பம்

கரணவாய், மே 29
வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 2 ஆம் கட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளன.
ஐந்து கட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டிகளில் முதலாம் கட்டப் போட்டிகள் கடந்த மாதம் 6 ஆம் திகதி முல்லைதீவு மாவட்டத்தில் இடம்பெற்றன. நாளைமறுதினம் முதலாம் திகதி ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களில் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் 1ஆம், 2ஆம் மற்றும் 3ஆம் திகதிகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலும், இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டிகள் அதேதினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளன.
எதிர்வரும் 4, 5 ஆம் திகதிகளில் 15 வயது, 17 வயது மற்றும் 19 வயது இருபாலாருக்குமான கராத்தே சுற்றுப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், 6 ஆம் திகதி 17 வயது, 21 வயதுப் பிரிவுகளுக்கான பளுதூக்கல் போட்டி வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.
7ஆம், 8ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் 19 வயது ஆண் பெண்களுக்கான ஹொக் கிப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும், அதேதினத்தில் 19 வயது ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம் யாழ். மத்திய கல்லூரியிலும், 19 வயதுப் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், 10 ஆம் திகதி 19 வயது ஆண் பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலும் இடம்பெறவுள்ளன.
அதேவேளை மூன்றாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை வவுனியா மாவட்டத்திலும், 4 ஆம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்திலும் இடம் பெறவுள்ளன என்று வடமாகாண உடற்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்தார். (ற-400)

### ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம்

# வென்றது கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம் மே 30
ஈ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடந்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி:ஸி. விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியும், ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
அதில் ராகுலன் 145 ஓட்டங்களையும், பங்குயன் 40 ஓட்டங்களையும், வல்லவக்குமரன் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகம் சார்பில் தீபன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 55 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும், சுதர்சன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
288 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகஅணி சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.
அதில் திவாகர் 26 ஓட்டங்களையும், சுதர்சன் 58 ஓட்டங்களையும், பார்த்தீபன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி சார்பில் பார்த்தீபன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், பவிதரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.(ற-23)



யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பத்திநாதன் அருளானந்தம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த செவ்வாய்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் அரியாலை விளையாட்டுக்கழக அணியும், றோயல் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.(ற-23)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி

யாழ்ப்பாணம், மே 30
திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடந்தும் 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது என்று திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-23)

## ஒலிம்பிக் சபை தலைவர் பதவிக்கு செர்ஜி புப்கா போட்டியிடுகிறார்

சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர்பதவிக்குகோலூன்றிப் பாய்தல்' வீரரான செர்ஜி புப்கா போட்டியிடுகிறார். உக்ரைனை சேர்ந்த 49வயதுடைய [illegible] கோலூன்றிப்பாய்தல் வீரராவார். இவர் 35 முறைகள் உலக சாதனை படைத் துள்ளார். 1988ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கம்வென்றார்.2001ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற இவர், சர்வதேச தடகளகூட்டமைப்பின் துணைத் தலைவராக உள்ளார். தற்போது சர்வதேச ஒலிம்பிக் சபைத் (ஐ.ஓ.சி.) தலைவர் பதவிக்கு போட்டியிட முடிவு செய்துள்ளார்.
தற்போதைய தலைவர் ஜாக்ஸ் ரோகியின் பதவிக்காலம் எதிர்வரும் செப்ரெம்பரில் நிறைவு பெறவுள்ள நிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த புப்கா, "நன்கு ஆலோசனை செய்த பின்னரே ஐ.ஓ.சி. தலைவர் பதவிக்கு போட்டியிடும் முடிவை எடுத்தேன். தடகள வீரராக பிரகாசித்த அனுபவம், ஒலிம்பிக் சபையில் சிறப்பாக பணியாற்ற பெரிதும் உதவும்,"என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்

## புதிய அரசமைப்பு நகலை வெளியிட்டு ரணில் வலியுறுத்து

கொழும்பு, மே 30

''நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையானது தற்போது ஏகாதிபத்திய ஆட்சி முறைமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. இந்நிலை நீடித்தால் மன்னராட்சி முறைமை மீண்டும் உருவாக்கப்படக் கூடிய நிலை ஏற்படும். எனவே, மக்களின் இறைமையை அவர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுக்கவேண்டுமாயின், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்கப்படவேண்டும்.''

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் புதிய அரசமைப்பு நகல் வரைபை உத்தியோகபூர்வமாக வெளியிட்டுவைக்கும் நிகழ்வு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''மக்கள் இறைமையை அவர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுக்கும் வகையில் புதிய அரசமைப்பு நகல்வரைபொன்றை இன்று (நேற்று) நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். ஜனாதிபதி ஆட்சி முறைமையானது இன்று மக்கள் அதிபதி ஆட்சியாக மாறி ஏகாதிபத்திய ஆட்சியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. நாட்டில் சட்டம் இல்லை. மக்கள் இறைமை இல்லை. எல்லாத்துறைகளிலும் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. எனவே, இந்நிலையை முழுமையாக மாற்றவேண்டும். மக்கள் இறைமையை அவர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அதற்காக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நாட்டிலிருந்து முற்றாக இல்லாதொழிக்க வேண்டும். எமது புதிய அரசமைப்பு நகல் வரைபினூடாக இதற்கான மாற்று வழிகளையும் நாம் முன்மொழிந்துள்ளோம்.

இந்தப் புதிய அரசமைப்பு நகல் வரைபு தொடர்பில் எதிர்வரும் மூன்று மாத காலத்தில் ஏனைய அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் ஆகியவற்றுடன் விரிவான பேச்சுகளில் ஈடுபடுவதுடன், மக்கள் கருத்தறியும் செயற்பாட்டையும் விசேடமாக முன்னெடுக்கவுள்ளோம்.

இதனூடாக அனைத்துத் தரப்பினரிடையே எட்டப்படும் இணக்கப்பாட்டுக்கமைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து 6 மாத காலத்துக்குள் மக்கள் அங்கீகாரத்துடன் இந்தப் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும் என நான் உறுதியளிக்கிறேன். இந்தப் புதிய அரசமைப்பு நகல் வரைபு தொடர்பாக அறிந்துகொள்வதற்கும், கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடுவதற்கான இணையத்தளம் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நாளை (இன்று) உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்படும் என்றார் ரணில்.

## வடக்குக்குப் பயணிக்க அரசிடம் அனுமதி கேட்டார் நவிப்பிள்ளை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதனை அண்மித்த காலப்பகுதியில் இலங்கை வரும் ஆணையாளர் தமிழ்க் கூட்டமைப்பைச் சந்தித்தால் அது தேர்தலில் அரசுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது பற்றி அரச உயர்மட்டத்தில் தற்போது பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல், நவநீதம்பிள்ளை அம்மையாரின் பயண இறுதியில் விசேட செய்தியாளர் மாநாட்டுக்கான அனுமதியை வழங்குவது தொடர்பிலும் அரசு தற்போது ஆராய்ந்து வருகிறது. (த-சி)

**பதவி வெற்றிடம்**

**முகாமைத்துவ உதவியாளர்:- (அமைய) பெண்கள்**

யாழ் நகரில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்கு A/L சித்தியடைந்த 40 வயதுக்குட்பட்ட பெண்கள் தேவை. பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம். நகருக்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**021 790 4941** (37786)(10.6)

## விளையாட்டு வினையானது ஏணை குழந்தைக்கு எமனானது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தனர். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நிதர்சனாவின் தந்தை வெளியே சென்றிருந்தார். அந்தச் சமயம் வீட்டில் இருந்த குழந்தைகள் எல்லோரும் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஏணையில் இருந்த நிதர்சனா தவறுதலாக முகங்குப்பற நிலத்தில் விழுந்தார். இதனால் அவரது நெற்றியில் வீக்கமும், வாயில் காயமும் ஏற்பட்டு மயங்கி விட்டார். இந்த நிலையில் அவசர அவசரமாக நிதர்சனாவை முழங்காவில் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சியிலும், அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலையிலும் நிதர்சனா சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காத நிலையில் குழந்தை நிதர்சனா உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு, உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ங-4)

## தென்னிலங்கை மீனவர்கள் சுண்டிக்குளத்தில் அத்துமீறல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிப்பதில் ஈடுபடுகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

வடமராட்சி கிழக்கில் உள்ள மீனவர் சங்கங்கள், தென் பகுதி மீனவர்கள் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கக் கூடாது எனப் போர்க்கொடி தூக்கியதைத் தொடர்ந்து அந்தப் பகுதி இராணுவத்தினரால் இந்த மாத ஆரம்பத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் வடமராட்சி கிழக்கு சங்கங்களின் எதிர்ப்பை அடுத்து தென் பகுதி மீனவர்கள் சுண்டிக்குளம் கடல் எல்லைக்கு வெளியில் கடல் அட்டையைப் பிடிப்பார்கள் என்று வடமராட்சி கிழக்கு மீனவர் சங்க பிரதிநிதிகளுக்கு படையினர் உறுதி அளித்திருந்தனர்.

இராணுவத்தினரால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாக, சுண்டிக்குளம் பகுதிலேயே வாடி அமைத்து தென்பகுதி மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இராணுவத்தினர் இவர்களுக்குரிய பாதுகாப்பை வழங்கி அவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணையிருப்பதாக இந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (த-5)

**வீடு வாடகைக்கு**

யாழ். கச்சேரி (G.A office) இக்கு மிக மிக அருகில் மூன்று அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரச / வங்கி உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. (போதியளவு வாகனங்களுக்கு தரிப்பிட வசதி உண்டு)

**தொடர்பு:071 340 9466** (37784)(10.6)

## காற்றாடிப் படகில் மன்னாருக்கு வந்தனர் 4 சுவிஸ் நாட்டவர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரி எஸ். யசோதன் தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த குறித்த 4 பேரும் இந்தியாவுக்குச் சென்றிருந்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அவர்கள் இந்தியாவின் தனுஷ்கோடி கடற்கரையிலிருந்து 'கைட் போட்' என அழைக்கப்படும் காற்றாடிப் படகை பயன்படுத்தி தலைமன்னாரை நோக்கித் தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

இவர்களுடைய கடல் மார்க்கமான பயணத்துக்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியிருந்தது. குறித்த 4 பேரும் இலங்கைக் கடல் எல்லைக்கு வந்தவுடன் தலைமன்னார் கடற்படையினர் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினர். நண்பகல் 12.30 மணியளவில் தலைமன்னார் கடற்கரையை இவர்கள் வந்தடைந்தனர். இவர்கள் தலைமன்னாருக்கு வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் 'எலிமன்ஸ்' அமைப்பின் முகாமையாளர் ஜெரோன் பெர்னாண்டஸ் மேற்கொண்டிருந்தார். இவர்களுடைய வருகையைப் பதிவு செய்யவும் விசாரணையை மேற்கொள்ளவும் குடிவரவு குடியல்வு திணைக்கள அதிகாரி எஸ். யசோதன், சுங்கத் திணைக்கள அதிகாரிகளான என்.எஸ். குமாறநாயக்க, என். வீரசிங்க ஆகியோர் தலைமன்னார் கடற்கரைக்குச் சமூகமளித்திருந்தனர். (த-400)

## கார் மீது பொலிஸ் சூடு இருவர் காயம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கெப்பிற்றிக்கொலாவப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவருவதாவது:-

கெப்பிற்றிக்கொலாவயில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த கார் ஒன்று அப்பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. எனினும் கார் நிறுத்தாமல் சென்றதை அவதானித்த பொலிஸார் 6ஆவது மைல் கல்லிலுள்ள பொலிஸ் காவலரணுக்குத் தகவலை வழங்கினர். இதனை அடுத்து 6ஆவது மைல் கல் காவலரணில் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸார் குறித்த காரை நிறுத்துமாறு சைகை செய்தனர். எனினும் கார்ச் சாரதி நிறுத்தாமல் காரைச் செலுத்தியுள்ளார். இதனையடுத்தே குறித்த கார் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் காரில் இருந்த இருவர் படுகாயமடைந்ததுடன் இருவர் தப்பியோடியுள்ளனர். எனினும் பொலிஸார் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

காயமடைந்த இருவரும் வவுனியா போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தேரர் ஒருவரின் காரே இவர்களால் கடத்திவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. (த-400)

## புத்தர் சிலையை நிறுவுவதற்கு மட்டக்களப்பில் கடும் எதிர்ப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம்' போன்ற வசனங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் அங்கு திரண்டிருந்த பொதுமக்களிடம் உரையாற்றியபோது நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கூறிய தாவது:-

விகாராதிபதி எடுத்திருக்கின்ற இந்த முடிவு மட்டக்களப்பிலே காலம்காலமாக இன ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்ற எல்லோரையும் மீண்டும் ஒரு குழப்பத்துக்குத் தள்ளுவதோடு இப்பொழுது இருக்கின்ற சமாதானத்தையும் சீர்குலைக்கும்.

இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளோம்.

கடந்த காலங்களில் தொடர்ந்து நிம்மதியற்ற வாழ்க்கைக்கு முகங்கொடுத்த மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு மங்களராமயவின் விகாராதிபதி அம்பட்டிய ஸ்ரீ சுமணரத்ன தேரர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்துவதாகவே உள்ளது.

படையினரும், பொலிஸாரும் இங்கு நிலைகொண்டிருந்த காலத்தில் ஏற்கனவே இங்கு நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையை வணங்குவதற்கு ஒரு தனிநபர் கூட இல்லாதபோது மேலும் ஒரு பிரமாண்டமான புத்தர் சிலை இந்த மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் எதற்காக அமைக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே இருக்கின்ற புத்தர் சிலைகள் எதனையும் அகற்றச் சொல்லி நாங்கள் ஒருபோதும் கூச்சல் போடமாட்டோம்.

புத்தர் சிலை பிள்ளையார்அடியில் நிறுவப்படமாட்டாது; அதற்குரிய நிகழ்வு நடைபெறமாட்டாது; என்னை நம்புங்கள்; நீங்கள் மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுங்கள் என்று பிரிகேடியர் திலகரட்ண என்னிடம் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டார்.

எனவே அவர் தந்த உறுதிமொழியை நம்பி ஆர்ப்பாட்டத்தை விட்டு கலைந்து செல்கிறோம். ஆனால் எமது கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படும் வரை போராட்டம் ஓயாது.- என்றார். (ச)



**CIMA@MCS**

New Batches Commence on **1st June 2013**

Certificate Level Operational Level Managerial Level

- Successful Pass record
- Syllabuses are covered on time
- Revision Classes
- More than 5 years past papers discussion & Mock Exams

CIMA UK Reg 15000 Rs off only for first 10 registrations

0772 395 895 MCS 324,Palay Road Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.